

எண்டமூரி வீரேந்திரநாத்

# இரும்பு மனிதன்

தமிழில்: சுசீலா கனகதுர்கா

# இரும்பு மனிதன்

எண்டமூரி வீரேந்திரநாத்

சுசீலா கனகதுர்கா

# பதிப்புரை

*அறிவியல் மிகவும் வேகமாக வளர்ந்து வருகின்ற காலம் இது. நொடிக்கு நொடி வியப்பான பல கருவிகளை விஞ்ஞானிகள் உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.*

*சில ஆண்டுகளுக்கு முன்னர் கற்பனை கூடச் செய்திருக்க முடியாத பல அற்புதங்களை இன்று பல இயந்திர சக்திகள் நம் கண்ணெதிரேயே நிகழ்த்திக் கொண்டிருக்கின்றன. இவற்றின் பயன்பாடுகளால் மனித சக்தியும் தீவிரமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது, மனித வாழ்வும் வியப்பாக மாறிக்கொண்டிருக்கின்றது.*

*என்றாலும், இவை அனைத்தையும் உருவாக்கியது மனித மூளையின் சக்திதான்! இன்னமும் அதிசயக் கருவிகளை நாளுக்கு நாள் உருவாக்கவிருப்பதும் மனித மூளையின் சக்திதான் இதை எவரும் மறுக்க முடியாது.*

*கி.பி. இரண்டு லட்சம் ஆண்டுகள் வரும் போது மனித அறிவு எத்தகைய நிலையில் வளர்ந்திருக்கும்? அவர்கள் எப்படி எல்லாம் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்? அவர்களுடைய மனோசக்தியோடு நம் இந்நாளைய மனித மனோசக்தி போட்டி போட முடியுமா? அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் என்னென்ன எல்லாம் ஏற்படும்?*

இந்தச் சிந்தனைகளின் பின்னணியில் மிகவும் சிறப்பாக உருவாகியிருக்கின்றது இந்த இரும்பு மனிதன் என்னும் சிந்தனையைத் தூண்டும் சிறந்த நாவல்!

அனைவரும் படித்துச் சிந்தித்து வியந்து மகிழ வேண்டிய அருமையான சிந்தனைப் படைப்பு இது. இதனை வெளியிட்டுத் தமிழ் வாசகர்களுக்கு அளிக்கக் கிடைத்த வாய்ப்பிற்கு நாங்கள் பெரிதும் மகிழ்கின் றோம்.

இதனை மிகவும் அறிவியல் நுட்பத்துடனும், கற்பனை வளத்துடனும் அமைத்து வழங்கும் ஆசிரியர் சுசீலா கனகதுர்கா அவர்களுக்கு எங்கள் நன்றி உரியதா கும்.

பதிப்பகத்தார்

# *1*

*கோதண்டபாணிக்கு ஆச்சரியம் தாளவில்லை.*

*தான் எங்கே இருக்கிறோம்?*

*இது தன் வீடுதானா?*

*தன் மனிதர்கள் எல்லோரும் என்னவானார்கள்?*

*இரைந்து மனைவியைக் கூப்பிட்டார். பதி லில்லை, இன்னும் பெரிதாய் கூப்பாடு போட்டுப் பார்த்த போதும் ஒருவருமே வரவில்லை.*

*சுற்றிலும் நோட்டமிட்டார். அறை வினோத மாய்க் காட்சியளித்தது.*

*மெதுவாய் எழுந்து நின்றார். எழுந்ததுமே அறை யின் மேற்கூரை எம்பி மேலே பறக்கத் தொடங்கினாற் போலிருந்தது. கையை நீட்டி மேற்கூரையைப் பிடிக்கத் தாவினார். அதுவோ இன்னும் மேல்நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.*

*எதிரே பார்த்தார். எதிரே சுவர் தெரிந்தது, கையை நீட்டிய பொழுது அதுவும் எட்டுவது போலத் தான் இருந்தது. ஆனால் ஓரடி முன்னோக்கி நகர்ந்த துமே சுவரும் தொலைவிற்கு ஒதுங்கிப் போய்க் கொண் டிருந்ததால் கைக்கு எட்டவில்லை. கையை நீட்டித் தாவிப் பிடிக்கப் போன பொழுது அது கைக்கு அகப் படாமல் மேலும் பின்னுக்குப் போகத் தொடங்கிற்று.*

*அவசரமாய் இரண்டடிகள் முன்னோக்கி வைத் தார் கோதண்டபாணி. எத்தனை வேகமாய் அடி*

யெடுத்து வைத்த போதும் சுவரானது அதை விட வேகமாய் பின்னோக்கி நகர்ந்தது.

கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தார். விழித் துக் கொண்டுதான் இருக்கிறார். பின்னே இஃதென்னது? சுவர் பின்னுக்குப் போவதாவது!

தன்னைச் சுற்றிலும் நான்கு பக்கங்களிலுமிருந்த சுவர்களும், தொடப் போனபொழுது அவ்வாறே என்னைத் தொடாதே, என்று போக்குக் காட்டுவது போலப் பின்னோக்கி போய்க் கொண்டிருந்ததைக் கண்டார்.

அங்கேயே நின்றவாறு அச் சுவர்களை உற்றுப் பார்த்தார். சுவர்களின் நிறம் வினோதமாயிருந்தது. உருக்கி வார்த்த தங்கத்தைப் போல ஜெகஜோதியாய் சுடரிட்டது அச்சுவர்களின் நிறம். ஆனால் அது தங்கம் இல்லை. ஏதோ வினோதமான நிறம். என்ன நிறம் என்றும் புரியவில்லை.

அறை முழுவதும் வாசனை வந்து வீசிற்று. மல்லி, சம்பங்கி, தாழை கலந்த சுகந்தம்! இல்லை, ஏதோ வினோதமான வாசனை! அறையில் எங்குமே விளக்கு வெளிச்சத்தைக் காணோம். ஆயினும் அறை முழுவதும் ஜெகஜோதியாய் சுடரிட்டுக் கொண்டிருந்தது.

மேலும் பத்தடி முன்னோக்கி வைத்தார். சுவர் அசையவில்லை. சுவர் மிக அருகாமையில் இருந்தாற் போலிருக்கவே தொடப்பேரனார்.

"வேண்டாம்."

*பின்னாலிருந்து யாரோ எச்சரித்தது போலிருந்தது. பின்னால் திரும்பிப் பார்த்தார். ஒருவரையும் காணோம்! பின்னே எங்கேயிருந்து வந்தது அந்தக் குரல்? சுவரில் ஏதேனும் ஒலிப்பெருக்கியைப் போன்ற சாதனம் இருக்குமோ? சுவரைக் கவனமாய் கூர்ந்து கவனித்தார். அந்த மாதிரி எதுவும் இருந்ததாய்த் தோன்றவில்லை.*

*கட்டிலைப் பார்த்தார். அது கட்டிலைப் போல இல்லை. ஏதோ சிமென்ட் தூணைப்போல இருந்தது. சிமென்ட்டாயிருந்தால் படுத்த பொழுது அத்தனை மிருதுவாகவும் சுகமாகவும் எப்படி இருந்திருக்கும்*

*படுக்கை போட்டிருந்த கட்டிலிலிருந்து சுவர் வரையிலுமுள்ள தூரம் அதிகமாய்ப் போனால் இருபத டிதான் இருக்கும். ஆனால் படுக்கை மட்டும் கைக் கெட்டுவது போலவே இருந்தது.*

*படுக்கையை நோக்கி நடந்த பொழுது அதுவும் பின்னுக்கு நகர்ந்து கொண்டிருந்தது. ஆனால் என்ன விந்தை! அவர் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும், சுமார் நூறடி தூரத்திற்கு ஐநூறடி தூரமாய் அடி யெடுத்து வைத்தது போலவன்றோ தோன்றுகிறது!*

*இதென்ன வேடிக்கை!*

*இது பூமண்டலந்தானா? பூமியில் ஓரடி எடுத்து வைத்தால் சந்திர மண்டலத்தில் ஆறடி எடுத்து வைப் பதற்கு சமமாம்! சந்திரனின் புவியீர்ப்புச் சக்தி பூமியின் புவியீர்ப்புச் சக்தியில் ஆறில் ஒரு பாகந்தான் என்று படித்திருந்தது நினைவுக்கு வந்தது. அது போலத்தான்*

*இந்த இடத்துப் புவியீர்ப்புச் சக்தியும் பூமியின் புவியீர்ப்பு சக்தியில் நூறில் ஒரு பாகந்தான் இருக்கும் போலிருக்கே!*

*அப்படியானால் பூமியின் மேல் ஐந்தடி உயரத் துக்குத் தாவும் மனிதன் இங்கே நூறடி உயரத்துக்குத் தாவுவானா?*

*ஆனால் அவரால் இரண்டு மூன்றடி உயரத்துக்கு மேல் அதிகமாய் தாவ முடியவில்லை*

*கோதண்டபாணிக்கு பயம் ஏற்பட்டது. ஏதோ வினோதமான உணர்ச்சி! ஆச்சரியம்!*

*தான் எங்கே இருக்கிறோம்!*

*வலது பக்க சுவரில் ஜன்னல் இருந்தது. இரண்டடி ஜன்னலை நோக்கி நடக்கப் போனார். மறுபடியும் அதே மாதிரி! சுவரோடு சேர்ந்து ஜன்னலும் பின்னுக்கு நகர்ந்து கொண்டிருந்தது!*

*சரியாய் இருபதடி எடுத்து வைத்த பொழுது சுவர் நின்று விட்டாற் போலிருந்தது.*

*மற்றொரு அடி எடுத்து வைத்தார் அவர். சுவர் அசைய வில்லை. அதாவது சுவர் ஏறக்குறைய தனக் கெதிரிலேயே இருந்ததென்று விளங்கிற்று. அந்தக் கணக்குப் படி பார்த்தால் இரு சுவர்களுக்குமிடை யேயுள்ள தூரம் சுமார் நாற்பதடி இருக்கலாம். அந்த நாற்பதடி தூரத்தை நடந்து பார்த்தால் தெரிந்து விடுகிறது! நடக்காமல் நின்ற படி பார்த்தால் இரண்டு*

*சுவர்களும் அவருக்கு இரு பக்கத்திலும் இருந்தாற் போலிருந்தன.*

*அந்த ஆச்சரியத்தைப் பற்றி அவரால் அதற்கு மேல் யோசிக்க முடியவில்லை. ஜன்னல் வழியே பார்க்க வேண்டும். எதிரே ஜன்னலிலிருந்து ஆகாயம் வெள்ளையாய் தெரிந்தது. மேகங்கள் அதிகமாய் இல்லை. மெதுவாய் ஜன்னலை அணுகினார் அவர். சுவரைத் தொடாமலேயே ஜன்னல் வழியே பார்த்தார்.*

*வெள்ளையாய்த் தெரிந்த ஆகாயம் இருட்டாகி விட்டது. மையை விட கருப்பாகி விட்டது. அதில் மணல் திட்டுக்களைப் போல நட்சத்திரங்கள் மின்னி, அவை மினுக் மினுக்கென்று பளிச்சிடவில்லை. அவை நட்சத்திரங்கள் தானா? அல்லது சின்னச் சின்ன பல்புகளா?*

*அந்த நட்சத்திரங்களுக்கு நடுவில் பெரிய பிம்பம் ஒன்று தென்பட்டது. சூரியன் போலல்லவா இருந்தது!*

*இதென்னது? சூரியனை வெறும் கண்ணுடன் பார்க்கிறோமே உண்மையில் சூரியன்தானா அது?*

*ஜன்னல் வழியாய் கீழே பார்த்தார்.*

*ஓ காட்! தான் பூமியின் மேல் இல்லை! தான் இருந்த அறை நிலத்தில் இல்லை. வேறு ஏதோ கிரகத் தில் இருந்தது. அங்கிருந்து பூமி எங்கோ அதல பாதாளத்தில் இருக்கலாம்! தான் இருந்த கிரகத்தில் தரையில் செடி கொடிகள் ஒன்றையும் காணோம். ஆகா யத்தில் நீளமாய் நீட்டிக் கொண்டு பல நூற்றுக்*

*கணக்கான மாடிகளுடைய கட்டிடங்கள் வேறு! கூர்ந்து கவனமாய்ப் பார்த்தால் அவை மிக உயரத்தில் இருப் பதாய்த் தெரியவில்லை. கீழே தெருக்கள் இருந்தன. அவையும் வெள்ளியோ அல்லது வேறு ஏதோ உலோ கத்தாலோ ஆனது போல் பளபளத்தன. தொலைவில் பூமியும் ஆகாயமும் சேர்ந்த தொடுவானம் பயங் கரமாய்த் தோன்றிற்று கீழே தரையெல்லாம் பள பளத்துக் கொண்டிருக்கையில் வானம் மட்டும் கருத் துக் கிடந்தது. அதில் மணலை வாரியிறைத்தது போல நட்சத்திரங்கள் மின்னின. ஆகாயம் நீலநிறத்தில் இருக்க வேண்டும். ஆனால் இதெப்படி காரிருளில் இருந்த தென்று தான் புரியவில்லை. சூரியனிலிருந்து வெளி வந்த கிரணங்கள் ஏழுவித நிறம் கலந்தவை! அவை ஊதா, நீலம், கிளிப்பச்சை, மஞ்சள் ஆரஞ்சு, சிவப்பு, கத்திரிப் பூ நிறங்கள்! சூழ்நிலையானது எஞ்சிய எல்லா நிறங்களையும் வடிகட்டி விட்டு ஒரே ஒரு நீலநிறத்தை மட்டும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. அதனால் தான் பூமியில் பார்த்தால் வானமானது நீல நிறமாய் கண்ணுக்குப் புலப்படுகிறது என்று எங்கோ படித்த நினைவு! ஆனால், இங்கே ஆகாயமானது கருப்பு நிறத் தில் தென்பட்டதென்றால், சூழ்நிலையே இங்கே இல்லை என்றுதானே பொருள்? சூழ்நிலை இல்லா விட்டால் தான் எப்படி மூச்சுவிட முடிகிறது!*

*எல்லாம் மாயமாய் தோன்றிற்று அங்கே! கோதண்டபாணி அங்கிருந்து திரும்பி மறுபக்கத்து*

சுவரை நோக்கி நடந்தார். நாற்பதடி தூரம் அடி யெடுத்து வைத்ததும் பின்னுக்குப் போய்க் கொண் டிருந்த சுவர் நின்றுவிட்டது. இப்பொழுது அந்த அறை அவருக்குக் கொஞ்சம் பழக்கப் பட்டு விட்டது. அதா வது நாற்பதடி தூரம் அடியெடுத்து வைக்க வைக்க சுவ ரானது நகராமல் நின்று விடும் போலும்!

கண்களால் பார்த்தால் அத்தனை தூரம் தெரிய வில்லை. நடந்து பார்த்தால்தான் தெரிந்தது. இது அவருக்கு மிகவும் வேடிக்கையாயிருந்தது.

மறு பக்கத்து ஜன்னல் வழியாய் வெளியே பார்த்த பொழுது, வானம் கருமையாய்த் தெரிந்தாலும் நட்சத் திரங்களோடு சேர்ந்து வளையம் வளையமாய் எம்பிப் போய்க் கொண்டிருந்த வெளிச்ச வட்டங்களும், சிதறிச் சின்னா பின்னமாய் ஓடிக் கொண்டிருந்த நெருப்புப் பொறிகளும், பெரிய பெரிய எரிமலையைப்போல உடைந்து சிதறிக் கொண்டிருந்த புஸ்வாணங்களைப் போன்றவைகளும், விர்ரென்று நட்சத்திரங்களைத் துளைத்துக் கொண்டு ஓடிய வால் நட்சத்திரங்களும், மிக அண்மையிலேயே போய்க் கொண்டிருந்த கிரகங் களும், பல்வேறு நிற நட்சத்திரங்களும் தென்பட்டன.

ஆங்கிலப் படங்களில் பெரிய ராக்கெட்டுகள் போவது போலக் காட்டும் பொழுது இப்படித்தான் இருக்கும்.

கோதண்டபாணி கீழே பார்த்தார். பூமியைக் காணவில்லை. கீழேயும் நட்சத்திரங்களும் பெரிய பெரிய கோளங்களும் கிரகங்களும் தென்பட்டன.

வலது பக்கத்துச் சுவரைப் பார்த்தார் கோதண் டபாணி. அச் சுவரிலும் ஒரு ஜன்னலிலிருந்தது. அதன் வழியே பார்த்தால் ஒன்றுமே தென்படவில்லை. ஆகா யம் முழுவதும் காரிருள்! வெளியே ஒன்றுமே இல்லை போலிருந்தது.

வெளியே நீட்டிப்பார்த்தார். பனிக் கட்டியைத் தாக்கினாற் போலிருந்தது. கை மரத்துவிட்டது. கட்டை யாகி விட்டது கை, நரம்புகள் அசையவில்லை. பக்க வாதம் வந்து விட்டதா என்ன? இனி தன் இடதுகை போனது போனதுதானா? அழுகை வரத் தொடங்கிற்று கோதண்டபாணிக்கு.

வலது கையால் இடது கையை மெதுவாய்த் தடவிக் கொடுத்தார். சூடு ஏற்பட்டது. அந்தச் சூட்டில் இடது கைக்கு உணர்வு வரத் தொடங்கிற்று. கொஞ்ச நேரத்தில், பழைய நிலைக்கு வந்தது.

இதென்னது? வெளியே இருட்டில் ஒன்றுமே கிடையாதா? சூன்யமா? வெளியே அத்தனை குளிராய் இருந்தபோது அறைக்குள் மட்டும் எப்படி சாதாரண மாய் இருக்கும்!

அறையில் ஹீட்டரோ எதுவுமே கிடையாது! நான்காம் சுவரைப் பார்த்த போது அங்கு ஏதோ

ஒட்டையாய்த் தெரிந்தது. இருபதடி எடுத்து வைத்து அதனை அணுகினார் கோதண்டபாணி.

## *2*

கிட்டே போன பொழுது அது நீண்ட வாசல் வழியாய்த் தென்பட்டது

வெளியே போகப் பயமாயிருந்தது சற்று முன் நேர்ந்தாற் போல மரத்துப் போய் விட்டால் என்ன செய்வது? மெதுவாய் வாசலை நெருங்கினார். கிட்டே போன பொழுது வெளியிலிருந்து வெளிச்சம் வருவது தென்பட்டது.

முன்னோக்கி அடியெடுத்து வைக்க வைக்க அவ் வெளிச்சம் அதிகரித்தது.

மேலும் மூன்றடிகள் எடுத்து வைத்த பொழுது, அதிர்ந்து போய் அப்படியே நின்றுவிட்டார் அவர்!

எதிரே வீதி தென்பட்டது!

முன்பு அந்த அறை ஜன்னல் வழியாய் பார்த்த பொழுது எங்கோ ஆயிரம் அடிகளுக்கப்பால் இருந் தாற் போலத் தென்பட்டது அந்த வீதி. ஆனால் இப் பொழுதோ அது அத்தனை கிட்டத்தில் அல்லவா இருக்கிறது! அதுவும் கீழ்த் தனமாய் இருந்தது வேறு!

பயந்தவாறு முன்னோக்கி அடியெடுத்து வைத் தார்.

குளிர் இல்லை. சாதாரணமாகத்தான் இருந்தது.

*ஆகாயத்தை ஏறிட்டுப் பார்த்தார். சூரியனும் மேகங்களுமே இருந்தன. ஆனால் தெருவில் கண்ணுக் கெட்டிய தூரம் வரையிலும் வீடுகளே இல்லை! அந்த வீதி தார் ரோடாகவோ, சிமெண்ட் வீதியாகவோ இல்லை. கண்ணாடியை உருக்கி வார்த்தது போலப் பள பளவென்று மின்னிற்று. காற்று உல்லாசமாய் வீசிற்று. தெருவில் ஜன சஞ்ஞாரமே இல்லை. வீடுகளும் கிடையாது. பாலைவனத்தைப் போன்ற இந்த மாதிரி ஒரிடத்தில் இந்த மாய வீட்டைக் கட்டியிருக் கிறார்களா என்?*

*இந்தக் காலத்தில் இதெல்லாம் சாத்தியந்தானா?*

*சுவர்கள் நகருவதாவது? தொலைவில் இருப்பது ஏன் தெரியவில்லை? ஆனால் தெருமட்டும் சாதாரண மாய்த் தெரிகிறதே! கீழே தரையில் இருந்ததால் அத் தெரு அந்த மாதிரி தென்படுகிறதா?*

*பின்னே அக் கட்டிடத்தைக் கூட தரையின் மீது தானே கட்டியிருப்பார்கள்?*

*திரும்பிப் பார்த்தார்.*

*ஆச்சரியம்!*

*அக் கட்டிடத்திலிருந்து தானே இப்பொழுது வெளியே வந்தார்? கட்டிடம் சின்னஞ் சிறிய பெட்டி யைப் போலத் தெரிகிறதே! இதென்ன வேடிக்கை!*

*கட்டிடத்தை நோக்கி ஒரடி முன்னோக்கி வைத்தார். கட்டிடம் பத்தடி உயரத்திற்கு வளர்ந்தது. மற்றொரு அடியெடுத்து வைத்த பொழுது அது நூறடி*

உயரத்தில் நின்றது. இன்னொரு அடி எடுத்து வைத்த பொழுது எதிரே பெட்டி உயரமுள்ள கட்டிடத்தின் வாசல் தென்பட்டது. கட்டிடமோ ஆகாயத்தை அளவளாவிக் கொண்டிருந்தது போல ஓங்கி நின்றது!

நிமிர்ந்து அண்ணர்ந்து பார்த்த பொழுது தெரிய வில்லை! கொஞ்சம் விஞ்ஞான அறிவு இருந்ததால், அதை உபயோகித்துக் காரணத்தை உணர முயன்றார் கோதண்டபாணி.

பூமத்திய ரேகைக்கருகில் பூமியின் பரப்பு ஏழா யிரத்துத் தொளாயிரத்து இருபத்தாறு மைல்கள்! பூமி யின் மேற்பரப்பு உருண்டையாயிருப்பதால் நூறு மைல் தூரத்திலிருக்கும் உயரமான மலைகள் நூறடி தூரத் திலிருந்தாலும் கூடத் தென்படாது. அம்மலையை கிட்டே நெருங்க நெருங்கத்தான் அதன் உயரம் தென் படும்.

ஒருக்கால் இக்கட்டிடம் அத்தனை சிறிய பரப் பளவுள்ள ஏதேனும் கிரகத்தில் கட்டியிருக்கும் கட்டி டமா?

அது நடக்காதது!

கட்டிடத்திற்கு வெளியே தெருவானது நீளமாய்த் தெரிகிறது. ரோடு கிடக்கட்டும். அத்தனை சிறிய பரப் பளவுள்ள கிரகத்தின்மேல் புவியீர்ப்புக் சக்தி எவ்வளவு இருந்திருக்கப் போகிறது. ஒன்றுமே இருக்காது! அதா வது அந்த கிரகத்தின் மேல் ஏறி நின்ற படி பலமாய் தும்மினாலும் கூட அத் தும்மலின் சக்தி அளிக்கும்

ஆட்டத்தால் மனிதன் அந்தக் கிரகத்தை விட்டு நிரந் தரமாய் வானவெளிக்குப் பறந்து போய் விடுவான்!

அத்துடன் அத்தனை சிறிய கிரகத்தில் பிராண வாயுவும் இருக்கமுடியாது. ஆனால் தான் எவ்வாறு மூச்சு விடமுடிகிறது? அதாவது தன் கார்பன் டை ஆக் ஸைடு சக்தியால் புவியீர்ப்புச் சக்தியைத் தாக்குப் பிடித் துக் கொண்டிருக்கும் ஏதேனும் ஒரு கிரகத்தின் மேல் தான் நின்று கொண்டிருக்கிறோம்.

ஆனால் கிட்டே நெருங்க நெருங்கப் பொருட்கள் பெரிதாவதும், பின்னுக்குப் போகப் போக பொருட்கள் வெகு தொலைவிற்குப் போவதும் ஏன்? இது அவருக் குத் தெரியாத விஞ்ஞானம்! இது எந்த மாதிரி இடம் என்றும் புரியவில்லை! வாசல் வழியாய் உள்ளே போனார். இருபதடி எடுத்து வைத்ததும் கட்டிலும் படுக்கையும் தென்பட்டன.

உட்கார்ந்து தலையைப் பிடித்துக் கொண்டார். எதற்கும் நல்லதென்று துணிந்து சுற்றிலும் பார்த்துக் கத்தினார்.

"இங்கே யாராவது இருக்கீங்களா..? யாராவது இருக்கீங்களா?"

பின்னாலிருந்து ஏதோ சந்தடி கேட்டது. விருட் டென்று திரும்பிப் பார்த்தார் கோதண்டபாணி.

யாரையும் காணோம்,

"கூப்பிட்டாயா தாத்தா?" பின்னாலிருந்து குரல் கேட்டது.

*திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்.*

*சுவருக்குள்ளேயிருந்து மனித உருவில் புகை மண் டலம் வெளி வந்து எதிரே நின்றது!*

*இதயமே நின்று விடும் போலிருந்தது. சுவருக்குள் ளிருந்து வெளி வருவதா? மனித உருவில் புகை மண் டலமா? பிசாசா என்ன?*

*"இல்லை தாத்தா."*

*மேலும் திடுக்கிட்டார். தன் மனதில் எண்ணியது இந்தப் புகைமண்டல உயிருக்கு எப்படித் தெரிந்தது?*

*புகைமண்டலம் சிரித்தாற் போலிருந்தது.*

*"யா.. யா.. ரு.. நீ?"*

*படுக்கையை விட்டு எழுந்து ஓரடி எடுத்து வைத் தார்.*

*"பயப்படாதே தாத்தா."*

*பிசாசைப் போலச் சுவருக்குள்ளிருந்து வெளி வந்ததுமில்லாமல் பயப்படாதே என்று வேறு சொல்லு கிறதே, பயப்படாமல் எப்படி தைரியமாய் இருப்பது?*

*"யார்.. யார் நீ?"*

*"என் பெயர் சிங்காரம்" புகைமண்டலம் பேசிற்று.*

*"சிங்காரமோ கிங்காரமோ! இதென்ன வேஷ மப்பா? என்னைப் பயமுறுத்தாமல் சொல்லு"*

*"என் உருவமே அந்த மாதிரித்தான் தாத்தா நான் உங்களுக்கு எந்த தீங்கும் பண்ணமாட்டேன்"*

"தீங்கு பண்ணுவாய் அல்லது பண்ண மாட் டாய்ன்னு எனக்கு எப்படித் தெரியும்? கொஞ்சம் எட் டவே நில்லு"

"எட்டத்தான் இருக்கேன் தாத்தா ரொம்ப தொலைவில் நிற்கிறேன். உங்களிடமிருந்து சில ஆயிரக் கணக்கான கிலோ மீட்டர்களுக்குத் தொலைவில் இருக்கேன்."

"என்னது? பல ஆயிரம் கிலோ மீட்டர் தொலை விலா? பின்னே எனக்கு எதிராய் வந்து எப்படித் தென்படுகிறாய்?"

"பிரம்மை! நான் இங்கே இருக்கிறேன். ஆனால் இல்லை. என் சொரூபம் மட்டுமே உங்கள் கண்ணுக்குத் தெரிகிறது."

"சொரூபம் தென்படுகிறதா?" கோதண்டபாணிக்கு அழுகை வரத்தொடங்கிற்று. பயத்தால் நடுநடுங்கினார்.

"பயப்படத் தேவையில்லை தாத்தா."

"நான்.. நான் பயப்படறேன்னு உனக்கெப்படித் தெரியும்!"

"பயப்படுகிறாய் தாத்தா."

"இல்லை." அவர் கத்தலைக் கேட்டு அவரே பயந் தார். அந்தப் புகை மண்டலம் சிரித்தாற் போலிருந்தது.

"பயப்படுகிறாய் தாத்தா நீங்க பயந்தால் அந்த பயத்தின் பிரபாவம் எனக்குத் தெரிந்து விடும்.

"பயத்தின் பிரபாவமா? அதெப்படித் தெரியும் உனக்கு" கொஞ்சம் துணிந்து கேட்டார்.

"அப்புறமாய்ச் சொல்றேன்."

"அப்புறம்னால் எப்போ? முதலில் இதென்ன உலகம்னு சொல்லு நான் எங்கே இருக்கிறேன்? என் வீடு எங்கே? என் மனைவி குழந்தைகள் எங்கே? எங்க மனுஷர்கள் எல்லோரும் எங்கே?"

"எல்லோரும் இருக்காங்க தாத்தா!"

"எங்கே? எங்கே? காட்டு. போயிடறேன்."

"போகலாம். முதலில் கொஞ்சம் என் கேள்வி களுக்குத் தெளிவான பதிலைச் சொல்லுங்க தாத்தா."

"என்னால் முடியாது, முடியாது" பெரிதாய்க் கத்தினார் அவர். அந்தக் கத்தலுக்கு அந்தப் புகைப் பிசாசு தன் மேல் விழுந்து பிராண்டித் தின்று விட்டால் என்ன செய்வது? அழும் குரலில் கெஞ்சத் தொடங் கினார்.

"தம்பி! புகைமண்டலத்திலிருக்கும் சிங்காரத் தம்பி! உனக்குக் கும்பிடு போடறேன். நான் மனைவி குழந்தை குட்டிகளோடு இருக்கிறவன். என் பெரிய பெண்ணுக்குக் கல்யாணம் கூட நிச்சயம் பண்ணிட் டோம்: அந்த மாதிரி சாதாரணமான ஒரு ஆள் நான்! என்னை இந்த மாதிரி ஒரு பாலைவனத்துக்கு இட்டு வந்து இம்சை பண்றது அழகா? என்னை அனுப்பி வைத்துடுப்பா அடுத்த பிறவியில் உன் வயிற்றில் வந்துப் பிறக்கிறேம்ப்பா."

சிங்காரம் சிரித்தாற் போலிருந்தது.

"சரி தாத்தா, அனுப்பிடறேன். ஆனால் நீங்க என் அதிதி நூறு வருஷத்திற்கொரு முறை உங்களைப் போன்ற அதிதி ஒருவர் இருவரை வரவேற்போம். இதுவரை இரண்டாயிரம் பேரை அந்த மாதிரி வர வேற்றிருக்கிறோம். அவங்க எல்லோருடனும் பேசி விட்டு உங்களை அனுப்பி வைத்துடறேன்."

என்ன சொல்கிறான் இவன்? நூறாண்டுகளுக்கு ஒரிருவர் வீதம், இரண்டாயிரம் பேரை வரவேற்றிருந் தால் இரண்டு மூன்று லட்சம் ஆண்டுகளா?

புகை மண்டலத்தை பயந்து நோக்கினார்.

அவன் சிரித்தான்.

"ஏம்பா சிருக்கிறே?"

"உங்க சந்தேகத்துக்குத்தான்!"

"என் சந்தேகம் என்ன?"

"ரெண்டு மூன்று லட்சம் வருஷம்னுதானே நினைக்கறீங்க? கரெக்ட்! நீங்க இப்போ இருந்துண்டி ருக்கிற வருஷத்துக்குச் சுமார் இரண்டு லட்சம் வருஷத் துக்கு அப்புறமாய் வந்தவங்க."

"இரண்டு லட்சம் ஆண்டுகளா?"

"ஆமாம் தாத்தா நீங்க இப்போ எந்த வருஷத்தில் இருக்கீங்க?"

"1984"

"ஆனால் இது இரண்டு லட்சம் ஆண்டு!"

"என்ன?" புரியாமல் கேட்டார் கோதண்டபாணி.

"*ஆமாம் தாத்தா **1984**-க்கப்புறம் சுமார் இரண்டு லட்சம் ஆண்டுகளுக்குப் பிறகு! இன்னும் திட்டவட்ட மாய் சொல்லணும்னால் இன்றைக்குத் தேதி **31-12-199,999***"

"*என்னது? இன்றைக்குத் தேதி **31-12-199,999** ஆ*" *கோதண்டபாணிக்கு மயக்கம் வருவது போலிருந்தது. தான் வாழ்ந்து கொண்டிருப்பது **1984**ம் வருடமா யிருக்கும் போது, இவனோ இது **199,999**-ம் வருஷம் என்கிறானே! இதெப்படி சாத்தியக் கூறு? **1984** லிருந்து ஒரேயடியாய் இரண்டு லட்சம் ஆண்டுகளைத் தாண்டி வர எப்படி முடியும்? தான் காண்பது கனவா? நினைவா? பிரம்மையா?*

"*கனவில்லை, பிரம்மையில்லை, நிஜந்தான் தாத்தா.*"

*புகை மண்டலத்திலிருந்த அவ்வுருவத்தை உற்றுப் பார்த்தார் கோதண்டபாணி. எதிரே மனிதன் உருவில் இருந்தான் அவன். ஆனால் பல மைல்கள் தொலைவில் இருந்தாற் போலிருந்தது. தான் மனதில் எண்ணியது இதற்கெப்படித் தெரிகிறது? உண்மையில் இது ஆனா பெண்ணா?*

"*ஆண்தான் தாத்தா.*"

*திரும்பவும் தன் மனதிலிருப்பதை எப்படியோ தெரிந்து கொண்டு விடுகிறதே! இனி மனதில் எதையும் நினைக்கக் கூடாது.*

*அவன் சிரித்தாற் போலிருந்தது. அவனைத் தொடப் போனார் அவர். சுவரைப் போலவே அவனும் நழுவிக் கொண்டிருந்தான். நடக்கவில்லை, எம்ப வில்லை, ஓடவுமில்லை. ஆனால் நழுவிப் போய்க் கொண்டிருந்தான் அந்தச் சுவரைப் போலவே!*

*இருபதடி நடந்தால் சுவர் நின்றது. அதுபோலவே இவனும் இருபதடி போய் நின்றால் நிற்பானா? மளமள வென்று இருபதடி எடுத்து வைத்தார்.*

*தலையில் ஏதோ மிருதுவாய் பட்டது போலிருந் தது.*

*விழித்துப் பார்த்தார் சுவர்! ஆனால் அவனே ஓரடி தூரத்தில் சுவருக்குள்ளிருந்து தென்பட்டுக் கொண் டிருந்தான்.*

*"என்னைப் பிடிக்க முயற்சி பண்ணாதே தாத்தா."*

*அவருக்குக் கோபம் வந்தது.*

*"தாத்தாவாம் தாத்தா என் மகனுக்கோ மக ளுக்கோ இன்னும் கல்யாணமே ஆகலை."*

*"ஆமாம் தாத்தா! 1984-ல் ஆகலை. ஆனால் 1986-ல் செய்தாய். 1988-ல் தாத்தாவானாய்."*

*"என்னப்பா சொல்ற நீ"*

*"இப்ப உனக்குச் சொன்னாலும் புரியாது. இப்ப உனக்கு என்ன வேணுமோ சொல்லு"*

*"என் தலை தான் வேணும்."*

*"கோபித்துக்காதே தாத்தா. இங்கே கோபம்னால் என்னவென்றே ஒருத்தருக்கும் தெரியாது."*

"இங்கே அங்கே அப்படீன்னு சொல்லிண்டே இருக்காயே, இதென்ன இடம்? அதை முதலில் சொல்லு."

"வருஷப் பிரகாரம் பார்த்தால் 31-12-199,999-ல் இருக்கிறாய் நீ! இடமா இது உன் வீடேதான்."

"என் வீடா இது? என் மனைவி குழந்தைகள் எங்கே? சாமான்கள் எங்கே?"

"எல்லோரும் இருக்காங்க தாத்தா."

"எங்கே"

"அவங்க 1984-ல் இருக்காங்க."

"என்னைக் குழப்பாதே."

"நிஜமாய்த்தான் தாத்தா. அவங்க 1984-ல்தான் இருக்காங்க. வேணும்னால் கூப்பிட்டுப் பாரு."

"யாரைக் கூப்பிடுவது?"

"உனக்கு யாரைக் கூப்பிடணும் போலிருக்கோ அவங்களையே கூப்பிடு."

"என் மனைவியைக் கூப்பிட்டால் வருவாளா?"

### 3

"என் வரமாட்டாங்க? கூப்பிடு."

அவனைச் சந்தேகத்துடன் பார்த்து விட்டு தன் மனைவியை இரைந்து கூப்பிட்டார் கோதண்டபாணி.

"சூர்ய முகி"

*பக்கத்து சுவரில் கோதண்டபாணியின் மனைவி தென்பட்டாள். அது சமையலறை. அவர்கள் வீட்டுச் சமையலறைதான்! அவர் மனைவி சமைத்துக் கொண் டிருந்தாள். ஆச்சரியமடைந்தவராய்ப் பார்த்தார் அவர்.*

"*என்னடா தம்பி இது?*"

"*பாட்டியைத்தானே கூப்பிட்டாய்?*"

"*டேய் பாட்டி கீட்டின்னு சொன்னால் பல்லைத் தட்டிக் கொடுத்துடுவேன் ஜாக்கிரதை! எனக்கே இப்பத் தான் நாற்பத்தைந்து வயசாறது.*"

"*சரி தாத்தா, முதல்ல அவங்களோடு பேசு.*"

*மனைவியோடு பேச விரும்பிச் சுவரைப் பார்த்தார் அவர். சந்தேகம் ஏற்பட்டது. இதுவரையிலும் அது சுவராய் இருந்தது. இப்பொழுது மாறிப் போய் தன் வீட்டு சமையலறையாவதாவது!*

*சரி. இந்த சந்தேகத்தை அப்புறம் தீர்த்துக்கலாம்.*

*முதலில் மனைவியை அழைப்போம்.*

*மனைவி சூர்யமுகிக்கு ஒரு நல்ல குணம் உண்டு. சமைத்துக் கொண்டிருக்கும் பொழுது பாட்டை முணு முணுத்துக் கொண்டேதான் சமைப்பாள்.*

"*அப்பப்பா! என் உயிர் போறது. டேய் மது! உங்க அப்பா எழுந்துட்டாரான்னு பாருடா*" *என்று தண்டகத்தைத் தொடங்கினாள்.*

*கோதண்டபாணி திரும்பவும் சிங்காரத்தைப் பார்த்தார்.*

"*பேசுங்க தாத்தா.*"

"என்னப்பா பேசறது?" சிங்காரத்தைச் சந்தேகத்துடன் பார்த்தார்.

மனைவி அவரைப் பார்த்தாள்.

"என்னங்க? என்னப்பா பேசறதுன்னு யாரைப் பார்த்துக் கேட்கிறீங்க?" என்று கேட்டாள் சூர்யமுகி.

அவர் சமையலறை தென்பட்ட சுவரைப் பார்த்தார்.

"என்னங்க, அப்படிப் பார்க்கறீங்க? முகம் கழுவினீங்களா?"

"அவங்க உன்னையே கேட்கிறாங்க தாத்தா." பக்கத்திலிருந்த சிங்காரம் சொன்னான்.

அவர் சிங்காரத்தைத் திரும்பிப் பார்த்தார்.

"என்னங்க? யாரோடு பேசறீங்கன்னு கேட்டால் அந்தப் பக்கமாய்ப் பார்க்கறீங்களே? அங்கே யார் இருக்காங்க?" என்று அந்தப் பக்கமாய்த் திரும்பிப் பார்த்தாள் அவள்.

பக்கத்து வீட்டுச் செளந்தரம்மாவின் குளியலறை அவர்கள் வீட்டுச் சமையலறையிலிருந்து நன்றாய்த் தெரியும். அவள் வீட்டு பாத்ரூமுக்கு ஜன்னல் இருந்தது. ஆனால் ஜன்னலுக்குக் கதவுகள் தான் கிடையாது. அவளுக்குக் கணவன் இருந்தான். ஆனால், குழந்தைகள் கிடையாது.

அதனால் அவள் கணவனைத் திட்டித் தீர்த்துக் கொண்டும் கடவுளைத் துதி பாடிக் கொண்டும், அந்தக் கதவில்லாத ஜன்னலுக்கருகில் நின்றபடி மணிக்

கணக்காய்க் குளிர்ந்த நீரில் குளித்துக் கொண்டிருப் பாள். அவர் இந்த வினோத அறையில் தனக்கருகில் நின்று கொண்டிருந்த சிங்காரத்தைப் பார்த்துக் கொண் டிருந்த பொழுது, சூர்ய முகிக்குச் சௌந்தரம்மாவின் வீட்டுக் காட்சித் தென்பட்டிருக்கிறது.

"சீ சீ சீ. இத்தனை வயசாகியும் புத்தி இல்லை உங்களுக்கு" அவள் கத்தினாள்.

"நான் என்ன பண்ணினேன்?" கலவரப் பட்டார் கோதண்டபாணி இங்கிருந்தவாறே.

"என்ன பண்ணினேன்னு என்னையே கேட்கிறீங் களா? அவளுக்குத்தான் புத்தியில்லைன்னால் நீங்களும் இந்த மாதிரி திருட்டுத்தனமாய் அங்கேயே பார்க்க ணுமா?" என்று சட்டென்று ஓடிப் போய்ச் சமை யலறைக் கதவை ஓங்கிச் சாத்தினாள்.

"என்ன சொல்றே நீ? நான் எங்கே இருக்கேன்? எதைப் பார்த்துண்டிருக்கேன்னு நினைக்கிறே?"

"தாத்தா, நீ எங்கே இருக்கேன்னோ, என்ன பண்ணிண்டிருக்கேள்னோ அவங்களுக்குத் தெரியாது. அந்தப் பக்கத்து வீட்டு சௌந்தரம்மா குளித்துண்டிருக் காங்க.." என்று சொல்லிச் சிரித்தான் சிங்காரம்.

"நீ எப்படிப் பார்த்தாய் அதை"

"பார்க்கத் தேவையில்லை. எங்களுக்கு எல்லாம் தெரியும்."

"தெரியுமா? எப்படி?"

"தெரியும்! முதல்ல அவங்களோடு பேசு தாத்தா."

"அப்பப்பா! என்னங்க? யாரோடு பேசறீங்க?"

சூர்யமுகி எட்டிப் பார்த்தாள்.

சூர்யமுகிக்கு ஒருவரையும் கண்ணில் படவில்லை போலும்! "ஏங்க, விழித்துண்டுதானே இருக்கீங்க?" என்று கேட்டாள்.

"விழித்துண்டேதான் இருக்கேன். ஏதோ கண்ணை மூடிண்டு வினோதமான உலகத்தோடு பேசிண்டிருக் கேன். அது சரி. என்ன பண்ணிண்டிருக்கிறாய்?"

"டான்ஸ் ஆடறேன்."

சிங்காரம் பக்கென்று சிரித்தான். கோதண்டபாணி அவனைப் பார்த்தார்.

"என்னடா நீ ஒண்ணு!"

சூர்யமுகி அருகில் வந்தாள். சுற்றுமுற்றும் பார்த் தாள்.

"ஏங்க, யாரைப் பார்த்துக் கத்தினீங்க?"

"சிங்காரத்தைப் பார்த்து."

"அது யார் சிங்காரம்?"

"யாரோ ஒருத்தன்! அது சரி நாளைக்குப் பெண் பார்க்க வராங்களோனோ?"

"அவங்களா? நீங்க பார்த்துக் கொண்டாந்த சம்பந்தந்தானே?"

"ஆமாம்."

"ரொம்ப பெரிய சம்பந்தம் கொண்டாந்தீங்க! அந்தப் பையனின் தாய் தந்தையரின் குலம் என்னன்னு தெரிஞ்சுதான் அந்த சம்பந்தத்தைப் பேசினீங்களா?"

"என்? என்னவாச்க?"

"அந்தப் பையனின் தங்கை யாரோடேயோ ஓடிட்டாளாம்."

"சிவ சிவ"

"நடுவில் சிவனை என் இழுக்கிறீங்க? அந்தச் சனியன் பிடித்த சம்பந்தம் நமக்கு வேண்டியதில்லை."

"ஆனால்.."

"ஏன்? உங்களுக்குப் பிடித்துப் போயிடுத்தா"

"சீ சீ! என்னை அத்தனை நீசமானவன்னா நினைத் தாய்? உயிரே போனாலும் பரவாயில்லை, ஒப்புக் குவேன், ஆனால் குலம் மட்டும் கெட்டதுன்னால் ஒப் புக்கவே மாட்டேன். சரி. டிபன் என்ன பண்ணி யிருக்கே?"

"தோசை.. இதோ இந்த பிளேட்டை வாங்கிக் குங்க" என்று உள்ளேயிருந்து ஒரு பிளேட்டைக் கொண்டு வந்து நீட்டினாள்.

ஆனால் அவர் கைக்குச் சுவர்தான் தட்டுப்பட் டது. பிளேட்டை வாங்கிக்க முடியவில்லை அவரால். சூரியமுகியின் கையிலிருந்த தட்டு தடாலென்று கீழே விழுந்தது தோசையோடு.

"ஐயோ, பிளேட்டைக் கீழே போட்டுட்டீங்களே! தோசையெல்லாம் தரையில் விழுந்துடுத்தே! ஐயோ ராமா! மறுபடியும் உங்களுக்கு கிட்டப் பார்வை வந்துட்டால் குதிக்கத் தொடங்கிடுவீங்களே! இனியும் சும்மா இருந்தால் லாபமில்லை. நானே உங்களைக் கண்

டாக்டரிடம் இழுத்துண்டு போறேன். டே மது இங்கே வந்து இந்த பிளேட்டை எடுடா." என்று கத்தினாள் சூர்யமுகி.

சுவரிலிருந்து சமையலறை மாயமாயிற்று.

கோதண்டபாணி ஆச்சரியம் மேலிட்டவராய் சிங் காரத்தை நோக்கினார்.

"அவளைக் காணோமே?" கேட்டார்.

"நான்தான் நிறுத்திட்டேன்."

சிங்காரத்துடன் பரிச்சயமாகி விட்டதால், பயம் போய்விட்டது. தைரியம் வந்தது.

"டேய் சிங்காரம் எத்தனை நன்றாய் என் மனைவியை இந்தச் சுவரில் சினிமாவைப் போலக் காட்டினாய்! எப்படி முடிந்தது உனக்கு?"

"ரொம்ப சிம்பிள்! தாத்தா. உனக்கு ஏதாவது வேணும்னு நினைத்தால் உடனேயே உன் மூளையில் காந்த சக்தி மிகுந்த மின்சார அலைகள் வெளிப்படும். அவற்றை அந்தச் சுவர் ஊகித்து விடும். ஊகித்தவற்றை அந்தச் சுவரானது சித்திரமாய்க் காட்டும்."

"வேடிக்கையாய் இருக்கே! டேய் சிங்காரம், ஒரு சின்னச் சந்தேகம்! எனக்கு ஏதாவது ஒரு சாமான் தேவைன்னு நினைத்துண்டேன்னு வை, எப்படிக் கிடைக்கும் அது?"

"அதுவே உன் கைக்கு வந்து சேரும்."

"எப்படி? இப்போ என் மனைவி அந்தப் பக்கத்திலேயிருந்து பிளேட்டை நீட்டிய போது கீழே

விழுந்துடுத்தே! பின்னே சுவரிலிருந்து எப்படிக் கிடைக் கும் அந்தப் பொருள் எனக்கு?"

"சுவரிலேருந்து வராது தாத்தா! உனக்கு ஏதாவது பொருள் வேணும்னு நினைத்தால் உடனே அந்தப் பொருளின் படம் சுவரில் விழும். அது என் கையில் வரணும்னு நீ நினைத்துக் கொள். நினைத்த மாத் திரத்தில் அந்தப் பொருளை சுவரே நீட்டும்."

"வேடிக்கையாய் இருக்கு. அப்படின்னால் எனக்கு இப்போ ஒரு சிகரெட் வேணும்னு இருக்கு, அது கிடைக்குமா?"

"கண்டிப்பாய், நினைத்துக் கொள்."

கோதண்டபாணி கண்களை மூடிக்கொண்டார். அக் காலத்தில் ரிஷிகளும் முனிவர்களும் இவ்வாறுதான் தியானித்துத் தமக்கு வேண்டியதைப் பெறுவார்களாம். இதுவும் அதுபோலவேதானோ?

"எனக்கு ஒரு சிகரெட் வேண்டும்."

சுவரில் ஏதோ எழுத்துக்களும், நம்பரும் தென் பட்டன.

சிங்காரத்தைப் பார்த்துப் புரியாமல் விழித்தார்.

"சிகரெட் வேணும்னு கேட்டால் அதென்னடா நம்பரும் எழுத்தும்?"

"சிகரெட் கேட்டதால் அந்த சிகரெட் என்ன சிகரெட், எப்படித் தயாராகிறது என்பதை எடுத்துச் சொல்கிறது முதலில்."

"ஏன், உங்களுக்கு சிகெரெட்டைப் பற்றித் தெரியாதா?''

"தெரியாது தாத்தா."

"நீங்க யாருமே சிகரெட் புகைக்க மாட்டீங்களா?"

"சிகரெட்டைப் புகைப்பதா? எதுக்கு"

"உன் தலை! சிகரெட்டை ஒன்றுந் தோன்றாத போது எடுத்துப் புகைப்பாங்கடா."

"அப்படியா?"

"டேய் சிங்காரம், இது சிகரெட்டை எப்படித் தயார் செய்கிறதுன்னு எடுத்துச் சொல்லும்னாய்! அப்படின்னால் இப்போ அதைப் பார்த்துட்டு சிகரெட்டைத் தயாரித்துத் தரப்போறாயா எனக்கு?"

"தேவையில்லை தாத்தா! அதுவே தயாரிக்கும்."

"எப்படி?"

"முதல்ல சிகரெட்டைப் பற்றிச் சொல்லும். அப்புறம் என்னென்ன சாமான்களை எப்படி சிகரெட்டில் கலக்கிறார்கள் என்றுக் காட்டி விட்டு, அப்படியே அதைத் தயாரித்தும் தந்து விடும். அதோ பார் தயாராகி வந்துடுத்து.. எடுத்துக் கொள்" என்று திரையைக் காட்டினான்.

திரையில் சிகரெட் தென்பட்டது.

மெதுவாய் கையை நீட்டினார் கோதண்டபாணி. சிகெரெட் கையில் வந்து விழுந்தது. எடுத்து முகர்ந்து பார்த்தார்.

கம்மென்று நல்ல வாசனை அடித்தது!

"டேய் சிங்காரம் நெருப்பு இருக்காடா?"

"இருக்கு தாத்தா" என்று. யாரையோ "ரோபட்" என்று அழைத்தான்.

சிங்காரத்தைப் போலவே இருந்த இன்னொருத் தன் வந்தான். ஆங்கிலப் படங்களில் காட்டப்படும் இரும்பு மனிதனைப் போலிருந்தான் அவன். புகை மண்டலமாய் அவன் நிறம் வெளிர் நீலமாயிருந்தது. கிட்டே போனால் இவனும் நழுவிப் போய்விடு வானோ?

கிட்டே போனார் கோதண்டபாணி. அவன் நகர வில்லை.

மேலும் கிட்டத்தில் போய் தொட்டுப் பார்த்தார். இரும்பு மனிதன்! உடம்பையெல்லாம் தடவிப் பார்த் தார். கெட்டியாய் இரும்பைப் போலிருந்தான்.

"அவன் இரும்பு மனிதன் தாத்தா."

"பின்னே நீ?"

"உணர்ச்சிக் கலவை நான்."

"எனக்கு ஒன்றுமே புரியலை. புரியும்படி சொல் லேன்."

"தாத்தா, மனிதனின் மூளையில் மூவாயிரம் கோடி உயிர்க்கணங்கள் இருக்குன்னு தெரியுமா."

"ஆமாம், படித்த ஞாபகம்" என்றார் கோதண்ட பாணி. தான் படித்த பி. காம். படிப்பின் அறிவை வெளிக் காட்டியவாறு.

"மனிதனுக்குப் பதினெட்டாண்டுகள் வந்து விட்டால், நாளொன்றுக்கு ஆயிரம் ஜீவகணங்களாய் அழிந்து போகத் தொடங்கி விடுகின்றன. அதாவது மனிதனின் ஜீவகணங்கள் எல்லாம் முற்றிலும் அழிந்து போவதற்கு எண்பதாயிரம் வருஷங்கள் பிடிக்கிறது. அவற்றை வீணாக்கிக்காமல் ஜாக்கிரதையாய்ப் பயன் படுத்திண்டால் மூளை சுமார் ஒரு லட்சம் ஆண்டுகள் பிழைத்திருக்கும்."

கோதண்டபாணிக்குச் சிரிப்பு வந்தது.

"டேய், சிங்காரம் மனிதன் நூறாண்டுகள் பிழைத் திருப்பான்னு வைச்சுக்கோ.. ஆனால் லட்சம் ஆண்டு கள் பிழைத்திருப்பதனால் என்ன பிரயோஜனம்?"

"மனிதனின் தேகம் பயன்படாமல் போகலாம். ஆனால் மூளை உபயோகப்படுமே"

"அப்படின்னால், மனிதன் இறந்த பிறகு அவனு டைய மூளையை உயிர்ப்பித்து வைப்பீங்களா?"

"ஆமாம்"

"எப்படி?"

"என் மூளையின் வயது இருபத்தைந்தாயிரம் ஆண்டுகள்."

"என்ன?"

"ஆமாம் தாத்தா! நிஜந்தான்."

"உன் மூளை வயதா? நீயோ புகைமண்டலமாய் இருக்கே. உனக்கு மூளை கூட உண்டா?"

"நான் உனக்குப் புகைமண்டலமாய் கண்ணுக்குத் தென்பட்டாலும் என் மூளை வேறிடத்தில் இருக்கு! இங்கிருந்து இரண்டாயிரம் கிலோமீட்டர் தொலைவில் ஒரு கட்டிடம் இருக்கு. அதில்தான் என் மூளை இருக்கிறது. உனக்கு ஏதாவது உதவி வேணும் என்றால், அங்குள்ள என் மூளை உணர்ச்சியலைகளை அனுப்பும். அந்த உணர்ச்சியலைகள் மனித உருவில், இதோ இந்த விதத்தில் புகைமண்டல உருவில் உனக்கு முன்னால் தோன்றும், அதுதான் நீ என்னைப் பிடிக்க வந்தாலும் உனக்கு நான் அகப்படமாட்டேன். அதனால்தான் நான் என்னை உணர்ச்சிக் கலவை உருவம் என்றேன்."

கோதண்டபாணிக்கு ஆச்சரியம் தாளவில்லை. தலையைப் பிய்த்துக் கொண்டார்.

"சரி சிங்காரம்! இன்னொரு சந்தேகம். இவ்வளவு நேரமாய் பார்த்துண்டேதானிருக்கே. நான் மனதில் நினைக்கிறதை உடனே எப்படித் தெரிந்துக்க முடிகிறது உன்னால்?"

"மனதில் ஏதாவது நினைத்துண்டாய்னு வெச் சுக்கோ. உடனே உன் மூளையில் மின்சாரமும் ரசாயனக் கலவையும் தோன்றுகிறது. அந்த மின்சாரம் எங்கள் மூளையைத் தூண்டுகிறது. அதனால் நீ என்ன நினைக்கிறாய்ன்னு உடனே தெரிந்து கொண்டு விடு கிறாம்."

"அதெப்படி? உன் மூளைக்கும் என் மூளைக்கும் ஏதாவது ஒயர்கள் இருக்கா?"

"உங்க காலத்தில்.. உங்க ரேடியோவையே எடுத்துக்கோ தாத்தா, எங்கோ மதுரையில் ரேடியோ ஸ்டேஷனில் யாரோ பேசறாங்க. அந்த ஒலி அலைகளை மின் அலைகளாய் மாற்றி விடுகிறது ரேடியோ ட்ரான்ஸ்மிட்டர்! அந்த மின் அலைகள் ஒரே நம்பர் அலையாய் பிரகாசமாகிறது. அதை உங்க ரேடியோவிலிருக்கும் ரிசீவர் வாங்கிக் கொண்டு ஓசையாய் மாற்றி விடுகிறது. அதுபோல் தான் எங்க விஷயமும். நீங்க பேசாமல் யோசித்தாலும் உங்க ஆலோசனைகளை மின் அலைகளாய் மாற்றி விடுகிறது உங்க மூளை! அந்த மின் அலைகளை எங்க மூளை வாங்கிக் கொண்டு நீங்க என்ன நினைக்கிறீங்கன்னு தெரிவித்து விடுகிறது."

## 4

"டேய் சிங்காரம் இந்த மாதிரி ஒருவர் மனதிலிருப்பதை இன்னொருத்தர் கண்டு பிடித்துட்டால் அப்புறமாய் ரகசியமே இல்லாமல் போயிடுமே?" கேட்டார் கோதண்டபாணி.

"இங்கே ஒருத்தருக்கும் ரகசியமே கிடையாது தாத்தா."

"என்ன? ஒருத்தருக்குமே எந்த ரகசியமுமே கிடையாதா?"

"கிடையாது! முதல்ல எதுக்காக அந்த மாதிரி ரகசியமாய் யோசிக்கணும்? எதிரிலிருப்பவங்களுக்குத்

தெரியக் கூடாதுன்னு தானே? எதிரிலிருப்பவங் களுக்குத் தெரியக் கூடாதுன்னு ரகசியமாய் அந்த மாதிரி யோசித்தால் ஒருத்தர் மற்றவரை மோசடி பண்ணுவது போலத்தானே அது! அந்த மாதிரி மோசடி யும் பாவமும் இங்கே யாரிடமும் கிடையாது."

"ஒருக்கால் யாராவது அப்படிப் பண்ணினால்?"

" உடனே மாஸ்டர் மூளைக்குத் தெரிந்துடும்."

"மாஸ்டர் மூளையா? எங்கேயிருக்கு?"

"சமுத்திரத்திற்கு கீழே ஒரு கட்டிடம் இருக்கு. அதில் இருக்கு."

எல்லாம் மாயையாய்த் தோன்றிற்று கோதண்ட பாணிக்கு. ரோபட்டின் பக்கம் பார்த்தார்.

"சிங்காரம், உன்னை உணர்ச்சிக் கலவைன்னு சொன்னாய். அப்படீன்னால் இவன் யார்?" கேட்டார்.

"இது இயந்திரம் தாத்தா! உங்க காலத்தில் இதை மின்சார இயந்திரத்தின் உதவியால் இயக்கினீங்க. நாங்க இதை மூளையின் உதவியால் இயக்குகிறோம்."

"அப்படின்னா?" புரியாமல் கேட்டார்.

"உங்க காலத்தைப் போலத்தான் இப்பொழுதும் மனிதன் நூறாண்டுகள் வாழ்கிறான். ஆனால் உங்க காலத்தில் மனிதன் இறந்து விட்டால் அவன் பிணத்தை எரித்தோ அல்லது புதைத்தோ விடுகிறீர்கள். ஆனால் நாங்களோ மனிதனின் எல்லாப் பகுதியையும் எரித்துட மாட்டோம். சிறுநீர்க் குழாய்கள், இதயம், மூளை இவற்றை எடுத்து பத்திரப்படுத்தி வைப்போம்."

"ஏன்?"

"நூறாண்டுகளில் மனிதனின் மூளை எவ்வளவோ கற்றுணர்ந்திருக்கும்! அத்தனை அறிவுள்ள மூளையைத் தூக்கி எறிந்து விடுவதா? அதை ஜாக்கிரதையாய் எடுத்துச் சில ரசாயனக் கலவையில் வைத்து உயிரோடிருப்பது போலவே பண்ணுவோம். அந்த மூளை கட்டளையிடுவது போலவே வேலைகளைப் பண்ணுவோம்"

"அப்படீன்னால், நீயும் இந்த ரோபட்டும் ஒரே மாதிரி தான் வேலை பண்ணுவீங்களா?"

"இல்லை. எனக்கு பூத உடல் இல்லை. அவசரமாய் கோடானுகோடி மைல்களுக்கப்பாலிருக்கும் நட்சத்திர மண்டலத்துக்குப் போகனும்னு வை. என்னால் முடியும்."

"எவ்வளவு வேகமாய் உன்னால் போக முடியும்?"

"ஒரு விநாடிக்கு கோடிக் கோடிக் கோடிக் கோடக் கோடி மைல்கள்! ஆனால் நாங்க அத்தனை வேகமாய் போனாலும் எங்களுக்கு ஸ்தூலசரீரம் இல்லாததால் அங்குள்ள பருவ சூழ்நிலைகளை எங்களால் எடுத்துச் சொல்ல முடியும்.. அங்குள்ளவர்களுடன் பேச முடியும். ஆனால் எதையும் கையிலெடுத்துக்க முடியாது. இந்த ரோபட்டைச் சில உலோகங்களால் படைத்திருக்கிறோம். எத்தனை ஆயிரம் டிகிரி உஷ்ண நிலை வந்தாலும் இதனை ஒன்றும் பண்ணாது. இதனை

வேறு கிரகங்களுக்கு அனுப்பி வைத்து வேலை வாங்கு கிறோம்."

"இவை தாமே வேலை பண்ணுமா?"

"இல்லை, பூமிக்கடியில் உள்ள கட்டிடத்தில் ஒரு இறந்து விட்ட மேதாவியின் மூளை இருக்கிறது. அந்த மூளை எப்படிச் சொல்றதோ அந்த மாதிரிப் பண்ணும் இது."

"அப்படின்னால் தானே யோசிக்காதா?" என்று கேட்டார் கோதண்டபாணி.

"ஏன் யோசிக்காது? நீ இந்த ரோபர்ட்டுடன் பேசினால் உடனே அந்த மேதாவி மூளைக்கு எட்டி விடும். அந்த மூளைதான் இவன் மூலமாய் உனக்குப் பதிலளிக்கும்."

"அப்படின்னால் இந்த உலோக மனிதனுக்குக் கண்ணு, காது, மூக்கு?"

"எல்லாம் மனிதனைப் போலவே உண்டு. ஆனால் மூச்சு விடாது. சாப்பாடு தேவையில்லை."

கோதண்டபாணிக்கு வியப்பாய் இருந்தது. ரோபர்ட்டைப் பார்த்தார். அவன் சிலையாய் நின்று கொண்டிருந்தான்.

"டேய் சிங்காரம்! இங்கே எல்லோருமே உன்னை மாதிரியும் இவனை மாதிரியுமே இருந்தால் உயிரோடிருக்கும் மனுஷங்களே கிடையாதா?"

"ஏனில்லை தாத்தா? ரொம்பப் பேர் இருக்காங்க! உன் சொந்த வம்சத்தில் தோன்றிய பேரன் ஒருத்தன் தான், இந்த ஆறாவது தேசத்தின் அதிகாரி."

"என் சொந்தப் பேரனா? என் மகனோ மகளோ.."

கோதண்டபாணி முடிப்பதற்குள் சிங்காரம் இடைமறித்து, "கல்யாணம் ஆகலைதான்! அது ஆகாதது 1984-ல்! உங்க வம்சத்துப் பேரன்னால்.. உங்களுக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு உங்க வம்சத்தில் தோன்றியவன்னு அர்த்தம்."

"இரண்டாயிரம் ஆண்டுக்குப் பிறகா? எங்கே அவன்?"

"அவன் ஆகாசத்தில் இருக்கிறான்."

"ஆகாசத்திலா?" ஆச்சரியத்துடன் கேட்டார்.

"ஆமாம், காட்டறேன் வா. என்று சிங்காரம் வெளியே போனான்.

கோதண்டபாணியும் வெளியே வந்தார். அவன் ஆகாசத்தைச் சுட்டிக் காட்டினான். மேல் வானத்தில் சூரியன் தென்பட்டான்.

"அது சூரியனில்லையா?"

"இல்லை தாத்தா! அது ஒரு சூழ்ச்சி உபகிரகம்! இங்கிருந்து.. அதாவது இந்தப் பூமியிலிருந்து இருபத்து ரெண்டாயிரத்து நானூற்று முப்பத்தேழு மைல் உயரத் தில் ஆகாயத்தில் ஒரே இடத்தில் நிரந்தரமாய் நிற்பது போல் ஏற்பாடு பண்ணியிருக்காங்க! பூமிக்கு அத்தனை உயரத்தில் எந்த உபகிரகத்தை விட்டாலும் சரி அது

அப்படியே பூமியுடன் ஒரே இடத்தில் ஸ்திரமாய் இருந்து விடும். இரவு நேரங்களில் சூரியக் கிரணங் களை சந்திரனைப் போலவே பூமிக்குப் பரப்புகிறது இது. இப்பொழுது இரவு நேரம், ஆனால் பட்டப் பகலாய்த் தோன்றுவதற்கு அந்த உபகிரகம் தான் காரணம்."

"அதில் யார் இருக்காங்க?"

"பெரிய பெரிய விஞ்ஞானிகள் எல்லோரும் அங்கே தான் இருப்பாங்க! எல்லோரும் உயிரோடிருப் பவங்க தான்."

"என்ன பண்ணுவாங்க அவங்க?"

"அண்டவெளியிலிருக்கும் சுமார் ஒரு லட்சம் கிரகங்களுக்கு மனிதர்களை அனுப்பிண்டிருப்பாங்க! எந்தெந்த கிரகங்களில் யார் யார் என்னென்ன பண்றாங்கன்னு சோதித்துண்டிருப்பாங்க! அவங்களுக்கு இங்கிருந்தே ஆர்டர்களை அனுப்புவோம்."

"இது 199,999-ம் வருஷம்னு சொன்னாய்! இப்போ எங்க பூமியில் மனுஷங்க எவ்வளவு பேர் இருக்காங்க?"

"இரண்டு கோடிப் பேர்."

"என்ன? அவ்வளவு குறைவாகவா? 1984-ல் உலக ஜனத்தொகை நானூறு கோடி ஜனங்கள் ஆயிற்றே"

"இப்பவும் சுமார் அத்தனை பேர்தான் தாத்தா? ஆனால் எல்லோரும் பூமி கிரகத்தில் இல்லை. லட்சம் கிரகங்களுக்கு மனுஷங்களை அனுப்புறாங்கன்னு

சொன்னேனில்லையா? எஞ்சியவங்க எல்லோரும் அந்தக் கிரகங்களில் இருக்காங்க"

அப்பொழுது ரோபர்ட்டின் இதயத்திலிருந்து மணி அடித்த ஓசை கேட்டது. கோதண்டபாணி அவனைப் பார்த்தார்.

"தாத்தா, நாங்க போயிட்டு வரோம்."

"எங்கேடா?"

"இரண்டு நிமிஷங்கள் ரெஸ்ட் எடுத்துக்கணும்னு மேலிருந்து உத்தரவு வந்திருக்கு"

"உங்களுக்கு ரெஸ்ட் எதுக்குடா? ஒருவனோ உலோகத்தாலானவன். இன்னொருத்தனுக்கோ உரு வமே கிடையாது. "

"எனக்கு உருவமில்லாவிட்டாலும் அவன் உலோ கத்தாலானவனாயிருந்தாலும் எங்களை நடத்திச் செல்வது மனித மூளை தானே தாத்தா! அந்த மூளைக் குத் தினமும் இரண்டு நிமிஷங்கள் ஓய்வு தரனும், மூளை ரெஸ்ட் எடுத்துண்டால் எங்களால் ஒன்றுமே பண்ண முடியாதே! இன்றைக்கு இருபத்து மூன்று மணி நேரம் ஐம்பது நிமிஷமாய் வேலை பண்ணிண்டிருக் கிறோம்.."

"இருபத்து மூன்று மணி ஐம்பது நிமிஷமாய் வேலை பண்ணிண்டிருக்கீங்களா? டேய், இங்கே லேபர் சட்டம் கிடையாதா?"

"எதுக்கு லேபர் சட்டம்? இங்க முதலாளிங்க கிடையாது. தொழிலாளிங்களும் கிடையாது. எல்லோரும் சமம்."

"உங்களுக்கானால் சாப்பாடு வேண்டாம். ஆனால் மனுஷங்களுக்குச் சம்பளமும் சாப்பாடும் வேண்டாமா?"

"யாருக்குமே சம்பளமில்லை, சாப்பாடும்இல்லை."

"மனுஷங்களுக்குமா?"

"ஆம்.."

"சாப்பாடில்லா விட்டால் மனுஷங்க சாக மாட்டாங்களா?"

"சப்பாடுங்கறதெல்லாம் உங்க 1984-ம் காலத்தில், இங்கே மனுஷங்களுக்கு மின்சாரக் கட்டணந் தான்உண்டு."

"மின்சாரக் கட்டணமா? பேஷ். உங்க வேலை நன்றாய்த் தான் இருக்கு! எங்களைச் சொல்லு, கஷ்டப் பட்டு உழைத்தாலும் எண்னூறு கூட வராது. அதிலேயே குழந்தை குட்டிகளையும் மனைவியையும் போஷிக்கனும், கல்யாணங்கள் பண்ணனும்."

இன்னொரு முறை மணியடித்தது.

"தாத்தா, போயிட்டு வரோம்." என்று மாயமாகி விட்டான் சிங்காரம். ரோபர்ட்டும் படு வேகத்தில் எங்கோ போய்விட்டான்.

கோதண்டபாணி தனித்து விடப்பட்டார். ஒன்றும் புரியாமல் சட்டைப் பையைத் தடவிக் கொண்டார்.

சிகரெட் தட்டுப்பட்டது. எடுத்து உதட்டில் வைத்துக் கொண்டார். ஆனால் நெருப்புப் பெட்டியைக் காணோமே! அவங்களை அந்த கலாட்டாவில் நெருப் புப் பெட்டி கேட்காமல் போயிட்டோமே!

மெதுவாய்ச் சுவரைப் பார்த்தார். மனதில் என்ன எண்ணினாலும் அந்தச் சுவர் காமதேனுவாய் அளிக் கும்னு சொன்னானே சிங்காரம் மெதுவாய்ச் சுவரை அனுகினார்.

"சுவரே! சுவரே! நெருப்பு பெட்டி வேணும்."

சுவரில் ஏதோ எழுத்தும் எண்ணும் ஓடின. ஒருக் கால் நெருப்புப் பெட்டியைத் தான் தயாரித்துக் கொண்டிருக்கிறதோ என்னவோ?

வினாடி நேரத்தில் சுவரிலிருந்து நெருப்புப் பெட்டி வந்தது. நெருப்புப் பெட்டியை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டே யோசிக்கத் தொடங்கினார்.

"உண்மையில் இதென்ன கவர்? இதன் மகிமை எப்படிப்பட்டது?"

படுக்கையில் படுத்தபடியே நான்கு 'தம்' களை இழுத்து உறிஞ்சினார்.

ஆனால் அவர் அறியவில்லை, அந்த சிகரெட் புகைக்கு அவர் இருந்த அக் கட்டிடமும், கட்டிலும் அவருக்கே தெரியாமல் மெல்ல மெல்லக் கருகி ஆவியாகிக் கொண்டிருந்தனவென்று!

*சிகரெட்டை முழுவதும் குடித்து முடித்து விட்டுச் சுற்றிலும் நோட்டமிட்டார். சுவர்களைக் காணோம். கட்டிலையும் காணோம். சுற்றிலும் ஒன்றையுமே காணோம். எல்லாம் பாலைவனமாயிருந்தது. அவர் இத யமே நின்றுவிடும் போலிருந்தது.*

*இப்பொழுது எங்கே போவது? எப்படிப் போவது? ஏதோ விந்தையான பாலைவனத்தில் அன்றோ வீற்றிருந்தார் அவர்! தலையைப் பிடித்துக் கொண்டு அழத் தொடங்கினார் கோதண்டபாணி.*

*5*

*சுற்றிலும் பார்த்தார் கோதண்டபாணி. கண்ணுக் கெட்டிய தூரம் எங்கேயும் வீடுகளைக் காணோம். இந்த கிரகத்தில் எல்லாமே வேடிக்கையாய்த்தான் இருந்தன. கிட்டத்தில் போனால்தான் தென்படும். ஒருகால் இங்கேயே அருகில் ஏதாவது வீடுகள் இருந் தாலும் இருக்கலாம். கொஞ்சம் நடந்து போய்ப் பார்த்தால் தென்படலாம்.*

*இரண்டடி எடுத்து வைத்தார்.*

*எதிரே சிங்காரம் நின்று கொண்டிருந்தான்.*

*அவனைக் கட்டிக் கொண்டு ஓவென்று அலற வேண்டும் போலிருந்தது அவருக்கு. அவனை அவ்வாறு கட்டிக்க அவன் மனிதனாய் இருந்தாலன்றோ முடியும்! உணர்ச்சிக் கலவையின் உருவமாம் அவன்! பாழும்*

உருவம் இந்த மாதிரி மாயலோகத்திற்கு என்னை எதற்காக அழைத்து வரணுமோ?

"எங்கே தாத்தா போறே?"

"எங்கேடா போய்த் தொலைவேன் சனியனே! சுடுகாட்டுக்குத்தான் போய்ச் சேரணும்! என் மனதி லிருக்கும் செய்திகள் தெரிந்துடும்னு சொன்னாயே! தெரிந்து கிழித்துண்ட லட்சணத்தைப் பார்..

அவன் சிரித்தான்.

"ஏண்டா சிரிக்கிறே" கத்தினார் அவர்.

"பின்னே என்ன பண்ணச் சொல்றீங்க."

"கட்டிடம்.. கட்டிடம் மாயமாயிடுத்துடா" என்றார் மெதுவாய்.

"ஆமாம்.'"

"அதான், எப்படி மாயமாச்சு?"

"நீ சிகரெட் குடித்தாயோனோ?"

"குடித்தால்?"

"அதுக்கு சிகெரெட் புகை ஒத்துக்காது."

"சிகெரெட் புகை ஒத்துக்காதா? அப்படின்னால்?"

"அந்தக் கட்டிடமும் ஒரு பிராணிதான் தாத்தா."

"எ.. ன்.. ன பிராணியா?"

"ஆமாம் தாத்தா! அந்தக் கட்டிடத்தை நாங்க செங்கல் சிமென்ட்டு போன்றவைகளைக் கொண்டு கட்டலை."

"பின்னே?"

"அது ஒரு விதமான மரம்."

"மரமா? அப்படீன்னால் விருட்சமா?"

"ஆமாம் தாத்தா"

"மரத்தைக் கட்டிடமாய் எப்படித் தயாரித்தீங்க?

"அதென்ன பிரமாதம் ரொம்ப சுலபம் தாத்தா! முதல்ல வீட்டைப் போலவே அச்சைத் தயாரித்துப் போம்: அந்த அச்சை ஓரிடத்தில் வைத்து, ஒரு விதை யைப் பயிரிடுவோம். அந்த விதை ஒரு மணி நேரத்தில் அந்த வீட்டு அச்சு உருவில் வீடாய் உருவாகும். பிறகு சுற்றிலுமிருக்கும் அச்சு தானாகவே உருகிப்போய்விடும்.

ஒரு நிமிஷம் எல்லாவற்றையும் மறந்து விட்டார் கோதண்டபாணி. உற்சாகம் பெருக்கெடுத்தது. இதே போன்ற வீட்டைத் தானும் கட்டிக் கொண்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

"பின்னே அந்த மரத்துக்குக் கிளைகளும் இலை களும் இல்லையா?"

"அதுதான் மரமும், அதுதான் இலையும் கிளையும் எல்லாமும்! மரத்தைப் போலவே அதன் வேர்கள் பூமிக்குள் இருக்கும்! அதுவே அஸ்திவாரமாகும். மினுமினுப்பூச்சி இருக்கும் பாரு அதுபோலவே தான் அந்த மரமும் தானாகவே மினுமினுக்கும்."

"அதானா விளக்கு இல்லாத போதும் அந்த அறை முழுவதும் பளபளன்று மின்னிற்று? அதுசரி சிங்காரம், ஒரு சந்தேகண்டா!"

"என்ன சந்தேகம் தாத்தா? 1984-ல் இருந்து வந்துண்டிருந்த என்னை எதுக்குடா இங்கே இந்த வருஷத்துக்குக் கூட்டி வந்தாய்?"

"நாளை இரவு இரண்டு லட்சத்து வருஷம் ஆரம்பமாகிறது. அந்தப் புது வருஷத்துக்குப் பெரிய வங்க எல்லோரையும் நூறு வருஷத்துக்கு ஒருவராய் அழைத்துண்டு வந்திருக்கோம். சுமார் இரண்டாயிரம் பேர் பெரியவங்க வந்திருக்காங்க."

"அவங்கள்ளாம் எங்கேயிருக்காங்க?"

"நாளைக்குத்தான் பார்க்கப் போகிறாயே!"

"டேய் சிங்காரம் நூறு வருஷத்துக்கொரு முறை ஒருவர் இருவர் வந்திருந்தால் இதுவரை நாலாயிரம்பேர் இருக்கணுமே? பின்னே இரண்டாயிரம்ணு ஏன் சொல்றே!"

"இந்த இரண்டு லட்சம் ஆண்டுகளில் இரண்டு ஜலப் பிரளயங்கள் வந்தன தாத்தா. அப்போ பூமியில் மனித ஜாதியில் பெரும்பாலும் நசித்துவிட்டது. அந்தப் பிரகாரம் இந்த இரண்டு லட்சம் வருஷங்களில் சுமார் இருபதாயிரம் ஆண்டுகள் தவறிவிட்டன."

"என்ன? இரண்டு ஜலப்பிரளயம் வந்ததா?"

"ஆமாம் தாத்தா! அப்புறம் விவரமாய் சொல் றேன். கொஞ்ச நேரம் ஓய்வு எடுத்துக்கொள்."

"இதுவரைக்கும் ஓய்வாய்த்தானே இருந்துண்டிருக் கேன்."

*"நீ ஒய்வெடுத்துக்கலை. நீ* ***1984****லிருந்து* ***1,99,999*** *வருஷத்துக்கு மாறி வந்ததால் ரொம்ப நாள் ஒய்வெடுத் துண்டது போலிருக்கு உனக்கு. வா. இன்னொரு கட்டிடத்துக்கு உன்னை அழைத்துண்டு போறேன்."*

*வெகு தூரம் நடந்தது போலவே இல்லை. அந்தக் கட்டிடமும் பழைய அதே கட்டிடத்தைப் போலத்தான் இருந்தது. மூன்று ஜன்னல்களின் வழியேயும் பார்த்த போது மூன்று விதமாய் வெவ்வேறு காட்சிகள் தென்பட்டன. வெளி வாசலுக்கருகில் வீதி தென் பட்டது..*

*"டேய் சிங்காரம் சந்திரனை அடையணும்னால் உனக்கு எவ்வளவு காலம் பிடிக்கும்?"*

*"ஒரே வினாடி. நினைத்த மாத்திரத்தில் சந்திரனில் இருப்பேன்."*

*"நான் போகணும்னாலோ?"*

*"உங்க காலத்தில் உங்க பூமியை விட்டு வரத் துக்கே.. ஒரு வினாடிக்கு ஏழு மைல் வேகம் விகிதத்தில் வேண்டியிருக்கும். அதாவது பூமியின் புவியீர்ப்புச் சக்தி யிலிருந்து விடுபட்டுத் தப்பித்து அண்டவெளிக்கு வந்து சேரணும் என்றால், ஒரு வினாடிக்கு ஏழு மைல் வேகத் தில் போகணும். சத்திரன் பூமிக்குச் சுமார் இரண்டரை லட்சம் மைல்கள் தொலைவில் இருக்கிறது. வினாடிக்கு ஏழு மைல் தூரம் விகிதத்தில் போகணும்னால்.. சந்திரனைப் பார்ப்பதற்கு உங்களுக்கு சுமார்* ***3*** *நாட்கள் பிடிக்கும்."*

"ஆமாம்! சந்திரனை முதல் முதலில் போய் அடைந்த நீல் ஆம்ஸ்ட்ராங்குக்குக் கூட 3 நாட்கள் தான் பிடித்ததாம். ஆனால் உங்களால் எப்படி ஒரு வினாடியில் போய் விட முடிகிறது?"

"எங்களுக்கு அண்டவெளியில் குறுக்கு வழி தெரியும்"

"குறுக்கு வழியா? ஆகாசத்திலா? எப்படி?"

ஏதோ கணக்கை முணுமுணுத்துக் கொண்டான் அவன். கோதண்டபாணிக்கு அவனுடைய கணக்குப் புரியவில்லை. ஆனாலும் ஏதோ புரிந்தது போலவுமிருந்தது.

"டேய் சிங்காரம்! நீ எப்பொழுதாவது சந்திரனுக்குப் போயிருக்கிறாயா?"

"போயிருக்கேன். ஆனால் இப்பல்லாம் போறதில்லை தாத்தா."

"ஏன்?"

"சந்திரனுக்கு ஏன் போகணும்?" டினெஜ் என்ற நட்சத்திரத்துக்குப் போக 1400 வருஷம் பிடிக்கும். அது கூட எங்களுக்குப் பழசாயிடுத்தே."

"1400 வருஷமா பிடிக்கும்?"

"ஆமாம்! வருஷத்துக்கு 5,87,849,98,14,000 மைல்களைக் கடந்துப் போகணும். அந்த மாதிரி 1400 வருஷம்னால் அதை 1400 ஆல் பெருக்கினால் எவ்வளவு வருமோ அத்தனை மைல்கள் தூரத்திலிருக்கு அந்த "டினெஜ்" நட்சத்திரம்."

"ஐயோ! அந்தச் சனியன் பிடித்த "டினெஜ்" நட்சத் திரத்தைச் சேர 1400 வருஷமா பிடிக்கும்? அத்தனைக் காலம் மனுஷங்கதான் பிழைத்திருப்பாங்களா?"

"பேஷாய்!"

"எப்படி?" ஆச்சரியத்துடன் கேட்டார் அவர்.

"பூமியிலிருந்து கிளம்பும் போது எவ்வளவு வயசு இருக்குமோ திரும்பி அந்த நட்சத்திரத்திலிருந்து பூமிக்கு வந்து சேரும் வரைக்கும் அவ்வளவுதான் இருக்கும். ஆனால் பூமியிலோ 2800 வருஷங்கள் ஆகியிருக்கும்."

"பின்னே.. பின்னே நீங்கள் பூமியிலிருந்து புறப் பட்டுப் போன போது பூமியிலிருந்த மனுஷங்கள் திரும்பி நீங்க பூமிக்கு வந்து சேரும் போது இருக்க மாட்டாங்க இல்லையா?"

"ஆமாம், இருக்க மாட்டாங்க! அதனால்தான் வினாடிக்கு லட்சம் கோடி கோடி கோடி மைல் வேகத் தில் போகும் ராக்கெட்டுகளைத் தயாரித்துக்கிறோம் தாத்தா."

(ஐன்ஸ்டைனின் தத்துவமானது ஒளியை மிஞ்சிய வேகம் கிடையாது என்பது. ஆனால் நியூட்டன் தத்து வமோ, வேகமானது ஒளியையும் மிஞ்சியது என்பது! இரண்டு லட்சம் ஆண்டுகளுக்குப் பிறகு ஒளியையும் வேகத்தையும் மிஞ்சிய வேறொரு வேகத்தை மனிதர்கள் கண்டுப் பிடிக்கலாம்.)

கோதண்டபாணிக்கு எல்லாம் குழப்பமாயிருந்தது. ஒரு சந்தேகம் உதித்தது. இவர்கள் அத்தனை தொலை

வுக்கெல்லாம் போக வேண்டிய காரணம் என்ன? அங்கெல்லாம் கூட இவர்கள் தம் ராஜ்யத்தையும் அதிகாரத்தையும் ஸ்தாபித்து நடத்தி வருகிறார்களோ?

அவர் மனதிலிருந்த எண்ணத்தை ஊகித்து விட்ட சிங்காரம் சிரித்தான்.

"ராஜ்யத்தை ஸ்தாபிப்பதும். யுத்தம் புரிந்து உயிர் களைக் கொல்லுவதும் பழங்காலம் தாத்தா! அந்த நட்சத்திரங்களுக்கருகில் கூட கிரகங்கள் நிறைய உண்டு. அதில் அனுகூலமான எதாவது கிரகத்தில் இறங்கி அங்கிருப்போருடன் சம்பந்தமும் தொடர்பும் வைத்துப் போம்."

"என்ன? அந்த கிரகங்களில் கூட மனிதர்கள் இருக்கிறாங்களா என்ன?"

"இருக்காங்க தாத்தா! அண்டவெளியில் பதினா யிரக் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் இருக்கு இல்லையா? அதில் பத்து லட்சம் நட்சத்திரங்களுக்குக் கிரகங்கள் உண்டு. அதில் உங்க பூலோகத்தைப் போன் றவை பத்தாயிரம் வரையிலும் உண்டு."

"அந்த கிரகங்களுக்கெல்லாம் போவீங்களா நீங்க?"

"சில கோடிக்கணக்கான கிரகங்களுக்குப் போவோம். இன்னும் நிறையக் கிரகங்கள் உண்டு. அவைகளையும் வெகு சீக்கிரத்தில் போய்ச் சேர்ந்து விடுவோம்."

"டேய் சிங்காரம். இது வரைக்கும் நான் டில்லி எப்படியிருக்கும்னு கூட பார்த்ததில்லைடா! போக

ணும்னு விரும்பினால் என் மனைவி தானும் வரேங்கிறாள். பணமில்லாததால் அழைத்துண்டு போக முடியலை. என்னை உன்னோடு நட்சத்திரத்திற்கு இல்லா விட்டாலும் சந்திர மண்டலத்துக்காவது அழைத்துட்டுப் போடா."

"கண்டிப்பாய் அழைத்துண்டு போறேன் தாத்தா! முதலில் ஆகாசத்திலிருக்கும் உப கிரகத்துக்குப் போவோம்."

"அங்கே எதற்கு?"

"உங்க வம்சத்தில வந்த உங்க சொந்தப் பேரன் அங்கேதான் இருக்கிறான் தாத்தா! அவரைப் பார்க்கலாம் வா" என்று அவன் சுவரைத் பார்த்தான். வெளியே ராக்கெட்டைப் போன்ற ஒன்று வந்து நின்றது. எட்டடி உயரமும் நாலடி அகலமும்! அவன் முன்னால் நடக்க அனுசரித்து நடந்தார்.

ராக்கெட்டின் கதவு தானாகவே திறந்து கொண் டது. இருவரும் உள்ளே போய் சீட்டில் உட்கார்ந்து கொண்டார்கள். கதவு மூடிக்கொண்டது.

"எத்தனை நேரம் பிடிக்கும் அந்த உப கிரகத்தைச் சேருவதற்கு?"

"வந்துட்டோம் தாத்தா!"

"என்ன? அதற்குள் வந்துட்டமா!"

"ஆமாம் பாரு."

கதவுகள் திறந்து கொண்டன.

காற்றில் மிதப்பது போலிருந்தது. சீட்டைப் பிடித்துக் கொண்டு ராக்கெட்டின் ஜன்னல் வழியாய்ப் பார்த்தார் அவர். தரையெல்லாம் நீல நிறத்தில் தெரிந் தது. அவை சமுத்திரத்தைப் போலிருந்தது.

காற்றில் நீந்திக்கொண்டே சிங்காரத்திடம் வந்தார் அவர். "என்னடா, இப்படி நீந்த வேண்டியிருக்கு?"

"இங்கே புவியீர்ப்புச் சக்தி கிடையாது தாத்தா."

"அப்படின்னால் இனி இப்படியேதான் நீந்த ணுமோ?"

"இல்லை. உபகிரகத்தில் புவியீர்ப்புச் சக்திக்கு வழி பண்ணியிருக்கோம். நம் ராக்கெட் இப்பொழுது உப கிரகத்துக்கு வந்து சேர்ந்து விட்டது. இறங்கு."

சிங்காரம் இறங்கினான். கோதண்டபாணியும் கிரகத்தில் அடியெடுத்து வைத்தார்.

வண்டிச் சக்கரத்தைப் போலிருந்த அந்த உப கிரகத்தின் பரப்பளவு நாற்பது ஆயிரம் மீட்டர்கள். ஒரு ஆயிரம் மீட்டர்கள் உள்ள உலோகக் குழாயை வளைத்து, நாற்பது கிலோ மீட்டர்களுடைய வண்டிச் சக்கரமாய் தயாரித்தார்களாம்! சக்கரத்திற்கு நடுவில் இலைகள் இருந்தன. வெளியிலிருந்து பார்ப்பதற்காக சக்கரத்துக்கு நடுவில் ஒரு டோனம் ஏற்படுத்தியிருந் தார்கள். அதன் மேல் நீண்ட ஸ்தம்பம் இருந்தது. கண்டத்திலுள்ள கிரகங்களில் சுற்றியலையும் மனிதர் களுடன் பேசுவதற்கு ஏற்பாடு செய்திருந்த உணர்ச்சி யலைகள் கூடிய ட்ரான்ஸ்மிட்டரும் ரிசீவருமாம் அது!

அந்த உணர்ச்சியலைகள் நொடிக்குக் கோடிக்கணக்கான மைல்கள் வேகத்துடன் அண்டத்தில் பிரயாணம் பண்ணுமாம்.

ஆயிரம் மீட்டர்கள் அகலமுள்ள பெரிய சுரங்கத் திற்குள் நுழைந்ததுமே கோதண்டபாணி தன் கண் களையே நம்ப முடியாதவரானார்.

அங்கே அனைவரும் சுவர்களைப் பிடித்துக் கொண்டு நடந்து சென்று கொண்டிருந்தார்கள். அங்கே எல்லோரும் சாதாரணமாய்த்தான் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். ஆனால் நிமிர்ந்து பார்த்தபொழுது அவர் தலைமேல், கோணலாய் இருந்த சுவரின் மேலும் நடந்து கொண்டிருந்தார்கள். அதாவது அவர்களின் தலைகளைக் கீழேயும் கால்களை ட்யூப் சுவருடன் ஒட்டிக் கொண்டும் வைத்த படி நடந்து கொண்டிருந் தார்கள்.

உண்மையில் அவ்விடத்தில் கீழே மேலே என்ற வேறுபாடே கிடையாதாம். அவர் கால்களின் கீழே தரை அவர் காலுக்குக் கீழேதான் இருந்தது! அவர் தலை மேலே, தொங்கிக் கொண்டு நடந்த அவர்கள், அவரைப் பார்த்து வவ்வால் என்று எண்ணி விடுவார்களோ? பூமியிலும் கூட அந்த மாதிரி தானா? இந்தியாவில் தாம் நிலத்தில் கால் ஊன்றி நடந்து கொண்டிருந்தால், பூகோளத்திற்கு மறு பக்கத்திலிருந்த அமெரிக்காவில் மனிதர்கள் நமக்குத் தலைகீழாக நடப்பது போலத்தானே?

சிங்காரத்துடன் சேர்ந்து கொஞ்ச தூரம் நடந்தார். எதிரே பெரிய அறை ஒன்று தென்பட்டது. அது மாஸ்டர் அறையாம்!

அறைக்குள் பல வித ஆயுதங்கள் இருந்தன. எல்லாம் பல்வேறு நிறத்துடன் மிளிர்ந்தன. எதிரே டெலிவிஷன் திரையைப் போன்ற பல திரைகள் தென் பட்டன. எல்லாவற்றின் மீதும் பல்வேறு சித்திரங்கள் நிழலாடிக் கொண்டிருந்தன. அவையெல்லாம் அண்டங் களிலுள்ள கிரகங்களில் சுற்றிக் கொண்டிருந்த மனிதர் களின் படமாம்.

அதற்கெதிரே நீண்ட மேஜை இருந்தது. மேஜை க்கு மேல் பல வித பட்டன்களின் எண்கள் இருந்தன. அதற்கு முன்னால் ஒருவர் உட்கார்ந்து கொண்டு ஒவ்வொரு திரையின் மீதும் விழுந்து கொண்டிருந்த மனிதச் சித்திரங்களுடன் ஒரே சமயத்தில் பேசிக் கொண்டிருந்தார்.

கோதண்டபாணி ஆச்சரியமடைந்தார்.

"அத்தனை பேருடன் அவர் ஒரே சமயத்தில் எப்படிடா பேசமுடிகிறது?" கேட்டார் சிங்காரத்தை.

"அவர் பேசலை, தன் எண்ணங்களை அங்குள்ள கிரகங்களுக்கு அனுப்புகிறார். அவை கோடாணு கோடி மைல்களுக்கப்பால் இருக்கின்றன. அவர்களுக் குச் செய்தியை இங்கிருந்து அனுப்பினால் அச் செய்திகள் ஒரு வினாடிக்கு லட்சத்து எண்பத்தி

ரெண்டாயிரத்து இருநூற்று நாற்பது மைல்கள் வேகத்தில் போய்ச் சேருகின்றன.

"அதாவது ஒளியலையின் வேகம்னு சொல்லு" தனக்கே அந்த விஞ்ஞானம் புரிந்தாற் போலிருந்தது அவருக்கு.

"ஆமாம். ஆனால் ஒளியின் வேகத்தில் செய் தியை அனுப்பணும்னால், அச் செய்தி அவர்களுக்குப் போய்ச் சேர பல ஆயிரம் ஆண்டுகளாகும் அதற்கு அங்கிருப்போர் பதில் அனுப்பினால் திரும்பி அத்தனை ஆண்டுகள் பிடிக்கும். அதனால்தான் உணர்ச்சியலை களின் மூலம் அனுப்பிப் பேசிக் கொள்கிறார் அவர்."

அவரைப் பார்த்தார் கோதண்டபாணி

"அது யாருடா சிங்காரம்?"

"உங்க வம்சத்தில் வந்த உங்க சொந்தப் பேரன் தான் அவர்."

"என்ன?"

"உங்களுக்கு இரண்டாயிரத்து வாரிசு! அவர்தான் இந்த ஆறாவது உலகத்தின் அதிகாரி."

கோதண்டபாணி வந்ததை அம்மனிதன் கவனித்து விட்டான் போலும்.. ரிவால்விங் சேரிலிருந்தே திரும் பிப் பார்த்தவன் எழுந்து அவரிடம் வந்தான்.

அவனைப் பார்த்து திக் பிரம்மையடைந்து நின்று விட்டார் அவர்.

அவன் அசல் கோதண்டபாணியைப் போலவே இருந்தான்.

*இல்லை கோதண்டபாணியே தான் அவன்! அவனே கோதண்டபாணி!*

*"இல்லை. அவன் தகதகவென்று சுடரிட்டுக் கொண்டிருந்தான்.*

*கண்கள் அகல விரிய நோக்கினார் அவனை. ஆம்! அசல் அவரைப் போலவே இருந்தான் அவன்! அவனும் தானும் ஒன்றே அவன் வேறு தான் வேறு இல்லை! நானே அவன்!*

## *6*

*"வணக்கம் தாத்தா" எனறான் அவன், கோதண்ட பாணியிடம் வந்து.*

*பதில் வணக்கம் செய்வதா வேண்டாமா என்று தடுமாறிய படி நின்று கொண்டிருந்தார் அவர் ஆச்சரிய மடைந்து போய். மனிதன் பறங்கிப் பழமாய் இருந் தான். இல்லை, தங்கத்தைப் போலத் தளதளவென்று மின்னினான். தங்கம் கூட இல்லை, அது ஏதோ புரி யாத புதிய நிறம்!*

*"என்ன தாத்தா, நான்தான் உன் பேரன்" என்றான் அவன்.*

*"மனிதன் தானா? அல்லது இந்த சிங்காரத்தைப் போன்ற புகைமண்டலத்து மாயா மனிதனா?" யோசிக் கலானார் அவர்.*

*அவன் முறுவலித்தான்.*

"இல்லை தாத்தா, மனிதன்தான்."

அட! இவனுக்கும் தன் மனதிலிருப்பது தெரிந்து விடுகிறதே கொஞ்சம் கிட்டே போய் அவனைத் தொட்டுப் பார்த்தார்.

அவன் சரீரம் மிருதுவாய்த் தட்டுப்பட்டது. சந் தேகம் தீர்ந்துடுத்தா தாத்தா?''

"தீர்ந்தது, ஆனால் பேரன் என்கிறாயே! எத்தனை யாவது வம்சத்தில் பிறந்த பேரனப்பா?"

"ரெண்டாயிரத்து வம்சத்தில் பிறந்தவன் தாத்தா! நானும் அசல் உன்னைப் போலத்தானே இருக்கேன்?"

"ஆமாம். என்னைப் போலவே தான் இருக்கே.. உன் பேரன்ன?"

"இங்கே எங்களுக்குப் பெயர்கள் கிடையாது தாத்தா"

"பேர் கிடையாதா?"

அவன் தலையசைத்தான்.

"பின்னே.. நான் உன் தாத்தான்னு எப்படித் தெரிந்தது?"

"எங்களுக்கெல்லாம் நம்பர் உண்டு. என் நம்பர் எழுபதின் கீழே முப்பதின் கீழே ஆறின் கீழே இருநூற்று மூணு"

"இதென்னப்பா நம்பர்? கீழே கீழேன்னு உன்னைக் கூப்பிடுவதானால் இந்த நம்பரோடு தான் கூப்பிட ணுமா."

"நாங்க ஒருத்தரும் நம்பர் சொல்லிக் கூப்பிட்டுக்க மாட்டோம். மனதிற்குள்ளேயே பேசிப்போம்."

"அதெல்லாம் எனக்கு வராது. உன்னை ஒரு பேரிட்டு அழைக்கிறேன்."

அவன் முறுவல் பூத்தான். "என்ன பேர் வைப் பீங்க?"

ஒரு வினாடி யோசித்தார். "சுந்தரம்.. ரமேஷ்.." சுதாமா.. என்றெண்ணிக் கொண்டார் மனதிற்குள்.

"சரி, சுதாமான்னே கூப்பிடு."

தன் மனத்திலிருந்ததைத் தெரிந்து கொண்டானே!

"டேய் சுதாமா! அழகாய் பெயரை வைத்துக் காமல் இதென்னடா நம்பர்?"

"பேரை விட நம்பர்கள் சுலபம் தாத்தா! சமுத் திரத்திற்குள் ஒரு பெரிய கட்டிடம் இருக்கு. அதில் எங்கள் பெயரெல்லாம் வரிசையாய் இருக்கும். ஒவ் வொரு நூறு நம்பர்களையும் ஒருத்தர் எப்பொழுதும் பரிசோதித்துண்டே இருப்பார். அங்கே எங்களுக்கு இங்கே உடம்பு கொஞ்சம் சரியாயில்லா விட்டால் எங்க நம்பருக்கருகில் ஒரு பல்பு எரியும். உடனே அவர் எங்களுக்கு உடம்பு ஏன் சரியாயில்லைன்னும் எந்த மருந்து தரலாம்னும் பார்த்து அங்கேயே அந்த நம்பருக்குப் பக்கத்திலேயே போட்டுவிடுவார். உடனே இங்கே எங்கள் உடம்பு குணமாயிடும். அதாவது எங்க உடம்பில் ஜுரம் வரது போறது கூட எங்களுக்கே தெரியாது."

"அப்படின்னால் உங்களை டாக்டர்கள் பரி சோதிக்க மாட்டாங்களா?"

"ஊஹூம். எல்லாம் கம்ப்யூட்டர்கள் தான் செய்யும்."

"கம்ப்யூட்டரா? எப்படிடா பண்ணும்?"

"எனக்குத் தலைவலி வரதுன்னு வைச்சுக்கோ ஏதோ சங்கடமாய் உணரத் தொடங்குவேன். அப் பொழுது எங்க மூளையில் உணர்ச்சி அலைகள் மாறும். எப்படி மாறும் ஏன் மாறும், அப்படி வரக் காரணம் என்ன என்றெல்லாம் அந்த கம்ப்யூட்டரே வினாடி நேரத்தில் கணக்கிட்டு மருந்தின் பெயரை எடுத்துச் சொல்லும், அந்த மருந்தை மின் அலைகளாய் மாற்றி எங்களுக்குப் பிரச்சாரம் பண்ணிவிடும்."

"விந்தையாயிருக்கே"

"உங்களுக்கு வினோதமாய்த்தானிருக்கும். உண் மையில் ஜுரம் வந்து படுக்கையில் விழுந்தால் காலம் வீணாய்த் தானே ஆகும்! நாங்களோ ஒரு நிமிஷத்தைக் கூட விணாக்க மாட்டோம்."

"டேய் சுதாமா, உனக்குக் கல்யாணம் ஆயிடுத் தாடா?"

"ஆயிடுத்து தாத்தா"

"பொண்ணு எங்கே?"

"கீழே வேறொரு கிரகத்தில் இருக்கிறாள்."

"என்ன பண்றாள்? சமைப்பாளா?"

அவன் சிரித்தான்.

"நாங்க சமையல் எதுவும் பண்ண மாட்டோம். அவள் டாக்டர்."

"டாக்டரா? உங்க நோயை கம்ப்யூட்டரே சரி பண்ணிடும்னு சொன்னாய்! பின்னே உன் மனைவி ஏன் டாக்டராயிருக்கணும்?"

"கம்ப்யூட்டர்கள் நோயை குணப்படுத்தினாலும் கூட அவைகளை எப்படிப் பண்ணணும்னு பரி சோதனைகளைப் பண்ணுவாள்."

"நீ ஆயிரக்கணக்கான மைலுக்கப்பால் இந்த கிரகத்தில் இருக்கிறாய். உன் மனைவியோ வேறு கிரகத் தில் இருக்கிறாள். அப்படின்னால் நீங்கள் எப்படிச் சந்தித்துப்பீங்க?"

"தினந்தோறும் சந்தித்துண்டேதானே இருக்கோம்! அவள் இங்கே வருவாள். இல்லாவிட்டால் நானே அங்கே போவேன்."

"குழந்தைகள் உண்டாடா உனக்கு?"

"ஆம்! ஒரு பையன் உண்டு! கீழ்க் கிரகத்தில் படிக்கிறான். வா தாத்தா, புது கிரகத்திற்கு வந்து இறங் கியிருக்காங்க நம்ப மனுஷங்க. பார்க்கலாம் வாங்க."

சுதாமா அவரை டெலிவிஷன் திரையைப் போல் இருந்த சுவருக்கருகில் அழைத்துச் சென்றான். அவனுக் கருகிலிருந்த நாற்காலியில் அவரும் அமர்ந்தார்.

எதிரேயிருந்த சிறிய திரையின் மேல் ராக்கெட் இறங்கியிருந்தது. சுற்றிலுமிருந்த அந்தப் பிரதேசம் பூமியைப் போலவே இருந்தது. அங்கே ஆகாசத்தில்

இரண்டு சூரியன்கள் தெரிந்தன. ஒன்று பூமியில் தென் படும் சூரியனை விடப் பத்து மடங்கு பெரிதாய்த் தெரிந்தது. மற்றொன்று நாலு மடங்கு பெரிதாய் தெரிந்தது.

"அதென்ன கிரகம்டா சுதாமா?" திரையைப் பார்த்துக் கேட்டார்.

"அண்ட்ரோமிடா கெலாக்சியின் ஒரு கோடியில் ஒரு ஜோடி நட்சத்திரங்கள் உண்டு. அதற்கும் பத்துக் கோடி மைல் தூரத்திலுள்ள கிரகம் தாத்தா."

சுதாமா ஏதோ ஸ்விட்சைத் தட்டினான். அருகிலி ருந்த பெரிய திரையிலும் சிறிய திரையிலும் காட்சிகள் விழுந்தன.

ராக்கெட்டில் பத்துப் பேர் மனிதர்கள் இருந்தார் கள்.

"அந்த கிரகத்தில் பிராணவாயு எவ்வளவு இருக்கு?" என்று கேட்டான் சுதாமன்.

"நாற்பது சதவீதம்" ராக்கெட்டிலிருந்த மனிதன் சொன்னான்.

"நைட்ரஜன்"

"ஐம்பத்தைந்து சதவீதம்"

"அந்தக் கிரகம் தன்னைத்தானே சுற்றிக்க எத்தனை நாளாகும்?"

"நம் கணக்குப்படி ஒரு மாதம்."

"சூரியனைச் சுற்றிவர?"

"நம் வருஷங்கள்.. ஐந்து."

"உஷ்ணநிலை?"

"தொண்ணூறு ஃபாரன்ஹீட்"

"தரை எப்படி இருக்கு?"

"நம் பூமியைப் போலவே கார்பன் பேஸ்!"

"ஓ.கே. நீங்கள் கொஞ்ச நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு ராக்கெட்டிலிருந்து இறங்குங்கள்."

கோதண்டபாணிக்கு ஒன்றும் புரியவில்லை.

சுதாமா பேசினாற் போல உதடுகள் அசையவே யில்லை. பேசினதாய்த் தெரியவில்லை. அதைத்தான் கேட்டார் அவனிடம்.

"நாங்க வாயால் பேசிக்கலை தாத்தா."

"பின்னே நீங்க பேசியது எனக்குக் கேட்டதே."

"அது அவங்க பேசின வார்த்தை இல்லை. அங்குள்ள சூழ்நிலையை அவங்க உணர்ச்சியலைகளின் மூலம் பிரசாரம் பண்ணினாங்க. அந்த உணர்ச்சி அலைகள் இங்கே மந்திர ஒலியைப் போல சப்தமாய் மாறி ரிகார்டாயின."

"அதெப்படி முடியும்?"

"டெலிபதி தாத்தா! அங்கே அவங்க பேசும் பேச்சுக்களை மின் அலைகளாய் மாற்றி பூமிக்கு அனுப்பணுமானால் சுமார் 22 லட்சம் ஆண்டுகளாகும். ஆனால் உணர்ச்சி அலைகளோ ஒரே வினாடியில் கோடானுக் கோடி மைலிலிருந்து கூட வந்து சேர்ந்து விடும்."

அவருக்குச் சட்டென்று பேரனின் மனைவியைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. அவர்களுடைய மகனையும் பார்க்க வேண்டும் போலிருந்தது.

சுதாமா எழுந்திருந்தான்.

"வா தாத்தா" என்றான்.

"எங்கே?"

"உனக்கு என் மனைவி, குழந்தையைப் பார்க் கனும்னு சொன்னாயோனோ, வா காட்டறேன்."

இருவரும் எழுந்து வேறொரு அறைக்குப் போனார்கள். அவ்வறையில் இரண்டு சாய்வு நாற்காலி கள் மட்டுமே இருந்தன.

"தாத்தா நீ என் மனைவியைப் பார்ப்பதற்கு முன்னால் எங்களுக்கெல்லாம் கல்யாணம் எப்படி நடக்கும்னு தெரிந்துக்கணும்" என்றான் அவன்.

"எப்படி நடக்கும்?"

"உங்க காலத்தில் பெரியவங்கதானே சம்பந்தம் பார்ப்பாங்க?"

"ஆமாம்"

"இப்பவும் அதே மாதிரிதான் நடக்கிறது. ஆனால் இப்போ பெரியவங்களுக்கு பதில் கம்ப்யூட்டர்கள் சம்பந்தம் பார்க்கும்."

"கம்ப்யூட்டர் எப்படிப் பார்க்கும்?"

"இதப்பார் இந்த ஒயரைத் தலையில் பொருத்திக் கொள். அப்புறமாய் எங்க கல்யாணம் எப்படி ஆச்சுன்னு மனதிலேயே நினைத்துக் கொள். அந்த

எதிர்ச் சுவரிருக்கும் திரையின் மேல் நிகழ்ச்சிகளும் தெளிவாய்த் தெரியும். பார்த்துண்டிரு நான் இதோ பெர்னார்ட் நட்சத்திரத்திற்குப் போயிட்டு வரேன்" என்று அவர் தலையில் ஏதோ இரண்டு ஒயர்களை பொருத்தி வைத்து விட்டு அவன் போய்விட்டான்.

அவன் போன பிறகு கோதண்டபாணி மனதிற்குள் அவன் திருமணத்தைப் பற்றி நினைத்துக்கொண்டார்.

திரையில் சமுத்திரம் தென்பட்டது. சமுத்திரத் திற்கு மூன்று மைல் ஆழத்தில் பெரிய கட்டிடம்! கண்ணாடியாலோ அல்லது வேறு ஏதோ உலோகத் தாலோ செய்த கட்டிடமாய் தென்பட்டது. விளக்கு களை எங்கேயுமே காணோம். அதில் ஒரு அறை தெரிந்தது. அதற்குள் பத்துப் பேர் மனிதர்களும், மேலும் பத்துப் பேர் சிங்காரத்தைப் போன்ற புகை மண்டல உருவங்களும் இருந்தன.

திரையில் ஒரு பெரிய நம்பர் தெரிந்தது.

**70..30..6..203**

அது அவருடைய பேரன் சுதாமனின் நம்பர்!

அங்கே சிறிய பச்சை பல்பு ஒன்று விட்டுவிட்டு எரிந்து கொண்டிருந்தது. அதற்கெதிரே அமர்ந்திருந் தவர் சிறிய ஓட்டையில் ஏதோ ஒயர்களைப் பொருத் திக் கொண்டிருந்தார்.

அருகிலிருந்த மற்றொரு சுவரில் தெரிந்த திரையின் மேல் கோணல் மாணாலான பல கோடுகள் நாட்டியமாடிக் கொண்டிருந்தன.

சிங்காரம் அதைப் பார்த்து "க்ளுக்" கென்று சிரித்து விட்டு கோதண்டபாணியைப் பார்த்தான்.

"நம் மாஸ்டருக்கு இளமைக் கனவு வருகின்றன" என்றான் அவன்.

இன்னொரு ஸ்விட்ச் போடப்பட்டது. உடனே காட்சி மாறியது. அவர் பேரன் சுதாமா எங்கோ ஒரு படுக்கையில் படுத்துக் கொண்டு நெளிந்து கொண் டிருக்கிறான்.

"மாஸ்டர்"

சுதாமா எழுந்திருந்தான்

"என்ன?" என்றான்.

"உங்களுக்குக் கல்யாணம்.."

சுதாமா முறுவலித்தபடி "சம்பந்தம் பாருங்கள்" என்றான்.

ஸ்விட்ச்சை அணைத்து விட்டான்.

திரையிலிருந்த பேரன் மற்றொரு ஸ்விட்சைப் போட்டதும், திரையின் மேல் என்னென்னவோ நம்பர்கள் கிர்ரென்று சுற்றி வந்தன.

சுதாமனின் பிளட் குரூப், அறிவுக் கூர்மை, துடிப்பு விகிதம், மின்சக்தியை எவ்வளவு தூரம் தாங்க வல்லவன்.. முதலியவை குறித்துக் கொள்ளப்படுகிறது.

"மாஸ்டருக்குத் தகுந்த பெண்ணைத் தேடணும் என்கிறான் ஒருவன்.

அது கிர்ரென்று சுழன்றது. பேரன் சுதாமனுக்குத் தகுந்த சம்பந்தம் தேடுவதற்காக கம்ப்யூட்டர்கள் தேடத் தொடங்கின போலும்!

திரையில் ஒரு நம்பர் தெரிந்தது. அது 140..39..8..307.

"அதாவது ஜப்பான்" என்றான் சிங்காரம்.

திரையில் ஒரு பெண் தென்பட்டாள். படுக்கையில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தாள். விரகதாபமா? சுவரில் தெரிந்த திசையை அவள் தூக்கி வாரிப் போட்ட படி எழுந்து உட்கார்ந்து பார்த்தாள்.

"உங்களுக்கு சம்பந்தம் கொண்டு வந்திருக்கிறோம்" என்றான் திரையில் தென்பட்ட ஆள்.

"யார் அவர்?" என்கிறாள் சிரித்துக் கொண்டே.

அந்த ஆள் சுதாமனின் நம்பரைச் சொல்கிறான்.

"ஓ.கே. அவரோடு ஒருமுறை பேசுகிறேன்" என்கிறாள். திரையைப் பார்க்கிறாள். திரையில் சுதாமா தென்படுகிறான்.

"வணக்கம்" என்கிறாள் அவள்.

"வணக்கம்" என்றான் சுதாமா.

"நம்மிருவருக்கும் கல்யாணமாம்"

"ஆமாம்"

"எப்பொழுது?"

"நீங்களே அவர்களைக் கேளுங்கள்"

அவள் அந்த ஆளை நினைத்தாள். உடனே அவன் தென் பட்டான்.

"நாளன்றைக்குக் காலையில் எட்டுமணி மூன்று நிமிஷம் பத்து வினாடியில்" என்றான் அவன்.

"கல்யாணம் எங்கே"

"36 56 கிட்டே" என்கிறான் அவன்.

"அதாவது மாஸ்கோவில்" விளக்குகிறான் சிங்கா ரம்.

"ஓ.கே." என்றாள் அவள்.

திரையில் சுதாமா தென்பட்டான். அவள் அவனைப் பார்த்து, "என்னிடம் எப்போ வரீங்க?" என்று கேட்டாள். அவன் ஏதோ யோசித்தாற் போலக் கண்களை மூடிக் கொண்டு, "இன்று மாலை ஆறு மணி எட்டு நிமிஷத்தில்" கூறி விட்டுக் கண்களைத் திறந்தான்.

"சரி. உங்களை எதிர்பார்த்துண்டிருக்கிறேன். நீங்கள் வந்ததும் நாம் இருவரும் சேர்ந்து லாரண்ட் நட்சத்திரத்தில் மூன்றாவது அறையில் எங்கப்பா இருக்கிறார், அங்கே போகலாம்" என்றாள் அவள்.

"சரி" என்றான் சுதாமா.

தோதண்டபாணி வியந்தார்.

சரியாய் மாலையில் அதே நேரத்தில் சுதாமா ஏதோ வாகனத்தில் ஏறி அவளிடம் போகிறான்.

இருவரும் சந்தித்துக் கொண்டு ஒருவரையொருவர் முத்தமிட்டுக் கொண்டார்கள். அதுதான் நிச்சயதார்த் தம் போலும்!

கம்ப்யூட்டர் நிச்சயதார்த்தம்!

இருவரும் ராக்கெட்டில் ஏறினார்கள்.

ராக்கெட்டை இரும்பு மனிதன் ஓட்டிச் சென்றான்.

லாரண்ட் நட்சத்திரத்தை நோக்கிச் சென்றார்கள்.

"கல்யாணமானதும் ஹனியூனிவர்ஸ் எங்கே போகலாம்?" கேட்டாள் அவள்.

"சூரியனுக்கு" என்கிறான் சுதாமா.

திடுக்கிட்டார் கோதண்டபாணி! சூரியனிடமா? வெந்து கருகிப் போய் விடமாட்டானா?

"ஓகே" என்றாள் அவள்.

ராக்கெட் ஏதோ கிரகத்தில் வந்து இறங்கிற்று.

அந்த கிரகத்தில் தரையானது வைரமாய் மின்னிற்று..

அப் பெண்ணின் தந்தை வினோதமான ஒரு காரில் அங்கு வந்தார். அவரைப் பார்த்தால் மனிதனா அல்லது மிருகமா தெரியவில்லை. ரொம்ப அசிங்கமாகத் தோன்றினார்.

வரவேற்றார். மூவரும் காரிலேறி வீட்டிற்குப் போனார்கள். அது வீடில்லை. பனிப் பிரதேசத்தில் எக்ஸிமோக்கள் கட்டிக்கொள்ளும் சமாதியைப் போலிருந்தது.

"நேரம் என்ன?" கேட்டான் சுதாமா.

"ஐம்பத்திரெண்டு மணி" என்றது அந்த மிருகம்.

ஐம்பத்திரண்டா? அந்த கிரகத்திலிருப்பவர்களுக்கு பகல் எவ்வளவு நேரமோ இரவு எவ்வளவு

நேரமோ யார் கண்டது? என்றெண்ணிக் கொண்டார் கோதண்டபாணி.

"பாருப்பா! உங்கள் இந்த விவாகம் நடக்கும் என்கிறாயா?" கேட்டது அம்மிருகம்.

சுதாமா தூக்கி வாரிப்போட, "ஏன் அப்படிச் சொல்றீங்க? கம்ப்யூட்டர் தவறாய் கணக்குப் போடுமா? கச்சிதமாய் தீர்மானித்துடுத்துங்க" என்றான்.

"கம்ப்யூட்டர் பண்ணிற்று! ஆனால், பத்தாவது தேசத்தின் அதிகாரி என் பெண்ணைப் பண்ணிக்கறேங் கறான்."

சுதாமா அப்பெண்ணைப் பார்த்தான்.

"பத்தாவது தேசத்து அதிகாரியா? உனக்குத் தெரியுமா?" கேட்டான் அவளை.

அவள் தெரியும் என்று தலையாட்டினாள்.

"எப்படித் தெரியும்?"

"அவன் பைத்தியக்காரன் அவனைப்பற்றி இப்போ எதுக்கு? வாங்க போவோம்."

அவர் பேரனும் அப் பெண்ணும் சேர்ந்து ராக் கெட்டை அணுகினார்கள். ராக்கெட்டில் ஏறப் போன பொழுது, அது பெருத்த ஓசையிட்ட படி உடைந்து விட்டது.

## 7

கோதண்டபாணியின் இதயமே நின்று விட்டாற் போலிருந்தது. எங்கும் புகை நெருப்பு மூட்டம்! அதில் அவர் பேரனும் அந்தப் பெண்ணும் அகப்பட்டுத் திணறுகிறார்களா என்ன?

ஒரே வினாடியில் புகை மூட்டம் மேலே எழும்பிப் போய் விட்டது. அங்கிருந்தவர்கள் இமைக்கும் நேரத்தில் நெருப்பை அணைத்து விட்டார்கள்.

ராக்கெட் ஏன் எரிந்ததென்று அவருக்குப் புரியவில்லை. பேரனோ கண்களை மூடிக்கொண்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்து விட்டான். அந்த ராக்கெட் ஏன் எரிந்தது என்பதைப் பற்றிதான் சிந்தித்துக் கொண்டிருந்தான் போலும்!

அந்தப் பெண் பயந்தவாறு அவனை நெருங்கிக் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"ஏதாவது தெரிந்ததா?"

அவன் மறுத்துத் தலையசைத்தவன், "என் மூளைக்கு எட்டலை. இடையில் ஏதோ சக்தி வந்து தடுத்து என் எண்ணம் ஈடேறாமல் செய்கிறது" என்றான்.

பிறகு, "ஒருக்கால் அந்தப் பத்தாம் தேசத்து அதிபதியின் வேலையாய் இருக்குமோ?" என்றான்.

"எனக்கும் அதுதான் தோணுகிறது" என்றாள் அவள்.

"சரி, அதை அப்புறமாய்ப் பரிசோதித்துக்கலாம் வா"

இன்னொரு ராக்கெட் சித்தமாயிருந்தது.

ராக்கெட்டில் ஒரே ஒரு ஆள் இருந்தான். நீண்ட கழுத்து இருந்தது அவனுக்கு. சுதாமனும் அந்தப் பெண்ணும் ராக்கெட்டிற்குள் ஏறி உட்கார்ந்ததும் ஒரு மாதிரி பார்த்தான் அவர்களை. அசல் சினிமா கதா நாயகனைப் போலவே இருந்தான் அவன். குரூரப் பார்வையுடன் அந்தப் பெண்ணை நோக்கினான்.

சுதாமா அவனுடன் தன்னைப் பரிச்சயம் பண்ணிக் கொண்டு, பிறகு அந்தப் பெண்ணுக்கும் அறிமுகப்படுத்துகிறான் அவனை.

அவன் சரித்திர ப்ரொஃபசராம். அவனுக்கு கி.மு. ஒரு லட்சம் ஆண்டுகளிலிருந்து கி. பி. இரண்டு லட்சம் ஆண்டு வரை நிகழ்ந்த நிகழப் போகும் நிகழ்ச்சிகள் எல்லாம் தெரியுமாம். ராக்கெட் புறப்பட்டதிலிருந்து அவன் சுதாமனுடன் ஒன்றும் பேசவேயில்லை. அந்தப் பெண்ணையே அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தான்.

ராக்கெட் திரும்பி பூமிக்கு வந்தது.

திருமண நாள் நெருங்கியது.

திருமண நாளன்று கூட மிகவும் பிசியாய் இருந்தான் சுதாமா.

சரியாய் ஏழு மணி முப்பது நிமிஷத்துக்கு சமுத்திரக் கட்டிடத்திலிருந்து அவனுக்குச் செய்தி வந்தது.

"மாஸ்டர் உங்கள் கல்யாணம் இன்னும் அரை மணியில் நடக்கணும்."

"நினைவிருக்கு."

"அப்படீன்னால் கிளம்புங்கள்"

"அண்ட்ரோமிடோ கெலாக்சிக்கு அனுப்பிய இன்னொரு ராக்கெட் பிளாக் ஹோலின் ஆகர்ஷ சக்தியால் அந்தப் பக்கமாய்த் திரும்பி விட்டது" என்றான் சுதாமா.

"பயப்பட வேண்டாம். நீங்கள் கிளம்புங்கள். நாங்கள் பார்த்துக்கறோம்."

அவர் பேரன் உபகிரகத்திலிருந்து கிளம்பினான்.

சரியாய் எழு ஐம்பதுக்கு அந்தப் பெண் இருந்த இடத்திற்கு வந்து இறங்கினான்.

அங்கு அப்பெண்ணின் தாயும் தந்தையும் வரவேற்றார்கள். அப் பெண்ணின் தாய் நாய்க் குட்டியைப் போல இருந்தாள். அருவருப்புடன் கண்களை மூடிக் கொண்டார் கோதண்டபாணி.

சரியாய் எட்டு மணி மூன்று நிமிஷத்திற்கு வானத்தில் தனுர் ராசியில் ஏதோ சன்னமான வெளிச்சக் கீற்றுத் தெரிந்தது.

சுதாமா ஆகாசத்தைப் பார்த்தான்.

எட்டுமணி மூன்று நிமிஷம் ஒன்பது வினாடி ஆகி விட்டது.

பேரன் அப் பெண்ணைக் கட்டியணைத்து முத்தமிட்டான்.

உபகிரகத்திலிருந்து வினாடி நேரம் ஏதோ மின்னி னாற் போலிருந்தது.

அப்பெண்ணும் அவர் பேரனும் அண்ணாந்து பார்த்துக் கையை ஆட்டினார்கள். ஒருக்கால் ஆகாசத் திலிருந்த தேவதைகள் அவர்கள் திருமணத்துக்கு ஆசி கூறி அட்சதைகளைத் தெளித்தார்களோ என்னவோ, புராணங்களில் வருவது போல!

சுவரிலிருந்த திரையில் காட்சி மாறிற்று.

ராக்கெட்டில் அவர் பேரனும் அப்பெண்ணும் சூரியனை நோக்கிக் கிளம்புகிறார்கள்.

சுக்கிர கிரகத்தைத் தாண்டிப் போய்க் கொண் டிருந்தார்கள். சுக்கிர கிரகம் பச்சையாய் மின்னிற்று. சுக்கிர கிரகத்தில் 900 டிகிரி உஷ்ணம் இருக்கும் என்று படித்த நினைவு கோதண்டபாணிக்கு.

சுக்கிரனில் கூட மனிதர்கள் வசித்தது திரையில் தென்பட்டது.

அவ்விருவரும் அங்கிருந்தோரை விசாரித்து விட்டு சூரியனை நோக்கிப் புறப்பட்டார்கள்

ராக்கெட் சூரியனை நெருங்கிற்று.

சூரியனின் மேல் பரப்பில் உஷ்ண நிலையானது 5000 டிகிரிகள் என்று படித்த நினைவு கோதண்ட பாணிக்கு, ஆனால் அவர்களுடைய ராக்கெட்டில் எப் பொழுதும் போலவே குளுமையாயிருந்தது போலும். அது சரி, அவர்கள் ஹனியூனிவர்ஸ் என்று சூரியனிடம் வரக் காரணம் என்ன?

அவள் சூரியனுக்கு நமஸ்காரம் பண்ணினாள். கழுத்திலிருந்த மெல்லிய சங்கிலியைக் கழற்றி, ராக் கெட்டின் துளையில் போட்டு ஸ்விட்ச்சைப் போட்டாள். சங்கிலி சூரியனின் மேல் பட்டிருக்கும்!

"ஏன் அது?" கேட்டான் பேரன்.

"வேண்டிக் கொண்டேன்"

"எதுக்கு?"

"உங்களோடு திருமணமானல் சூரியனுக்கு மாலை போடுவதாய்"

சுதாமா சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறீங்க?"

"எத்தனை லட்சக்கணக்கான வருஷம் கழிந்தாலும் உங்களுக்கு இந்த நம்பிக்கை போகாது போலிருக்கு! ஆனாலும் உனக்கும் எனக்கும் கல்யாணம் நடக்கும்னு கம்ப்யூட்டர் என்றோ சொல்லிடுத்து. அது தவறி விடும்னு உனக்கு ஏன் சந்தேகம் எற்பட்டது?"

"நேற்று நாம் ஏறப் போன ராக்கெட் உடைந்து விட்டதில்லையா?"

"ஆமாம்."

"அதை யார் பண்ணியிருப்பாங்க?"

"பத்தாம் தேசத்துத் தலைவனா?"

"அதுதான் என் சந்தேகமும்."

சுதாமா சிரித்தான்.

"சிரிக்காதீங்க. அவன் நம்பரும் உங்க நம்பரும் ஏறக்குறைய ஒன்றுதான். உங்க நம்பர் **70..30..6..203.**

அவனுடைய நம்பர் 70..30..6..202. கொஞ்சம் தவறி னாலும் சரி நம் திருமணம் நடக்காமல் போய் விட லாம். அவனோடு என் திருமணம் நிகழ்ந்து விட்டிருக் கும்"

"அதெப்படி நடக்கும்? கம்ப்யூட்டர்கள் தவறாய்ச் சொல்லாதே"

"சொல்லாது. நிஜந்தான். ஆனால் என் பயம் என்னுடையது."

"அவனோடு பேசட்டுமா?"

"அவன் நம் திரையின் மேல் வரமாட்டான்."

"ஏன்?"

"அவன் மூளையின் சக்தி மிக அதிகம். நாம் என்ன பண்ணினாலும் வடிகட்டியனுப்பிவிடுவான் நம்மை."

"முயற்சிப்போம்" என்ற சுதாமா உபகிரகத்தி லிருந்த விஞ்ஞானியுடன் தொடர்பு கொள்கிறான்.

"பத்தாம் தேசத்து அதிகாரி எங்கே இருக்கி றானோ, அவனுடன் தொடர்பு தாருங்கள்"

உபகிரகத்து விஞ்ஞானிகள் மிகவும் முயற்சி பண் ணினார்கள். கொஞ்ச நேரத்தில் திரையில் தெரிந்தான் அவன். அவன் சாதாரண மனிதனைப் போலவே தோன் றினாலும் பார்க்க பயங்கரமாய் இருந்தான். ஏதோ மிஷி னுக்கருகில் அமர்ந்து கொண்டு ஜபம் பண்ணுவது போல கண்களை மூடிக் கொண்டிருந்தான்.

அவன் கண்களைத் திறந்த பொழுது அது செக்கச் சிவப்பாயிருந்தது.

"நமஸ்காரம்" என்றான் சுதாமா.

"யார்? ஓ கல்யாணம் பண்ணிக்கொண்டு விட்டீர் களா? என் வாழ்த்துக்கள்!"

"தாங்க்ஸ்"

அவன் சட்டென்று திரையிலிருந்து மாயமாகி விட்டான்.

சுதாமா எவ்வளவு முயன்றும் அவன் திரைக்கு வரவே இல்லை.

"அனாவசியமாய் முயற்சி பண்ணாதீங்க. அவன் மூளையின் சக்தி ரொம்ப அபாரம்னு சொல்லலையா?" என்றாள் அப்பெண்.

சுதாமா பெருமூச்செறிந்தான்.

"அவனுக்கும் உனக்கும் எப்படி பரிச்சயமேற் பட்டது?"

"பரிச்சயமும் இல்லை ஒன்றுமில்லை. ஒருமுறை அவனுக்கு ஏதோ உடம்பு சரியாயில்லைன்னு கம்ப் யூட்டர் தெரிவித்த பொழுது மருந்தை எடுத்துச் சொன்னேன். அப்புறம் தினந்தோறும் திரையில் தென் படத் தொடங்கி விட்டான். என்னைக் காதலிப் பதாகவும், கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொல்லியும் கேட்கத் தொடங்கி விட்டான். அவன் மூளையில் எலெக்ட்ரிகல் இம்பல்சஸ் கொஞ்சம் வீக்காக இருந்தன. பைத்தியமாயும் இல்லாமல் ஒரு மாதிரி நிலையில் இருப்பான் அவன்."

"அந்த மாதிரி அரைகுறைப் பைத்தியத்தை எப்படித் திருமணம் பண்ணிப்பது? அதனால் இனிமேல் திரையில் தென்பட வேண்டாம் என்று கச்சிதமாய்ச் சொல்லி விட்டேன். அதிலிருந்து அவனைக் கண்டால் எனக்குப் பயம்"

சுதாமா பெருமூச்செறித்தான்.

"அவன் எனக்கு ஏதாவது கெட்டது பண்ணு வானா?" கேட்டாள் அவள்.

"யோசித்துப்பார்"

அவள் கண்களை மூடிக்கொண்டாள்.

"எனக்கொன்றும் தெரியவில்லை.. நீங்களே முயற் சியுங்கள்."

சுதாமா கண்களை மூடிக்கொண்டு யோசித்துப் பார்த்தான்.

"என் உணர்ச்சியில் அவன் எட்டவே இல்லை."

"நான்தான் சொன்னேனே, அவன் மூளையலைகள் ரொம்ப சக்தி வாய்ந்தவைன்னு. ஒருக்கால் அவன் நமக்குத் தீங்கு உண்டாக்கினாலும் நம்மால் கண்டு பிடிக்க முடியாது. அதனால் நாம் கவனமாய் இருக் கணும்" என்றாள் அவள்.

"பரவாயில்லை, அவனுடைய புத்திக் கூர்மை, உஷ்ண நிலையைத் தாங்கும் சக்தி, மூளை சக்தி எல்லா வற்றையும் தெரிந்துக் கொண்டு விடுகிறேன். நீ பயப் படாதே." என்கிறான் சுதாமா.

அதற்குள் கோதண்டபாணியின் பின்னால் வந்து நின்றான் சுதாமா.

"என்ன தாத்தா, எது வரையிலும் பார்த்தாய்?"

"ஏண்டா சுதாமா, அந்த வில்லன் அதிகாரி உனக்கு ஏதாவது கெடுதல் பண்ணினானா?"

"தெரியாது தாத்தா."

"போலீசுக்கு ரிபோர்ட் தராமல் போனாயா?"

"போலீசா? ஓஹோ உங்க காலத்தில் பாது காவலுக்கு இருந்த போலீசுப் படையா? இங்கே போலீசே கிடையாது தாத்தா."

"போலீசே கிடையாதா? அப்ப யார் கவனிச்சுப் பாங்க அநியாயம் நிகழ்ந்தால்?"

"இங்கே அநியாயம், மோசடி, திருட்டுத்தனம், கொலைகள் இதெல்லாம் நடக்காது. அப்படி நடந்தா லும் எந்த வீட்டில் அல்லது இடத்தில் நடந்ததோ அங்கே துப்பறியும் கருவியை இணைத்துப் பார்ப்போம். உடனே அந்தக் கொலை எப்படி நிகழ்ந்தது? யார் செய்தார்கள்? எப்படி? என்று திரையில் காட்டி விடும்."

"எப்படிடா?"

"அதென்ன பிரமாதம்! கொலை நடந்ததுன்னு வை. உயிர் போய் விடும். உயிர் என்றால் ஒரு விதமான மின்சாரசக்தி. அந்த மின்சார சக்தி ஒரேயடியாய் வெளியே போய் விட்டால், அச்சுற்றுப் புற எல்லை யெல்லாம் ஸ்தம்பித்து விடும். இதை உணர்ச்சிகளால் இயங்கும் சூழ்நிலை என்பார்கள். அந்தச் சூழ்நிலையில்

டிடெக்டர் கருவி இருந்தால், அது உடனே நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் காட்சியாய் மாற்றிக் காட்டிவிடும்."

கோதண்டபாணி ஆச்சரியமடைந்தார்.

"வா தாத்தா கீழே போகலாம். என் மனைவியும் பையனும் கூட வராங்க."

எல்லோரும் சேர்ந்து ராக்கெட்டில் ஏறி பூமியில் இறங்கி சுதாமாவின் வீட்டிற்குப் போனார்கள். சரித்திரப் ப்ரொஃபசரும் அங்கே வந்தார். அவரைப் பார்த்ததும் கோதண்டபாணிக்கு அருவருப்பாயிருந்தது. அவர் கழுத்து ஒட்டகைச் சிவிங்கியாப் போலிருந்தது தான் காரணம். சுதாமாவைப் பார்த்து வணங்கி விட்டு "சார்! உங்க தாத்தாவோடு இண்டர்வ்யூ பண்ணனும்னு வந்தேன்" என்றார் அவர்.

## 8

இன்டர்வ்யூ என்றதும் தாத்தாவுக்குக் குஷி பிறக்கத் தொடங்கிற்று "ஓ எஸ்" என்றார்.

"தாத்தா! நீங்க எங்க மாஸ்டருக்கு டைரெக்ட்டாய் பத்தாயிரம் சந்ததிக்கு முன்னால் இருந்த மூல புருஷர் அதனால் தான் உங்களைப் பிரத்யேகமாய் வரவழைத்தோம். எங்க மாஸ்டர் சுதாமா ஆகாசத்திலுள்ள உபகிரகத்தினைச் சேர்ந்த ஆறாவது தேசத்திற்கு அதிபதி. விண்வெளியிலுள்ள இதர நட்சத்திரக் கிரகங்களுக்கு அனுப்பும் ராக்கெட்டுகளை அவர் ஒருவரே கவன

மாய்ப் பரிசோதிப்பார். அந்த மாதிரி பெரிய மேதாவிக் குத் தாங்கள் மூல புருஷர்.."

கோதண்டபாணி, பேரனை கர்வமாய் பார்த்தார்.

"தாத்தா, உங்க காலத்தில் குலம், மதம், ஜாதி எல்லாம் உண்டோனோ? அதைப் பற்றி உங்கள் அபிப் பிராயம் என்ன?"

"குலம், மதம், ஜாதி எல்லாம்தான் உண்டு. அது கெட்டு விட்டால் சர்வ நாசமாயிடும்."

"ஆனால், இப்போ உங்க பேரன் மணந்த இப் பெண்ணின் குலம் என்ன ஜாதி என்னன்னு கூட தெரியாது. ஆனால் அவர் சர்வ நாசமாயிடலையே."

கோதண்டபாணி சங்கடத்தில் ஆழ்ந்தார். அவர் வருத்தமும் அதுதான். அந்தப் பெண் ஆர்த்தி (ஆம், சுதாமாவின் மனைவிக்கு தன் மனதிற்குள் அந்தப் பெயரை வைத்து விட்டார் அந்த நிமிஷமே) பார்ப்பதற்குப் பரவாயில்லை. ஆனால் தாய் தந்தையர் களைப் பார்த்தாலே வாந்தி வரும் போலல்லவா இருந் தது அவருக்கு! மிருகங்களைப் போல இருந்தார்கள்!

அவர் மனதிலிருந்த உணர்ச்சியை அந்த ஒட்ட கைச் சிவிங்கி படித்து விட்டது போலும்!

"பார்க்க அப்படியிருப்பாங்க. ஆனால் அவங் களுக்கு புத்தி ரொம்ப இருக்கே?" என்றான்.

"புத்தி யாருக்கு வேணும்! பார்க்கக் கொஞ் சமாவது மூக்கு முகம் நன்றாயிருக்க வேண்டாமா? ப்ரொஃபசர் என்னை இனி அந்த மாதிரிக் கேள்வி

*களைக் கேட்காதீங்க! இப்பவே ரொம்ப வருத் தமாயிருக்கு எனக்கு! என் பேரனைப் பார்த்து எத்தனை கர்வமடைந்தேனோ, அதற்கு இரு மடங்கு வருத்தப் பட்டேன். அவன் மனைவி வீட்டாரைப் பார்த்து"*

*ப்ரொஃபசர் எழுந்திருந்தார். போய் விட்டு வரு வதாய்ச் சொல்லி விட்டுக் கிளம்பினார்.*

*"இண்டர்வ்யூ என்றாரே, அவ்வளவுதானா? குலம் மதம் ஜாதியைப் பற்றி அவர் என்னை ஏன் அந்த மாதிரி துறுவித் துறுவிக் கேட்டார்டா?" பேரனை விசாரித்தார் கோதண்டபாணி.*

*"இப்போ விஞ்ஞான ரீதியில் இவ்வளவு சாதித் துட்டோம். இதையெல்லாம் பார்த்தாவது உங்க எண் ணங்கள் மாறிற்றா இல்லையான்னு தெரிஞ்சுக்கத்தான் கேட்டிருப்பார் தாத்தா" என்றான் சுதாமா.*

*"இந்த சயின்சு பைத்தியந்தான் மனிதனை முட் டாளாக்குது. இதைப் பார்த்து எப்படிடா மாறுவேன்? நீ அண்ட்ரோ மிடோ கெலாக்சியிலிருக்கும் கிரகத்துக் குப் போனால் அது யாருக்குத் தேவையாம்! உங்களுக் குப் பசியே கிடையாது, அதனால் என்ன கண்டீங்க? இதனால்தான் நீங்க நாத்திகராய் மாறீட்டிங்க! எந்தக் கடவுளின் கிருபையால் இதையெல்லாம் சாதிச்சீங் களோ அந்தக் கடவுளையே மறந்துட்டீங்க! உங்க வாழ்க்கையே வீண்தாண்டா! டேய் சுதாமா, நான் பழங்காலத்து மனிதன். என் கூட்டுக்குள் என்னை வாழ*

விடுங்கடா! ஜாதி கெட்டுப் போறதை என்னால் பார்த் துண்டு கம்மாயிருக்க முடியாது."

"என்னைப் பார்த்தால் அப்படியா தாத்தா தோணுது?"

"உனக்கென்ன ஸ்பெஷல்டா? நீயும் இந்த கும் பலைச் சேர்ந்தவன்தானே! அதான் நான் இங்கே வந்து பச்சைத் தண்ணீர்கூட அருந்தலை."

அப்பொழுது சுதாமனின் மனைவி ஆர்த்தி அங்கே வந்தாள்.

"ஹலோ தாத்தா குட்மார்னிங்" என்று கை குலுக் குவதற்காகக் கையை நீட்டினாள்.

அவருக்கு பதில் வணக்கம் செலுத்தத் தோன்ற வில்லை. கையையும் நீட்டப் பிடிக்காமல் வெறுமே இருந்து விட்டார்.

கோதண்டபாணியின் ஆபீசில் பல்வேறு குலத் தைக் சேர்ந்தவர்கள் கலந்து வேலை செய்தார்கள். அவர்களோடெல்லாம் ஒன்றாய்க் கலந்து பழகியவர் தான் அவர். ஆனால் அது ஆபீசு! இங்கேயோ அந்தப் பெண் அவர் பேரனின் மனைவியாய் எதிரே வந்து நின்ற பொழுது! அது அருவருப்பும் இல்லை; வெறுப்பு வெறுப்புக் கூட இல்லை. ஏதோ அவருக்கே உணர்ச்சி. அவள் வேறு குலத்தைச் சேர்ந்தவள் என்ற உணர்ச்சி தான் அப்போது தோன்றிற்று.

அப்பொழுது ஒரு சிறுவன் அங்கு வந்தான். பார்ப் பதற்கு ஏதோ மிருகத்திற்குப் பிறந்த மனித ஜாதியைப் போலிருந்தான் அவன்

"நம் மூல புருஷன்.. ஒரு தாத்தா" என்றான் அவரை அச் சிறுவனுக்கு காட்டி.

"தாத்தா!" என்று அவரை நோக்கி வந்தான் அவன். அந்த விசித்திர ஐந்து அவர் பேரனா? அவருக் குத் தலை சுழன்றது. அவன் அருகில் வந்த பொழுது கம்பளிப் பூச்சியைத் தாக்கினாற் போன்ற அருவருப்பு ஏற்பட்டது.

"என்ன படிக்கிறாய்?" கேட்டார் அவனை.

"இங்கெல்லாம் கிளாசுகள் இல்லை தாத்தா."

"பின்னே?"

"சயின்ஸ். நீங்க எம்.எஸ்.சி.யில் படிக்கும் சயின் சை இங்கே இவங்களுக்கு ஒண்ணாம் கிளாசிலேயே சொல்லித் தராங்க தாத்தா." இடைமறித்துச் சொன் னான் சுதாமா.

அப்பொழுது அந்த வில்லன், பத்தாம் தேசத்து அதிகாரி அங்கே வந்தான். (தாத்தா கோதண்டபாணி அவனுக்குத் தனக்குள் ஸ்டீஃபன் என்ற பெயரைச் சூட்டிக் கொண்டார்)

அவனைப் பார்த்ததும் கோதண்டபாணிக்குக் கோபமாய் வந்தது. அவருக்குச் சிரிப்பும் வந்தது தன் செயலுக்கே! பேரன் மனைவி ஆர்த்தியையும் அவர் களுடைய அருமந்த புத்திரனையும் பார்த்து அருவருப்

படைந்தாலும், அந்தப் பெண்ணை மணக்க வில்லனைப் போல வந்து முளைத்த அந்த ஸ்டீஃபனைப் பார்த்ததும் அவருக்கு ஏன் கோபம் வருகிறது? அது ஆச்சரியந் தானே! அவன் எதற்காக அங்கே வந்தான்? ஆர்த் தியைப் பார்க்கவா? சனியன் பிடித்தவன் ஆர்த்தியை இன்னும் காதலித்து வருகிறானா என்ன? இவன் மூளை சக்தி ரொம்ப அதிகமாமே! ஆர்த்தி அவனுக்கு சர்டிஃபி கேட் தந்தாள். அதாவது ஆர்த்திக்குக் கூட அவன் மேல் இது இருக்கிறதா என்ன? இல்லா விட்டால் தன் பேரனுக்குத் தெரியாமல் இந்த தடியனும் அவளும் சேர்ந்து கள்ளக்காதல் நடத்தி வருகிறார்களோ? யார் கண்டார்கள்! சீசி! இவங்க ரொம்பவும் சாதித்து விட்ட தாய் பீற்றிக் கொள்கிறார்கள்! ஆனால், புனிதமான திருமண பந்தம் என்றால் இவர்களுக்கு மதிப்பில்லை!

ஸ்டீஃபன் முறுவல் பூத்தான்.

"எம்ப்பா அந்த மாதிரி கேலிச் சிரிப்புச் சிரிக் கிறாய்?" கேட்டார் அவனை. அவனும் அவர் மனதி லிருந்த எண்ணத்தைப் படித்தறிந்து விட்டானா என்ன?

"ஒன்றுமில்லை தாத்தா, உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்."

அடப்பாவி! அவர் மனதிலிருந்ததைக் கண்டு பிடித்து விட்டானே!

"அதனால் தான் மனதில் ஒன்றையுமே நினைச்சுக் கக் கூடாது" என்றான் ஸ்டீஃபன்.

"*பாகுப்பா ஸ்டீஃபன்! நான் எதை நினைத்தாலும் உனக்குத் தெரிந்து போயிடுது இல்லே! அப்படியிருக்கும் போது என்னைப் பார்ப்பதற்குக் கஷ்டப்பட்டு இங்கே எதற்காக வரணும்? உண்மையில் என்னைத்தான் பார்க்க வந்தாயா, அல்லது பேரனின் மனைவியைப் பார்க்க வந்தாயா?*" *என்றார் கோபமாய்.*

*அவனுக்கு கோபம் வரும் என்றெண்ணினார். ஆனால் வரவில்லை. சிரித்துக் கொண்டே அவர் கையை தட்டினான்.*

"*தாத்தா! உங்களைப் போல எங்களுக்குப் பெண்களின் மேல் காதலோ, அன்போ, விரகதாபமோ ஏற்படாது! இப்பொழுது கல்யாணம் என்பதுகூட கேவலம் ஜீவ உற்பத்திக்குக் கூட இல்லை.*"

"*பின்னே எதற்கு?*"

"*விண்வெளியிலுள்ள எல்லா பொருட்களுமே இரண்டு வித்யாசமான வேறுபட்ட சக்திகளின் கலவை! உண்மையில் விண்வெளியே இருவேறுபட்ட சக்திகளின் ஆதாரத்தில் தான் நடைபெறுகிறது. நம்முடையது விஷயத்தோடு கூடிய விண்வெளி. இன்னொன்றோ விஷயமே இல்லாத விண்வெளி. இவ்விரண்டும் கலந்து மஹா விண்வெளி!*"

*அவன் பேசியது எதுவும் அவருக்குப் புரியவில்லை.*

"*உனக்குப் புரியாது*" *என்றான் அவன், சிரித்துக் கொண்டே.*

"புரியாதுன்னு தெரிந்தும் கூட ஏன் சொல்ல ணுமோ?"

"புரியுமோ என்னவோன்னுதான் சொன்னேன்!"

"அதைச் சொல்லத்தான் இத்தனை தூரம் கஷ்டப் பட்டு வந்தாயா? அப்படிச் சொல்லணும்னால் அந்த சுவர்த் திரையில் தென்பட்டுச் சொல்லியிருக்கலா மில்லே?"

"சொல்லலாம் தாத்தா. எங்களுக்குள் எது நடந் தாலும் அந்த மாதிரிதான் பேசிப்போம். ஆனால் நீங்க 1984லிருந்து வந்தவங்க. உங்க வழியே வேறு இல் லையா? எங்களிடம் வந்து சேர்ந்தவங்களைச் சுயமாய் அருகில் விசாரிப்பது தான் எங்கள் தர்மம்" என்று, பேரனை அணுகி கைகுலுக்கி விட்டுப் போய்விட்டான் அவன். அவன் போனபிறகு கோதண்டபாணியின் கோபம் பொத்துக் கொண்டு வெளி வரலாயிற்று.

"சனியன்! சனியன்" என்று கத்தினார்.

"தப்புத் தாத்தா!" என்றான் பேரனின் மகன் ரகு.

"போடா தடியா ஜாண் அளவு இல்லை, தப்பு எடுத்துச் சொல்ல வந்துட்டாயா? போ இங்கிருந்து" கத்தினார் அவர். அவன் அவர் கத்தலுக்கு பயப்பட வில்லை. முறுவலுடன் உள்ளே போய்விட்டான்.

அதற்குமேல் கோதண்டபாணிக்கு அங்கே இருக் கவே பிடிக்கவில்லை.

"உன் கட்டிடத்துக்குப் போகிறாயா தாத்தா?" சுதாமா கேட்டான்.

"ஆங்.."

சுதாமா சிங்காரத்தை அழைத்து அவரைப் புதிய கட்டிடத்திற்கு அழைத்துச் செல்லும் படி அனுப்பி வைத்தான்.

அவர் மனம் முழுவதும் ஏதோ மாதிரி ஆகி விட்டது. அந்த மிருக ஜந்துக்கள், கலப்பு ஜாதி, இவைகளே திரும்பத் திரும்ப மனத்திற்குள் வந்து வந்து அவரை அலைக்கழித்தன.

சிங்காரம் அவரையே பார்த்துக் கொண்டிருந் தான்.

"டேய் சிங்காரம்! எனக்குத் தூக்கம் வரது கொஞ்சம் படுத்துக்கறேன். நீ போ! எழுந்திருக்கும் வரை என்னைத் தொந்தரவு படுத்த வேண்டாம் போயிடு" என்றார்.

சிங்காரம் சுவரிலிருந்து மாயமானான்.

பொபொலவென்று பொழுது விடிந்த பொழுது, அந்த கிரகத்திலிருந்த எல்லாக் கட்டிடங்களுக்கும் விண் வெளி கிரகங்களில் சுற்றியலைந்து கொண்டிருந்த ஐம்பது லட்சம் ராக்கெட்டுகளுக்கும், விண்வெளி கிரகங்களிலிருந்த இருபது கோடி மனிதர்களுக்கும் நொடிப் பொழுதில் ஒரு செய்தி பிரசாரமாயிற்று.

"இன்று காலை நான்கு மணி இருபத்தெட்டு நிமிஷம் பத்து வினாடிக்கு ஆறாவது தேசத்துத் தலை வனான சுதாமனின் ஒரே மகன் கொலை பண்ணப் பட்டான். கொலையாளியைப் பிடிக்கப் பத்தாயிரம்

துப்பறியும் கருவிகள் வேலை பண்ணிக் கொண் டிருக்கின்றன. ஒரு மணி பத்து நிமிஷங்கள் கழிந்தும் கூடக் கொலையாளியைப் பற்றி இன்னும் தெரியாதது ஆச்சரியமாயிருக்கிறது. துப்பறியும் கருவிகள் எல்லாம் தோற்று விட்டன போலிருக்கிறது.."

## *9*

*சுதாமாவுக்கு முதல் முதலாகக் கண்ணீர் வந்தது. கண்களை மூடிக் கொண்டான். மகன் நினைவே மனக் கண் முன்னால் வந்து நின்றது.*

*ஒரு மரம் கூட இறந்து விட்டால் அதிலுள்ள சக்தியானது மேலே எழும்பிப் போய் விடுகிறது. பூத உடலில் உயிருள்ள பொழுது அப்பிராண சக்தியுடன் பேசுவது சுலபமே. அவ்வுயிர் போய் விட்டாலும் அச்சக்தி விண் வெளியிலேயே இருந்து விடுகிறது. அதனால் அப் பிராண சக்தியுடன் பேசுவது கூட சுலபந் தான்!*

*உலகில் எத்தனையோ ரேடியோ ஸ்டேஷன்கள் உள்ளன. எல்லாமே ஒரே அலையின் மேல் பிரசார மாகாது, வேறு வேறு அலைகளின் மேல் பிரசாரமாகும். இன்னின்னவைகளை இயக்கினால் இன்னின்ன ரேடி யோ ஸ்டேஷன்கள் கேட்கிறது. அது போலவே தான் ஒவ்வொரு உயிர் சக்திக்கும் ஒவ்வொரு விதமான அலை*

உண்டு. அந்த அலையை இயக்கினால் அவ்வுயிரோடு பேசமுடியும்!

சுதாமாவுக்குத் தன் மகனின் உயிர்ச்சக்தி அலையைப் பற்றித் தெரியும். கண்களை மூடிக்கொண்டு மகனின் உயிர்ச்சக்தி அலையைக் கொண்டு வர முயன்றான். ஆனால் சுதாமாவுக்கு மகனின் உயிரலை கிடைக்கவில்லை. அது வர மறுத்தது. சுதாமா மட்டுமின்றி விஞ்ஞானிகள் பலரும் கூட அதை இயக்கிப் பார்த்தார்கள். கம்ப்யூட்டர்களும் இயக்கிப் பார்த்தன. யாருக்குமே எந்தச் செய்தியும் எட்டவே இல்லை.

"ஆச்சரியமாயிருக்கே சுதாமா பையனின் உயிர் ட்யூனுக்கு ஏன் வரவே மாட்டேங்குது?" என்றார் விஞ்ஞானி ஒருவர்.

"இடையில் ஏதோ சக்தி தடுக்கிறது. ஒருக்கால் அவன் உயிர் நம் ட்யூனுக்கு வரவே வராதோ? என்னவோ!"

"பின்னே என்ன பண்ணலாம்?"

"கீழே பூமிக்குப் போய்ச் சுயமாய் பரிசோதிப்போம். என்னோடு வாங்க."

சுதாமனும் விஞ்ஞானிகள் சிலரும் கீழேயிருந்த சுதாமனின் வீட்டிற்குப் போனார்கள்.

ஆர்த்தி அறையில் தனியாக அமர்ந்திருந்தாள். உள்ளே மகனின் பிணம் கிடந்தது. நேற்றிரவு தாத்தா,

*சிங்காரம் முதலியவர்கள் போன பிறகு ஆர்த்தியும் படுத்துக் கொண்டார்கள். சுதாமா உப கிரகத்துக்குப் போய் விட்டிருந்தான்.*

*கணவனைப் பார்த்ததும் அவள் துக்கம் கட்டுக் கடங்காமல் போய் விட்டது. ஓவென்று அழத் தொடங்கினாள். விஞ்ஞானத்தில் எவ்வளவு முன்னேறி யிருந்தாலும் மனிதரால் இந்த உணர்ச்சிகளைத் தாண்ட முடியாது போலும்!*

*குழந்தை அவள் கர்ப்பத்தில் பிறக்க வில்லை. ஒன்பது மாதங்கள் கர்ப்பத்தில் வளருவதும் பிறகு பிரசவிப்பதும் எந்தக் காலத்திலோ போய் விட்டன. சுதாமனின் உயிரணுக்களையும் மிக உத்தமமான ஜீன்ஸையும் அவள் கர்ப்பத்துக்கு வெளியேயே சேகரித்து ஒன்பது மாதம் முடிவடைந்ததும் குழந்தை பிறந்தது. அவன் பிறந்ததுமே கம்ப்யூட்டர்கள் எல்லா விதமான பரிசோதனைகளையும் பண்ணி விட்டன.*

*பெரிய மேதாவியாவான் என்று கணக்கிட்டுத் தெரிவித்திருந்தன.*

*அப்படிப்பட்டவனைத் இப்பொழுது நிரந்தர மாய்க் கொன்று விட்டார்களே!*

*அத்தனை சின்னஞ்சிறுவனின் மேல் யாருக்கு அவ்வளவு வெறுப்பும் துவேஷமும் ஏற்பட்டிருக்கும்? முதலில் அந்தக் கிரகத்தில் இந்த மாதிரி கோபதாபங் கள். பொறாமைகள், வெறுப்புக்கள் என்பதே கிடை*

யாதே புதிதாய் இவைகளை யார் கொண்டு வந்திருப் பார்கள்?

சுதாமா ஒட்டகச்சிவிங்கி ப்ரொஃபசரைத் திரையின் மேல் வரச்செய்தான்.

"ப்ரொஃபசர், தற்சமயம் இந்தப் பூமியில் இருக் கும் ஒவ்வொரு மனிதனின் சரிதத்தையும் செக் பண் ணுங்கள். ஒவ்வொரு மனிதனின் பத்தாயிரம் முன்னோர் சந்ததிகளையும் சரித்திரப் பூர்வமாய் கண்டுக் கொள் ளுங்கள்."

"சரி சார்" என்றார் ப்ரொஃபசர். சுதாமா அறையி லிருந்த ஸ்மெல் டிடெக்டரிடம் போனான். நேற்றிரவு தான் அக் கட்டிடத்தை விட்டுப் போனதிலிருந்து காலையில் கொலை நிகழ்ந்த வரையிலும் அவ்வறைக்கு யார் யார் வந்தார்கள் என்பதை அக்கருவி கண்டு பிடிக் கும்.

டிடெக்டரின் ஸ்விட்சைப் போட்டான்.

ஒரே வினாடியில் இரண்டு நம்பர்கள் வந்தன.

"யார் யார் நம்பர்கள்?" கேட்டாள் ஆர்த்தி.

"ஒன்று உன்னுடையது. இன்னொன்று பையனு டையது."

"அப்படீன்னால் வேறு யாருமே இவ்வறைக்கு வரவே இல்லையா?"

"வராமலிருந்திருந்தால் இத்தனை மோசமாய் கொலை நிகழ்ந்திருக்குமா?"

சுதாமா பையனின் பிணத்திற்கருகில் குனிந்து கழுத்தைப் பார்த்தான். மென்னியைத் திருகிய அடையா ளம் தெளிவாய்த் தெரிந்தது.

இன்ஃப்ராரெட் டிடெக்டரின் மூலம் பரிசோதித் தான்.

விரலடையாளம் இல்லை. கையால் கழுத்தை முறித்துக் கொன்றிருத்தால் கொலையாளியின் கை உஷ்ணத்திற்கு பையனின் மேனியில் அடையாளம் விழுந்திருக்கும். அக் கொலையாளி கையில் ஏதாவது அணிந்திருந்தால் அக் கையின் ரேடியேஷன் மேனியில் பட்டிருக்கும். ஆனால் அத்தகைய எந்தச் சின்னமும் இல்லை.

"சரியாய்ப் பையனின் மேனிச் குடும், கொலை யாளியின் உடல் உஷ்ணமும் ஒன்றாய் இருந்திருக்கும்."

"அதெப்படி முடியும்? ஒரு டிகிரியில் கோடியில் ஒரு பாகம் வித்யாசமாயிருந்தாலும் டிடெக்டர்கள் கண்டு பிடித்து விடுமே?''

"நிஜந்தான். ஆனால் பையனின் உடல் சூட்டை யும் தன் உடல் சூட்டையும் சரியாக்கிக் கொண்டு, ஒரே ரீதியில் இருக்குமாறு செய்து கொண்டு கொலை பண்ணியிருப்பார்கள்."

சுதாமாவுக்கு ஒரு சந்தேகம் உதித்தது. என்ன தான் தன் உஷ்ணத்தையும் பையனின் உஷ்ணத்தையும் சரி சமமாக்கிக் கொண்டு கொன்றிருந்தாலும் மென்னி யைத் திருகுங்கால் கொலையாளி விட்ட சுவாசம்

குழந்தையின் மேனியைத் தாக்கிப் பதிந்து விட்டிருக்கும்.

குழந்தையின் மேனியின் மேல் டிரெக்டரை வைத்துப் பரிசோதித்தார்கள்.

ஆர்த்தி சுவரிடம் போனாள். அவ்வறையில் நிகழ்ந்த கொலையை சுவரிலிருந்த அணுக்கள் கிரகித்து விட்டிருக்கும்.

கழுத்தைத் திருகிக் கொன்ற பொழுது, குழந்தையின் உயிரானது பலவந்தமாய் வெளியே தள்ளப் பட்டிருக்கும், அப்பொழுது அந்த உயிர்ச்சக்தி சுவரிலுள்ள அணுக்களைத் தாக்கிப் பதிந்து போயிருக்கும் என்பதை அவள் அறிவாள். டிடெக்டரைச் சுவரில் இணைத்துப் பரிசோதித்தாள்.

அறையின் சூழ்நிலை அமைதியாய் இருப்பதைப் போலக் காட்டிற்று.

சுவரும் அந்த கோரக் கொலையைப் பதிவு செய்யாமல் இருந்ததுதான் அவர்களுக்குப் புரியவே இல்லை.

"பையனின் உடலை பூமிக்குள்ளிருக்கும் கட்டிடத்திற்கு அனுப்பி வை ஆர்த்தி. அவன் மூளையை அவர்கள் எடுத்து பத்திரப் படுத்தி வைப்பார்கள்" என்றான் சுதாமா.

ஆர்த்தி அசையவில்லை. மகனுக்கருகில் உட்கார்ந்து கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தாள்.

சுதாமா அவளுக்கருகில் வந்து தோளில் கை வைத்தான். அவள் அழுது தீர்த்துவிட்டாள்.

"நம்மால் குழந்தையைம் பிழைப்பிக்க முடி யாதா?"

சுதாமனுக்கு அந்த யோசனையே உதிக்கவில்லை பிறந்த ஒவ்வொரு உயிரும் உயிரணுக்கள் நலிந்தால் தான் இறக்க நேரிடும். ஆனால், இம்மாதிரிப் மரண மடைந்தவர்களைப் பிழைப்பிப்பதைப் பற்றி அவன் யோசித்துப் பார்த்தவனில்லை. கொலை என்ற செயலை அவர்கள் என்றோ மறந்து விட்டிருந்தார்கள். அதனால், மனிதன் பலவந்தமாய்க் கொல்லப்பட்டால் திரும்பி உயிர்பிப்பதைப் பற்றிய செயலைப் பற்றியே அவர்கள் பரிசோதிக்கவில்லை.

சுதாமா உடனே ஆசுபத்திரியுடன் தொடர்பு கொண்டான். திரையில் டாக்டர் தென்பட்டார்.

"டாக்டர்! குழந்தையின் உடலை உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். அவனைத் திரும்பவும் பிழைக்க வைக்க முடியுமா?"

"பிழைக்க வைப்பதா? சரி உடனே அனுப்புங்கள் முயற்சி பண்றேன்."

குழந்தையின் சரீரத்தை உடனே அனுப்பி வைத் தார்கள்.

சுதாமா சோபாவில் சாய்ந்து முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டான். ஆர்த்தி அவனை நெருங் கினாள்.

"குழந்தை பிழைப்பாங்கிறீங்களா?"

சுதாமா நிமிர்ந்து பார்த்தான்.

"பிழைப்பது பிழைக்காமல் போவது இருக்கட்டும்! இத்தனை புகழ் பெற்ற நம்முள் இத்தனை கோரமான கொலை நிகழ்ந்ததுன்னால்.. அதைத் தெரிந்துக்க முடியாமல் போவது மனித குலத்துக்கே சர்வ நாசம் தான். நமக்குக் கொலையாளியைக் கண்டு பிடிக்கத் தெரியா விட்டால் போகட்டும். நம் இயந்திரங்களே ஃபெயிலாகி விட்டதென்றால் அந்தத் தீய சக்திக்கு எவ்வளவு சக்தி இருந்திருக்கும் என்பதை நினைத்தால் தான் பயமாயிருக்கிறது."

திரையில் பூமிக்குள்ளிருக்கும் கட்டிடத்திலிருந்து செய்தி வந்தது.

"சுதாமா! நீங்க ஒரு முறை இங்கே வர்றீங்களா?"

"வரேன்."

சுதாமனும் ஆர்த்தியும் கிளம்பிப் போனார்கள்.

பூமிக்குள் மூன்று மைல் ஆழத்தில் உலோகத் தாலான பெரிய கட்டிடம் ஒன்றிருந்தது. இங்கு எந்த ஒளிக்கிரணங்களும் ஊடுருவிச் செல்ல முடியாது. இரண்டு லட்சம் ஆண்டுகளாய் அந்த பூமியில் ஜீவித்து வந்த மனிதர்கள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு மைக்ரோ ஃபிலிமில் ரிகார்டு பண்ணிப் பத்திரப் படுத்தியிருந்தார்கள். அந்தச் சரித்திர பாகத்திற்கு ஒட்டகச் சிவிங்கி ப்ரொஃபசர் தான் அதிகாரி.

சுதாமா, ஆர்த்தி இருவரையும் அவர் வரவேற்றார்.

"ப்ரொஃபசர், எங்க பூர்விக முன்னோர்களின் சரித்திரத்தைப் போட்டுப் பாருங்கள்" என்றான் சுதாமா.

"ஏன் உங்க வம்சத்தினரின் மீதே உங்களுக்குச் சந்தேகமா?" கேட்டாள் ஆர்த்தி.

"பார்ப்போமே."

ப்ரொஃபசர் பட்டனை அழுத்தினார். சுதாமாவின் வம்சம் மெதுவாய்ச் சுழன்று வந்தது.

பத்தாயிரத்து வம்சம் வந்ததும் சுதாமா ஸ்விட்சை அணைத்து விட்டான்.

"அது உங்க தாத்தா கோதண்டபாணியின் நம்பர்."

"ஆமாம். அதைப் பரிசோதியுங்கள்."

ஆர்த்தி அவனை வினோதமாய் நோக்கினாள்.

"என்ன? தாத்தா மேல் உங்களுக்கு சந்தேகமா?" என்றாள்.

சுதாமா பதில் பேசவில்லை.

ப்ரொஃபசர் பேசாமல் கோதண்டபாணியின் நம்பரை எடுத்து மற்றொரு கம்ப்யூட்டரிடம் தந்தார்.

"தாத்தாவின் மூளை அலை எப்படியிருக்கும் ப்ரொஃபசர்?"

"ரொம்பத் தெளிவாய் இருக்கு."

"மறுபடியும் செக் பண்ணுங்கள்."

ப்ரொஃபசர் திரும்பத் திரும்ப செக் பண்ணினார், எத்தனை முறை பண்ணிய போதிலும் கோதண்டபாணியின் மூளை மிகத் தெளிவாய்த்தான் இருந்தது.

"அவருள் எந்தக் களங்கமும் இல்லை சுதாமா."

ஆர்த்தி இடைமறித்து, "அவரையா சந்தேகிக் கிறீர்கள்? அவர் தன் சொந்தப் பேரனைக் கொல் லுவாரா?" என்றாள்.

"இல்லை இல்லை இல்லை! அப்படிச் சொல் லாதே ஆர்த்தி! சும்மா என் வம்சத்தை நான் செக் பண் ணியிருக்கேன். அவ்வளவுதான்.. ப்ரொஃபசர் இங்கே மனித குலத்தில் இறுதியாய் நிகழ்ந்த கொலையை யார் பண்ணினார்கள் என்பதையும் அவன் சரிதத்தையும், பாருங்கள்" என்றான் சுதாமா.

அக்கொலையைப் பற்றி எல்லோருக்குமே தெரிந் தது தான். அதனால் அவர் சட்டென்று அந்த நம்பரை எடுத்தார்.

"இதோ."

"அவன் வம்சம் அதற்குப் பிறகு நிலைத்ததா? அதில் இப்பொழுது யார் எஞ்சியிருக்கிறார்கள் என்று பாருங்கள்."

"இல்லை சுதாமா. அவனுக்கப்புறம் அவன் வம் சமே அழிந்துடுத்து" என்றார் ப்ரொஃபசர்.

"ஆனாலும் செக் பண்ணிப் பாருங்கள்."

ப்ரொஃபசர் அந்த இறுதி ஆளின் கார்டை எடுத்து, கம்ப்யூட்டரில் வைத்துப் பட்டனை அழுத் தினார். அது கிர்ரென்று சுழன்று ஓரிடத்தில் நின்று விட்டது.

நம்பரைப் பரிசோதித்தார்கள்.

ப்ரொஃபசர் ஆச்சரியத்துடன் பார்த்தார்.

"சுதாமா... ஒருவன் இருக்கிறான்?"

"யாரது?"

"அந்தக் கொலையாளிக்கு நூறாவது வம்சத்தில் வந்தவன்."

"அவன் நம் கம்ப்யூட்டருக்கு அகப்படாமல் எப் படித் தப்பித்தான்?"

"வட துருவத்திற்கருகில் பரிசோதனையின் போது இறந்து விட்டான். அவன் மனைவி அங்கேயே ஒரு குழந்தையைப் பெற்றாள்."

"அக்குழந்தைக்குப் பிறகு வந்த அவன் வம்சத்தைப் பரிசோதியுங்கள்."

கம்ப்யூட்டரின் பட்டனை அழுத்தினார்கள். ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ஆண்டுகள் ஓடின. ஆனால் யாரிலுமே கொலை பண்ணும் குணம் தென்பட வில்லை. பிறகு வந்த வம்சத்தில் ஒருத்தன் வந்தான். அவன் சற்று வினோதமான குணங்களைக் கொண் டனாய் இருந்தான். பிறகு ஒவ்வொருவராய் சோதித்து வந்த கம்ப்யூட்டர் ஓரிடத்தில் வந்ததும் நின்றுவிட்டது.

"நம்பர் எத்தனை?"

"70..30..6..202."

"அந்த நம்பர் ஸ்டீஃபனுடையது."

"ஸ்டீஃபனா குழந்தையைக் கொன்றான்? ஆர்த்தி ஆச்சரியம் மேலிட்டவளாய் கேட்டாள்.

"தெரியாது."

"ஆனால், அவனிடம் கொலை பண்ணும் குண மிருப்பதாய்க் கம்ப்யூட்டர் சொல்லுகிறது."

"சொல்லுகிறது. ஆனால் அவன்தான் செய்தான் என்று சொல்லலையே" என்றார் ப்ரொஃபசர்.

"அதை ஒப்புக்காதவங்க யார்?" கம்ப்யூட்டரைக் கேட்டான்.

நான்கு பேர் திரையில் தெரிந்தார்கள். அப்படி யானால் நீங்கள் ஸ்டீஃபனை ஆதரிக்கிறீங்களா?"

"சுதாமாவின் ஆதிக்கத்தை வெறுக்கிறோம். அத னால் ஸ்டீஃபனை ஆதரிக்கிறோம்னு இல்லை."

"ஒருத்தருக்கே அதிகாரத்தைத் தூக்கி வைப்பதால் எவ்வளவோ புதிய பிரச்னைகள் தலையெடுக்கலாம்."

திரும்பவும் சர்ச்சைகளும் வாதங்களும் எழும்பின.

"இத்தனைக்கும் முக்கியமான விஷயத்தை மறந் துட்டீங்க. இந்தக் கொலையை ஸ்டீஃபன் தான் செய் தான்னு என்ன சாட்சி?"

கேட்டார் ஒரு விஞ்ஞானி.

"அவரையே அழைத்து விசாரிப்போம்."

ஸ்டீஃபனுடன் தொடர்பு கொண்டார்கள்.

அவன் திரையில் வருவதற்கே ஒப்புக்கவில்லை. எத்தனை முயற்சி பண்ணியும் முடியவில்லை.

ஒரே ஒரு வினாடி மட்டும் அவன் குரல் கேட் டது.

"என்னை முயற்சி பண்ண யாருக்கும் உரிமை இல்லை. ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள் யாருக்குமே உரிமை கிடையாது."

அதனால், அந்தப் பூமியிலிருந்த மொத்தம் 16 தேசங்களுக்கும் ஒரே தலைவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள் அனைவரும்.

யாரைத் தேர்ந்தெடுப்பது?

சுதாமாவைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ஆறு விஞ்ஞானிகள் முடிவெடுத்தார்கள். நால்வர் "கூடாது" என்று எதிர்த்தார்கள்? ஸ்டீஃபன் வராததால் அவனுக்கு ஓட்டு இல்லை.

சுதாமன் பேசாமலிருந்தான். இந்த அதிகாரம் தலைமை எல்லாம் மனிதனை எங்கே இட்டுச் செல் லுமோ? இத்தனை ஆண்டுகளாய்ச் சாதித்த சாதனை களும் புகழ்களும் அதிகாரத்தால் சர்வநாசமாகி விடப்போகிறதே என்றெண்ணி வருந்தினான்.

ஆறு பேர் ஒத்துக் கொண்டதால் சுதாமனையே தலைவனாய்த் தேர்ந்தெடுத்தார்கள்.

இறுதியில் ஸ்டீஃபனைக் கைது பண்ணிக் கொண்டு வரும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஸ்டீஃபனைக் கைதாக்கி அழைத்துக் கொண்டு வருவதற்கு பத்துப்பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர் கள் உடனே போய் அவனைக் கைதாக்கிக் கொண்டு வருவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இக் காட்சிகளையெல்லாம் தன் திரையில் பார்த்துக் கொண்டிருந்த ஸ்டீஃபன் கடகடவென்று சிரித்தான்.

"என்னையா கைது பண்ணப் போறாங்க? வரட்டும்" என்று தன் ஆதீனத்திலுள்ள இருபது லட்சம் மனிதர்களைத் தன் நாட்டைச் சுற்றிக் காவலாய் இருக்கும் படி உத்தரவிட்டான். யாராவது தன் நாட்டிற்குள் அடியெடுத்து வைத்தால், லேசர் கிரணத்தால் அவர்களைப் பொசுக்கி எரித்து விடுமாறு உத்தரவிட்டான்.

## 10

ஸ்டீஃபனைக் கைதாக்கிக் கொண்டு வருவதற்காக, ஐந்து நிமிஷங்களில் இரண்டு ராக்கெட்டுகளில் ஏறி விஞ்ஞானிகள் சிலர் பத்தாம் தேசத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

ராக்கெட்டிலிருந்த டி.வி. திரையில் ஸ்டீஃபன் தென்பட்டான்.

"உங்கள் தூதுக்கு நான் வரத் தயாரில்லை. போய் விடுங்கள்" என்றான் ஸ்டீஃபன்.

"ஸ்டீஃபன்! அனாவசியமா எதற்கு மனஸ்தாபம்? எங்கள் பேச்சைக் கேளுங்கள்."

"ஏன் கேட்கணும்! நான் அவர் மகனைக் கொன்று விட்டதாய்ச் சுதாமா நினைக்கிறான். ஆனால் எனக்

கொன்றுமே தெரியாதுன்னு சொன்னாலும் என் பேச்சை நம்பாமல் உங்களை அனுப்பியிருக்கிறான். என் பேச்சில் நம்பிக்கையில்லாத உங்கள் தூதை நான் எதற் காக ஒப்புக்கணும்? ப்ளீஸ் போய்விடுங்கள். நீங்கள்."

"ஸ்டீஃபன்! எங்கள் பேச்சைக் கேளுங்க! நீங்க குற்றமற்றவராயிருந்தால் உங்களுக்கு ஒன்றுமாகாது! எங் களை வர விடுங்கள் ப்ளீஸ்."

"ஜனங்களெல்லாம் கூடி இங்கே படையெடுத்து வந்தாலும் நான் ஒப்புக்க முடியாது. போயிடுங்கள்! நீங்கள் என் நாட்டுக்குள் இறங்க முயன்றால் நாட்டைச் சுற்றிலுமுள்ள லேசர் கிரணங்கள் உங்களைச் சுட்டுப் பொசுக்கி விடும்."

இவைகளைத் திரையில் பார்த்துக் கொண்டிருந்த சுதாமனும், இன்னும் சில விஞ்ஞானிகளும் ஆச்சரிய மடைந்தார்கள். தன் நாட்டைச் சுற்றி லேசர் கிரணங் களை அவன் எப்பொழுது எதற்காக வைத்திருக்கிறான்? யாரிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள எண்ணி இவ்வாறு செய்திருக்கிறான் அவன்!

"ஸ்டீஃபன் அப்படிப் பண்ணிடாதே நாங்கள் அழிந்து போனாலும் பரவாயில்லை. யுத்தம் என்றால் என்னவென்றும், அது இரண்டு லட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்தப் பூமியை எவ்வாறு நாசமாக்கி விட்டுப் போயிற்றென்றும் உங்களுக்குத் தெரியாதா? ப்ளீஸ். எங்களை வரவிடுங்கள். லேசர் கிரணங்களை அணைத்து விடுங்கள்."

"கடைசித் தடவையாய் சொல்லுகிறேன். உங்கள் போதனை எனக்குத் தேவையில்லை. ப்ளீஸ் திரும்பிப் போய் விடுங்கள்" என்று கத்தினான் ஸ்டீஃபன்.

இதையெல்லாம் திரையில் பார்த்துக் கொண் டிருந்த சுதாமா ராக்கெட்டைத் திரும்பி வந்து விடும் படி சொல்லப் போனான். ஆனால் அங்கிருந்த எஞ்சிய நாட்டு விஞ்ஞானிகள் அதை ஒப்புக்கவில்லை.

"அவன் என்ன பெரிய உத்தரவிடுவது? அவன் உத் தரவுக்கு பயந்து ராக்கெட் திரும்பி விடுவதா? நடக் காது."

"அனாவசியமாய் அவர்கள் எரிந்து போய் விடு வார்கள். இது என் சம்பந்தப்பட்ட விஷயம். அவர்கள் இறப்பது எனக்குப் பிடிக்கலை."

"இது உன் விஷயமா? இறந்தது உன் மகனாய் இருக்கலாம். ஆனால் கொலை என்பது மனிதர்கள் எல்லோருக்குமே சேர்ந்த நிகழ்ச்சி! இன்றைக்கு உன் மகன் கொலையுண்டான். நாளைக்கு நம் எல்லோரை யும் கூடக் கொன்று விடுவான். அப்பொழுது என்ன வாகும்? முடியாது சுதாமா? அவர்களை ஸ்டீஃபன் ஏதாவது செய்தால் பார்த்துப்போம்! சுதாமா ராக்கெட் டுகளுக்கு உத்தரவு கொடு."

விருப்பமில்லவாதிலும் அவர்களின் பலவந்தத்தால் ராக்கெட்டிற்கு உத்தரவளித்தான் சுதாமா.

"ராக்கெட்டுகளைத் திருப்பாதீர்கள். நாட்டுக்குள் இறங்குங்கள்."

ஸ்டீஃபன் வெகுண்டான்.

"திரும்பிப் போய்விடுங்கள். மூன்று எண்ணி முடிப்பதற்குள் திரும்பிப் போயிடணும், இல்லா விட்டால் நீங்களும் சரி, உங்கள் ராக்கெட்டும் சரி பொசுங்கிப் போக வேண்டியதுதான்."

அந்த பூமியிலுள்ள பதினாறு தேசங்களுக்கும் உப கிரகத்திலிருந்து சூரியனின் சக்தியானது மின்சக்தியாய் மாறி சப்ளை ஆகிக் கொண்டிருந்தது. அதை அணைத்து விட்டால் பத்தாம் தேசத்திலிருக்கும் மின்சாரம் பாதிக்கு மேல் நின்று விடும்.

சுதாமா ஸ்விட்சை அழுத்தினான். ஆனால்

சுதாமா மின்சார சப்ளையை அணைத்த போதிலும், பத்தாம் தேசத்து மின்சக்தி குறையவேயில்லை. சுதாமா ஆச்சரியமடைந்தான். எஞ்சிய விஞ்ஞானிகளைப் பார்த்து எப்படி இன்னும் மின்சாரம் குறையாமலிருக்கு" என்று கேட்டான்.

ஒருக்கால் ஸ்டீஃபன் தன் பத்தாம் தேசத்தில் உற்பத்தி பண்ணிக் கொள்கிறானோ என்னவோ?"

"நமக்குத் தெரியாமல் எப்படிப் பண்ணுவான்?"

"இத்தனை பண்ணுகிறவன் இதையும் பண்னவா மாட்டான்? இந்தக் கெட்ட புத்தி அவனுக்கு ரொம்ப நாளுக்கு முன்பே தோன்றியிருக்கிறது. இல்லாவிட்டால் தம் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் சக்தி அவனுக்கேது?"

"சீக்கிரத்தில் அந்த ரகசியத்தைக் கண்டு பிடித்துத் தடுத்து விடுங்கள்." என்றான் சுதாமா.

பத்து விஞ்ஞானிகள் அக்காரியத்தில் முனைந்தார் கள்.

அங்கே..

இரண்டு ராக்கெட்டுகளும் பத்தாம் தேசத்திற்குள் நுழைந்தன.

முதல் லேசர் கிரண எல்லையைத் தாண்டிக் கொண்டு சென்றன.

"இன்னும் மிஞ்சி விடவில்லை திரும்பிப் போயி டுங்கள்" கத்தினான் ஸ்டீஃபன்.

"ஸ்டீஃபன் நாங்க சொல்றதைக் கேளுங்கள்" என் றார்கள் விஞ்ஞானிகள்.

இரண்டு ராக்கெட்டுகளும் முன்னோக்கிப் பறந் தன. இரண்டாவது லேசர் கிரணம் மிகவும் பலம் வாய்ந்தது. அதற்குள் ராக்கெட் நுழையத் தொடங்கி யதுமே வெளியேயிருந்த லட்சம் டிகிரி உஷ்ணமானது ராக்கெட்டை அதிக உஷ்ணப்படுத்தியது. உள்ளிருந்த விஞ்ஞானிகள் திணறினார்கள்.

"ஸ்டீஃபன் ப்ளீஸ்! நாங்கள் தூதர்கள்! லேசர் கிர ணங்களை நிறுத்தி விடுங்கள்." விஞ்ஞானிகளுக்குக் கோபம் வந்தது. பத்துப் பேரும் சேர்ந்து ஒரேயடியாய் ஸ்டீஃபனின் பங்களாவைச் சென்றடைவதற்குள் பெரு த்த ஓசையுடன் ஆகாசத்திலேயே சுக்கு நூறாய் உடை ந்து பொசுங்கிப் புகை போன்று வானில் பறந்து

*மறைந்தது. கண்மூடித் திறப்பதற்குள் இது முடிந்து விட்டது.*

*சுதாமா தலையில் கை வைத்து உட்கார்ந்து விட்டான்.*

*"பத்துப் பேரும் கூண்டோடு போயிட்டாங்க."*

*"சுதாமா! இனிமேல் நாம் இப்படி உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை.. சூரிய சக்தியையெல்லாம் ஸ்டீஃபனின் பங்களாவிற்குள் அனுப்பி அதை அழித்துத் தள்ள வேண்டும்" என்றார் விஞ்ஞானி.*

*"எல்லாச் சக்தியையும் அங்கே கொண்டு போயிட் டால் எஞ்சிய நாடுகளில் வேலை குறைந்து விடுமே."*

*"பரவாயில்லை. ஒரு நிமிஷம் நிறுத்தி விட்டு ஸ்டீஃபனின் பங்களாவை நாசம் பண்ணிடுங்க!"*

*பத்து பேரை ஸ்டீஃபனை பொசுக்கி விட்ட செய்தி வினாடி நேரத்தில் கிரகங்கள் நட்சத்திரங்ளி லிருந்த ஜனங்களுக்கெல்லாம் எட்டிவிட்டது. எல்லோ ரும் ஸ்டீஃபனை எப்படியாவது அடக்க வேண்டும் என்றெண்ணினார்கள்.*

*ஸ்டீஃபன் உடனே தன் நாட்டைச் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்திக் கொண்டு விட்டான். இச் செய்தி எல்லா நாட்டினருக்கும் அறிவுறுத்தப்பட்டது.*

*யாராயிருந்தாலும் சரி, தன் நாட்டுக் குடியுரிமை யைப் பெற்றிராதவர்கள் தன் நாட்டிற்குள் நுழைய*

நேர்ந்தால் தன் நாட்டைச் சுற்றிலுமுள்ன லேசர் கிரணம் அவர்களைப் பொசுக்கி விடும் என்றும் அறிவுறுத்தி விட்டான்.

ரொம்பப் பேருக்குக் கோபம் வந்தது. இது வரை யிலும் சுதாமாவை எதிர்த்து ஸ்டீஃபனுக்குச் சார்பாகப் பேசியவர்கள் கூட இப்பொழுது சுதாமாவின் பக்கம் சேர்ந்து கொள்ளத் தொடங்கினார்கள்.

உண்மையில் ஸ்டீஃபன் பயன்படுத்திய லேசர் கிரணங்களுக்கு அத்தனை சக்தி எப்படி வந்தது என்ப தைப் சோதிக்கத் தொடங்கினார்கள் விஞ்ஞானிகள். கிரணங்களுக்கும் மசியாத ஆன்ட்டி மேட்டர்களுடன் தயார் செய்த ஒரு ராக்கெட்டை ஸ்டீஃபனின் நாட் டிற்கு அனுப்பி வைத்தார்கள்.

ஆனால் அதுவும் லேசர் கிரணத்தால் பொசுங்கிப் போகத் தொடங்கிற்று.

சுதாமா என்ன பண்ணுவதென்று புரியாமல் கலங் கினான்.

"ஸ்டீஃபனின் நாட்டிற்குள் மூன்று ஸ்டெப்பில் லேசர் கிரணத்தை வைத்திருக்கிறான். மூன்றாவது ஸ்டெப்பிற்குள் அடியெடுத்து வைக்கும்போது அபாயம் நேரிட்டு விடுகிறது. அதனால் அந்த மூன்றாவது லேசர் கிரனம் சாதாரணமானதாய் இருந்திருக்காது அவை ஆன்ட்டி மேட்டர் லேசர் கிரணங்கள்!" என்றார்கள் விஞ்ஞானிகள்,

"ஆன்ட்டி மேட்டரா? அந்த மாதிரி வேறுபட்ட பொருளை அவன் எப்படிச் சம்பாதித்திருப்பான்?" கேட்டான் சுதாமா.

"தானே தயாரித்துக் கொண்டிருப்பான்."

"அப்படீன்னால் நாமும் தயாரித்துக்கலாமே அந்த மாதிரி வேறுபட்ட லேசர் கிரணத்தை?"

சுதாமா பட்டனை அமுக்கினான்.

விண்வெளி எல்லையைத் தாண்டி எங்கோ சுற்றிக் கொண்டிருந்த ராக்கெட் தென்பட்டது

"ரவி.. உங்களுக்கருகில் ஆன்ட்டி மேட்டர் நட்சத்திரம் இருக்கோனோ?"

"இருக்கு சுதாமா."

"நான் கேட்கும் போது.. அதன் கிரணத்தை இந்த பூமியை நோக்கிச் செலுத்தணும். செய்வாயா?"

"ஆன்ட்டி மேட்டர் நட்சத்திரக் கிரணமா? பூமி எரிந்து கரியாகி விடுமே."

"ஆகாது ஓரிடத்தைக் காட்டுகிறேன். அங்கே ஒரு வினாடியில் கோடியில் ஒரு பாகம் ஃபிளாஷைப் போல அதை அனுப்பி வையுங்கள்."

"ஆனால்.."

"எவ்வளவோ அவசரமானதால் வேண்டிக்கிறேன். நான் எப்பொழுது கேட்கிறேனோ அப்பொழுது பிளாஷ் பண்ணி வையுங்கள்.. உணர்ச்சி அலைகள் மூலம்.

"சரி சுதாமா."

அவன் திரையிலிருந்து மறைந்தான்.

சுதாமா எஞ்சிய விஞ்ஞானிகளைப் பார்த்துப் பெருமூச்செறிந்தான்.

*11*

"அதிர்ஷ்டமோ துரதிர்ஷ்டமோ தெரியாது. என் மகன் இறக்க நேர்ந்தது. அதன் மூலம், ஸ்டீஃபனின் ரகசியங்கள் பல தெரிய வந்தது. யாருக்கும் தெரியாமல் ஸ்டீஃபன் ஆன்ட்டி மேட்டர் ஆயுதங்களைத் தயாரித்து வைத்திருக்கிறான். இன்றில்லாவிட்டால் நாளைக்காவது இதனை ஜனங்களின் மேல் ஏவியிருப்பான்."

"ஸ்டிஃபனுக்கு ஏன் இந்த மாதிரி கெட்ட புத்தி தோன்றிற்று?"

"அவன் பிறந்த வேளை கொஞ்சம் மனித இயல்புக்கு வேறுபட்ட வேளை."

அவர்களுக்கு ஆட்சி என்ற ஒன்று இல்லாத போதிலும் எல்லோரும் சேர்ந்து அந்த பூமியைப் பதினாறு தேசங்களாய் பிரித்துக் கொண்டிருந்தார்கள். ஸ்டீஃபன் இருந்த பத்தாம் தேசம் பூகோளத்தின் அந்தப் பக்கத்திலிருந்தது. அந்தப் பக்கந்தான் ஆகாசத்தில் ஸாட்டலைட் (ஒரே இடத்தில் ஸ்திரமாய் இருக்கும் உபகிரகம்) இருந்தது. அந்த உபகிரகத்தில் ஐந்தாயிரம் பேர் விஞ்ஞானிகள் இருந்தனர். இந்தப் பக்கமாயிருந்த எட்டுத் தேசத்து அதிபதிகளும் சுதாமனைச் சேர்ந்தவர்

கள். அந்தப் பக்கமாயிருந்த ஒன்பதாம் பதினாறாம் தேசத்தவர்களைத் தவிர எஞ்சிய ஆறு தேசத்தவர்களும் ஸ்டீஃபனைச் சேர்ந்தவர்கள்.

"நீங்கள் சும்மாயிருந்தால் லாபமில்லை. ஏதாவது ஒரு பக்கத்தில் சேரணும்" என்றான் ஸ்டீஃபன் ஒன் பதாம் பதினாறாம் தேசத்தவர்களைப் பார்த்து.

"அதெப்படி முடியும் கோடி ஜனங்களுக்கு மின்சார ஆகாரத்தைத் தயாரித்துத் தருகிறோம். நாங்கள் யாராவது ஒருத்தர் பக்கமாய்ச் சேர்ந்து விட்டால், இந்த நானூறு கோடி ஜனங்களுக்கும் அநியாயம் பண்ணினது போல ஆகுமே."

"எனக்கு அதெல்லாம் தேவையில்லை! ஏதோ ஒன்றைத் தீர்மானித்துக்கணும்."

"எங்களால் முடியாது."

"நடக்காது. மூன்று நிமிஷங்கள் தரேன். அதற்குள் நீங்கள் யாரையாவது சேர்ந்து விடணும். இல்லா விட் டால் உங்கள் மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள நேரிடும்."

"என்ன நடவடிக்கை எடுப்பீங்க? அது அநியாய மில்லையா?"

"நியாய அநியாயம் எனக்குத் தேவையில்லை. சீக்கிரமாய் தீர்மானித்துக்கங்க. இப்போதே ஒரு கழிந் துடுத்து."

இரண்டாவது நிமிஷமும் கடந்தது.

சுதாமன் கலவரமடைந்தான்

ஸ்டீஃபன் ஒருக்கல் அந்த தேசங்களின் மேல் லேசர் கிரணங்களை அனுப்பி விடுவானோ? என்ன செய்வோம்?

சுதாமா சட்டென்று பூலோகத்திற்கு மறு பக்க மிருந்த ஜியோஸ்டிக்கில் இருந்த விஞ்ஞானிகளைத் தொடர்பு கொண்டான்.

"ஸ்டீஃபன் அவர்களின் மேல் லேசர் கிரணங்களை அனுப்பி விடுவானோ என்னவோ? நீங்கள் கட்டுப் படுத்துங்கள்" என்றான் சுதாமா.

"முயற்சிக்கிறோம் சுதாமா."

ஸ்டீஃபன் தந்த மூன்று நிமிஷக் கெடுவும் முடிவ டைந்து விட்டது.

"இன்னொரு நிமிஷம் டைம் தரேன். ஏதோ ஒன்று தீர்மானித்துக்குங்க" என்றான் ஸ்டீஃபன்.

"நாங்கள் எந்த பக்கமும் சேரமுடியாது" என்றார் கள் அவர்கள்.

உபகிரகத்திலிருந்து சுதாமனும், இரண்டாவது உப கிரகத்திலிருந்து விஞ்ஞானிகளும் ஸ்டீஃபன் அனுப்பிய லேசர் கிரணத்தை எதிர்ப்பதற்கு எல்லாவிதமான கிரணங்களையும் அனுப்பினார்கள்.

"என்ன சொல்கிறீர்கள்?" ஸ்டீபன் இறுதியாய்க் கேட்டான்.

"எங்கள் தீர்மானம் மாறாது."

ஸ்டீஃபன் உடனே பட்டனை அழுத்தினான்.

இரண்டு லேசர் கிரணங்கள் ஸ்டீஃபனின் கட்டிடத்திலிருந்து புறப்பட்டு, சந்திரனின் மேல் பொருத்தியிருந்த ஒளியைப் பிரதிபலிக்கும் கருவியின் மேல் பட்டு, வினாடி நேரத்தில் அந்தப் பூமியை நோக்கி வந்து ஒன்பது பதினாறாம் தேசத்தில் விழுந்து சிதறின. ஆகாசம் முழுவதும் மேகங்களால் சூழ்ந்தது போலாயிற்று.

ஷாக் அலைக்கு உயகிரகம் தடுமாறிற்று.

அவ்விரண்டு தேசத்திலும் சுமார் இருபத்தைந்து லட்சம் பேர் ஜனங்கள் இருந்தார்கள். எல்லோரும் அக்கிரணத்தின் வெப்பத்தால் கருகிச் சாம்பலாகி விட்டார்கள்.

சுதாமா தலையைப் பிடித்துக் கொண்டு அப்படியே சரிந்தான்.

"அடுத்த நிமிஷமே ஸ்டீபன் எஞ்சிய நாட்டையும் கூட நாசமாக்கிவிடுவான் சுதாமா" என்றார்" விஞ்ஞானி.

சுதாமனுக்குச் சட்டென்று ஒரு யோசனை உதித்தது.

"அவன் உபயோகிக்கும் லேசர் கிரணங்கள் பூகோளத்திற்கு இந்தப் பக்கமாய் வராது."

"எப்படி?"

"தன் நாட்டைச் சுற்றி ஸ்டீபன் மூன்று விதமான லேசர் கிரணக் கவசங்களைத் தயாரித்து வைத்திருக்கிறான். அதனால் அவன் லேசர் கிரணங்களை அனுப்ப விரும்பினால், முதலில் சந்திரனின் மேலுள்ள ஒளியைப்

பிரதிபலிக்கும் கருவியின் மேல் அந்தக் கிரணத்தைச் செலுத்தி விட்டுப் பிறகு விடுகிறான். அக்கிரணங்களை எத்தனை வேகத்துடன் உபயோகிக்கிறானோ அத்தனை வேகத்துடன் அது வந்து தாக்குகிறது. அதனால் சந்திரனின் மேலேயுள்ள சாதனத்தை முறித்துத் தள்ளி விடுவோம்" என்றான் சுதாமா.

உடனே சுதாமா லேசர் கிரணங்களை உபகிரகத்தி லிருந்து சந்திரனை நோக்கி அனுப்பினான். அது ஒளியை பிரதிபலித்து விட்டுப் பூகோளத்தின் லட்ச மைல்கள் உயரத்தில் போகத் தொடங்கிற்று. இரண்டு நிமிஷங்கள் அக்கிரணத்தைச் சந்திரனின் மேலுள்ள ஒளிப்பிரதிபலிக்கும் கருவியின் மேல் குறி பார்த்து வைத்தான். அக்கருவி சூடு பிடித்துத் தூள் தூளாகி விட்டது.

அண்ட்ரோமிடா கெலாக்சியிலிருந்து ஸ்டீபனின் அட்டகாசங்களைப் பார்த்துக் கொண்டிருந்த சுதா மனின் தந்தை அதற்கு மேல் தாளமுடியாதவரானார். இன்னும் கொஞ்சம் போனால் ஸ்டீபன் அண்ட வெளியிலுள்ள சகல கிரகங்களையும் கூட நாசமாக்கி விடுவான். என்ன செய்யலாம் என்று யோசிக்கத் தொடங்கினார்! உடனே விண்வெளிக் கிரகங்களில் சுற்றிக் கொண்டிருந்தவர்களை அழைத்து யோசனை கேட்டார்.

"என்ன பண்ணலாம்? நிலைமை இன்னும் மோச மாயிண்டிருக்கே?" என்றார்கள் அவர்கள்.

"இங்கே நம்மிடம் எந்த விதமான கொல்லும் கருவிகளுமில்லை, அதனால் நாம் நேராய் அவனிருக் குமிடம் போவோம். நம் இடைப்புகுந்து வேண்டிக் கொண்டால் ஸ்டீஃபனின் மனம் மாறலாம் என்றார் சுதாமாவின் தந்தை.

ஸ்டீபன் இவ்வார்த்தைகளைக் கேட்டான்.

"நீங்கள் இல்லை. விண்வெளியிலுள்ள அத்தனை சக்தியும் ஒன்று சேர்ந்து வந்தாலும் பொசுக்கித் தள்ளி விடுவேன்." என்று சொல்லி விட்டுத் தன்னிடமுள்ளவர் கள் என்னென்ன வேலைகள் பண்ணவேண்டும் என் பதை உத்தரவிட்டான்.

ஒன்பது, பதினாறாம் தேசங்கள் நாசமாகி விட்ட தால் சுதாமனுக்கு மூன்று பிரச்னைகள் தலையெடுத்தன.

ஒன்று.. முதலில் ஸ்டீபனின் சக்தியை ஒடுக்க வேண்டும். இரண்டாவது.. அந்தப் பூமியிலும் விண் வெளியில் உள்ள கிரகங்களிலும் சுற்றிக் கொண் டிருந்தவர்களுக்கு மின்சாரம் உடனே கிடைக்க வழி பண்ண வேண்டும்.

மூன்று.. விண்வெளியிலுள்ள கிரகங்களில் திரிந்து கொண்டிருந்தவர்கள் அத்தனை சீக்கிரத்தில் பூமிக்கு வரக் கூடாது. வந்தால், இங்கே மேலும் குழப்பம் ஏற்படும். அத்துடன் அன்றிரவு பன்னிரண்டு மணிக்கு டிசம்பர் 31 முடிவடைகிறது. அதாவது 199, 999-ம் வருடம் முடிவடைந்து இரண்டு லட்சத்து வருஷம்

தொடங்குகிறது. இந்த விழாவிற்கு யுக புருஷர் களனைவரும் பல்வேறு காலத்திலிருந்து வந்து சேர்ந் திருந்தார்கள். அவர்களுக்கு எந்தக் கஷ்டமும் நேரிடா மல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

சில விஞ்ஞானிகளை மின்சாரத்தை உடனே சப்ளை பண்ணும்படி அனுப்பி வைத்தான்.

சிலரை விண்வெளி கிரகங்களில் சுற்றிக் கொண் டிருக்கும் மனிதர்களோடு பேசும் படி நியமித்தான்.

எஞ்சிய எல்லா விஞ்ஞானிகளையும் ஸ்டீபனின் சக்தியைப் பரிசோதித்து அதை எவ்வாறு கட்டுப் படுத்துவது என்பதைக் கண்டு பிடிக்குமாறு அனுப்பி வைத்தான்.

குழந்தை எவ்வாறு இருக்கிறானோ? உயிர் வந் திருக்குமா? இப்பொழுது மகனுடைய உயிர் முக்கிய மில்லை. மனிதர்களை அழிவிலிருந்தும் இந்தப் பிரளயத் திலிருந்தும் தடுத்துக் காப்பாற்ற வேண்டும்.

அதிர்ஷ்டவசமாய் சில முக்கிய பாகங்கள் சுதா மனின் ஆதீனத்தின் கீழிருந்தன. மனிதனின் சரித்திரங் கள் எல்லாம் ஆறாவது தேசத்துப் பூமிக்குள்ளிருந்த கட்டிடத்தில் இருந்தன. விண்வெளியிலிருந்த கோடானு கோடி நட்சத்திரங்களைப் பற்றிய விவரங்களும், கெலாக்சிகளைப் பற்றிய விவரங்களும், எந்தெந்த கிரகங்களுக்கு எதற்காக மனிதர்களை அனுப்பினோம் என்ற விவரங்களும் ஆறாம் தேசத்திலேயே இருந்தன. சூரியன் அந்தப் பக்கமாய் இருக்கும்பொழுது அதன்

*சார சக்தியைப் பூமிக்கு அனுப்பி வைக்கும் ஒன்றாம் உபகிரகம் கூட இந்தப் பக்கந்தான் இருந்தது. ஆனால் அதிகப்படியான காஸ்மோடிராம்கள் பத்தாம் தேசத்தில் தான் இருந்தன. விண்வெளியிலிருந்து ராக்கெட்டுகள் முதலியன வந்தால் இந்தப் பக்கமாய் இறங்க இட மில்லை. ஒருக்கால் ராக்கெட் வந்தாலும் அதிலிருக்கும் ஜனங்களை ஆறாவது தேசத்தில் இறக்கி விட்டுவிட்டு காலி ராக்கெட்டுக்களை சுக்கிர கிரகத்தின் மேல் கட்டின காஸ்டிமோராம்களுக்கு அனுப்பி விடவேண்டு மென்று தீர்மானித்துக் கொண்டார்கள். சிலவற்றைச் சந்திரனின் மேல் வேறு பக்கமாய் அனுப்பி வைக்க வேண்டும்.*

*லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் வரை சுக்கிர கிரகத்தில் சல்ஃப்யூரிக் ஆசிட், கந்தகம், தாதுக்கள், ஆன்ட்டிமோனஸ் குளோரைடு, ஆர்ஸினிக் ஆக்ஸைடு முதலியவைகள் இருந்து வந்தன. உஷ்ணமானது 465 டிகிரி சென்ட்டி கிரேட். அழுத்தம் 94. ஆனால் இப் பொழுதோ சுக்கிரகிரகத்தின் உஷ்ண நிலை 90 டிகிரி சென்ட்டிகிரேட் மாத்திரமே அங்கே இருப்பது கடின மாதலால் விண்வெளி உடையணிந்து கொண்டு சிலர் திரிந்து வந்தனர். அவர்களுடன் தொடர்பு கொண்டு ராக்கெட் இறங்குவதற்கு காஸ்மோடிராம்ஸ்களைத் தயாராய் வைத்திருக்கும் படி சொன்னான் சுதாமா.*

எட்டு தேசங்களிலும் நூறு கோடி கட்டிடங்களை ஒரே மணி நேரத்தில் கட்டி முடித்து விட வேண்டிய தாய்ச் சில விஞ்ஞானிகளை அனுப்பிவைத்தான்.

பூமிக்கடியிலுள்ள பரிசோதனைச் சாலையிலிருந்த விஞ்ஞானிகளைத் திரைக்கு வரவழைத்தான்.

"பத்துக்கோடி டிகிரி உஷ்ணத்தைத் தாங்கக் கூடிய இரும்பு மனிதர்களைப் படைக்குமாறு சொன் னேனே, எது வரைக்கும் ஆகியிருக்கிறது?" கேட்டான்.

"நூறு வரைக்கும் படைத்திருக்கிறோம் சுதாமா."

"ஆன்ட்டி மேட்டருடன் சிலவற்றைப் படைக்கச் சொன்னேனே?"

"பத்துப் படைத்திருக்கிறோம்."

"அவைகளை ஜாக்கிரதையாய் ஸ்டீபனின் நாட் டுக்கு ராக்கெட்டில் அனுப்பி வையுங்கள். அந்த நாட்டில் மூன்று விதமான ஆன்ட்டிமேட்டர் லேசர் கிரணங்கள் இருக்கின்றன. முதல் இரண்டு மேட்டர் லேசர் கிரணங்கள், மூன்றாவது ஆன்ட்டி மேட்டர் லேசர் கிரணங்கள்! முதலிரண்டு லேசர் கிரணங் களையும் ராக்கெட்டுகள் சமாளிக்க முடிகிறது. ஆனால் மூன்றாவது ஆன்ட்டிமேட்டரைச் சமாளிக்க முடியாமல் எரிந்து விடுகிறது. ஆனால் இரும்பு மனிதன் ஆன்ட்டி மேட்டரானதால் அந்த மூன்றாவது எல்லைகளுக்குள் சுலபமாய் போய்விடும். அதனால் அவற்றில் இந்த இரும்பு மனிதனை வைத்து ஜாக்கிரதையாய் அனுப்பி வையுங்கள்.

"சரி சுதாமா."

"அவை ஸ்டீபனின் நாட்டிற்குள் நுழைந்து என்ன பண்ண வேண்டுமென்று சொல்லியனுப்புங்கள். எப் பொழுது அனுப்புகிறீங்க?"

"ஐந்தே நிமிஷத்தில் அனுப்புகிறோம்."

"சரி."

சுதாமா அவர்களோடு பேசிக் கொண்டிருக்கையி லேயே ஆகாயத்திலிருந்து ராக்கெட்டுகள் வரத் தொடங்கின. சுமார் ஐநூறு இருந்தன. சுதாமா அவை களைப் பார்த்தான். ஒவ்வொன்றிலும் நூறு பேர் மனிதர் கள் இருந்தார்கள். அவைகள் எல்லாம் ப்ரேக்சிமா நட்சத்திரம், அல்ஸா சென்டரி, பெர்னார்டு நட்சத்திரம், லாரண்ட் நட்சத்திரம், உல்ஃப் நட்சத்தி ரம் முதலிய பல்வேறு நட்சத்திரங்களிலிருந்து வந்தவை.

அவர்கள் ராக்கெட்டிலிருந்து இறங்கியதுமே பூமிக்கடியிலிருந்த கட்டிடத்திற்கு அவர்களை அனுப்பி விட்டு, காலி ராக்கெட்டுக்களைச் சந்திரனுக்கு அனுப்பி விட்டார்கள்.

அதற்குள் பூமிக்கடியிலிருந்த கட்டிடத்திலிருந்த விஞ்ஞானிகள் திரையில் வந்தார்கள்.

"சுதாமா! இரும்பு மனிதர்களை அனுப்புகிறோம் உத்தரவு தாருங்கள்." என்றார்கள்.

"அனுப்புங்கள்" என்றான் சுதாமா.

## *12*

*பூமிக்கு அடிவாரத்திலிருந்து பத்து ராக்கெட்டுகள் வெளியே வந்தன. எல்லாவற்றையும் வரிசையாய் நிறுத்தினார்கள்.*

*விஞ்ஞானிகள் சிக்னல் தந்து விட்டுப் பட்டனை அழுத்தினார்கள்.*

*ராக்கெட் பத்தும் 90 டிகிரிகள் செங்குத்தாய் விண் வெளியில் பறந்தன. 300 மைல்கள் ஆகாயத்தில் போன பிறகு, திரும்பி 90 டிகிரிகள் போகத் தொடங்கி ஸ்டீபன் நாட்டிற்குள் நுழைந்தன.*

*முதல் எல்லைக்குள் நுழைந்தன. எச்சரிக்கை பிறந்தது. "போய் விடுங்கள்" என்று. ஆயினும் அவை ஊடுருவிச் செல்லலாயின.*

*இரண்டாவது எல்லையைத் தாண்டத் தொடங்கிய பொழுது ராக்கெட் ஐம்பதாயிரம் டிகிரி உஷ்ணம் ஏறிவிட்டது. இன்னொரு எச்சரிக்கை வெளிவந்தது. உஷ்ணம் மேலும் அதிகரித்தது. லட்சம் பத்து லட்சம், கோடி டிகிரிகள் வரை! ராக்கெட்கள் மூன்றாவது லேசர் கிரண எல்லைக்குள் நுழைந்தன.*

*நுழைந்ததுமே ராக்கெட்டுகளின் மேல் பாகம் வினாடி நேரத்தில் தூள் தூளாகி விட்டது.*

*உள்ளேயிருந்து ஆன்ட்டி மேட்டருடன் தயாரித்திருந்த இரும்பு மனிதர்கள் பாராச்சூட்டின் உதவியுடன் மெதுவாய் ஸ்டீபனின் தேசத்திற்குள் இறங்கினார்கள்*

ஸ்டீபன் வியப்படைந்தான். இரும்பு மனிதரால் மூன்றாவது லேசர் கிரணக் கட்டத்திலிருந்து எப்படித் தப்பித்து வரமுடிந்ததென்று விளங்கவில்லை அவனுக்கு. லேசர் கிரணத்தின் சக்தியை மேலும் அதிகமாக்கினான். கோடி டிகிரிகள் உஷ்ணம் பிடித்தது. ஆயினும் பத்து இரும்பு மனிதர்களும் ஸ்டீபனின் தேசத்திற்குள் மனித சஞ்சாரமற்ற இடம் பார்த்து இறங்கி விட்டனர்.

அந்த பத்து மேட்டர் இரும்பு மனிதர்களும் வைத்தது தான் தாமதம், நொறுங்கித் தூளாகி விட்டனர்.

திரையில் அவை தூளாகி எரிந்து சாம்பலாகிக் கொண்டிருந்த காட்சியைக் கண்டு ஸ்டீபன் சிரித்தான். அவை உடைந்து மேலே எரிந்து சாம்பலாகிக் கொண்டிருந்த அக்னி சிதையிலிருந்து, மேட்டருடன் தயாராகியிருந்த பத்து இரும்பு மனிதர்களும் வெளியே முன்போலவே வந்து விட்டதை ஸ்டீபன் உணரவில்லை.

ஆனால் இருபத்தைத்து மைல்களுக்கப்பாலிருந்த டிடெக்டர் கருவி மட்டும் அதை உணர்ந்து விட்டது. ஸ்டீபனுக்குச் செய்தியனுப்பியது. பத்து இரும்பு மனிதர்களும் அந்த டிடெக்டர்களை தம் ஆன்ட்டி மேட்டர் லேசர் கிரணங்களால் கட்டுப் பொசுக்கி விட்டனர்.

பத்து இரும்பு மனிதர்களும் அருகிலிருந்த ஏரிக்குள் நுழைந்தனர். செய்தியை சுதாமாவுக்கு அனுப்பினர்.

"நாட்டில் இறங்கி விட்டோம். ஏரிக்குள் இருக்கிறோம்."

"அங்கேயே இருங்கள். இப்பொழுது ஆட்களை அனுப்புகிறேன்." என்று சுதாமா பூமிக்கடியிலிருந்த கட்டிடத்திற்குச் செய்தி அனுப்பினான். "இன்னொரு தடவையும் அதே போல ராக்கெட்டுகளை அனுப்புங் கள். ஆனால் உள்ளே மனிதர்களை அனுப்புங்கள்."

"சரி சுதாமா."

ஸ்டீபன் நான்கு ராக்கெட்டுகளை சுதாமனின் உப கிரகத்தை நோக்கி அனுப்ப சித்தமானான்.

இந்த ரகசியத்தை சுதாமா தெரிந்து கொண்டான். உப கிரகத்திலிருந்த விஞ்ஞானிகளனைவரையும் பூமிக்கு அனுப்பி விட்டான்.

"உங்களை விட்டுவிட்டுப் போவதா?" என்றார்கள் அவர்கள்.

"பரவாயில்லை. எனக்கு ஒன்றுமாகாது. நீங்கள் முதலில் கீழே போங்கள். அந்த ராக்கெட்டுகள் மணி க்கு இருபதாயிரம் மைல் வேகத்தில் இந்தப் பக்கமாய் வந்து கொண்டிருக்கின்றன. இன்னும் பத்தே நிமிஷத் தில் இந்த உபகிரகத்தை நோக்கி வந்து லேசர் கிரணத்தை செலுத்தக் கூடும். நீங்கள் போய் விடுங்கள். ப்ளீஸ்." என்று வேண்டிக் கொண்டான் சுதாமா.

ஆனால் அவர்களோ எந்தச் சூழ்நிலையாயிருந்தா லும் சரி, போகமுடியாது என்று மறுத்து விட்டார்கள்.

சுதாமா பெருமூச்செறிந்தான்.

ஸ்டீபனின் நாட்டு எல்லையில் ஏரிக்குள் ஒளிந்து கொண்டிருந்த பத்து இரும்பு மனிதர்களுக்கும் செய்தி அனுப்பப்பட்டது

"ஸ்டீபன் உபகிரகத்தை நோக்கி ராக்கெட்டை அனுப்புகிறான். அது ஆகாயத்தில் ஏறியதுமே ஆன்ட்டி மேட்டர் லேசர் கிரணத்தால் சுட்டுப் பொசுக்கி விடுங்கள்."

ஏரிக்குள்ளிருந்து பத்து லேசர் கிரணங்களும் வெளியே வந்தன. அதற்குள் ராக்கெட்டுகள் ஆகா யத்தை துளைத்த படி மேலே எழும்பிப் போய்க் கொண்டிருந்தன.

அவற்றின் மேல் பத்து இரும்பு மனிதர்களும் லேசர் கிரணங்களை எடுத்து ஏவினர். ஒரே வினாடியில் ஸ்டீபனின் ராக்கெட்டுகள் தூள் தூளாகிவிட்டன.

ராக்கெட் இன்னும் தன் பூமி எல்லையைத் தாண்டவேயில்லை. அதற்குள் எரிந்து விட்டதைக் கண்டு ஆச்சரியமடைந்த ஸ்டீபன் தன் எல்லைக்குள் ஏதோ ஒளிந்து கொண்டிருக்க வேண்டும் என்று சந்தேகப் பட்டான். அதைக் கண்டு பிடிக்க டிடெக்டர் கருவியை நிறுவினான். ஏரிக்கருகில் பத்து இரும்பு மனிதர்கள் இருந்ததைக் கண்டுப் பிடித்து அது ஸ்டீப னுக்குச் சொல்லி விட்டது.

ஸ்டீபன் அவை இருந்த இடத்தை திரையில் சரி யாய்க் கண்டு லேசர் கிரணத்தை அவைகளை நோக்கி அனுப்பினான்.

ஆனால் அக்கிரணத்தின் உஷ்ணம் இரும்பு மனிதர்களை ஒன்றும் பண்ண முடியவில்லை. அப்படியானால் தன் லேசர் கிரணத்தின் உஷ்ணநிலையைத் தெரிந்து அதனை முறியடிக்க இந்த இரும்பு மனிதர்களைத் தயாரித்திருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டான்.

உடனே ஆன்ட்டி மேட்டர் ராக்கெட்டை ஏரிப் பக்கமாய் திருப்பிச் சுட்டான்.

அடுத்த நிமிஷமே ஆன்ட்டி மேட்டர் ராக்கெட் ஏரியின் மீது வந்து விழுந்தது. பெருத்த ஓசையுடன் அங்கே இருநூறடி பெரிய ஓட்டையாகி விட்டது. அந்தப் பள்ளத்திற்குள் வழுக்கி விழுந்து பத்து இரும்பு மனிதர்களும் அதள பாதாளத்தில் போனதும் அது மூடிக் கொண்டது.

விண்வெளியில் மேலும் ஆயிரம் ராக்கெட்டுகள் சுதாமனின் வீட்டிற்கு மேல் வந்து நின்றன. அதிலிருந்த மனிதர்களைக் கட்டிடங்களுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு ராக்கெட் லாரெண்ட் நட்சத்திலிருந்து வந்திருந்தது. அதிலிருந்து சுதாமனின் மாமனார் இறங்கினார்.

"சுதாமாவை உடனே பார்க்கணும்."

"இப்போ முடியாதுங்க" என்றார்கள் விஞ்ஞானிகள்

"ரொம்ப முக்கியம்."

உடனே விஞ்ஞானிகள் சுதாமனுடன் தொடர்பு கொண்டு விசாரித்தார்கள்.

"உபகிரகத்துக்கு அனுப்புங்கள்" என்றான் சுதாமா.

சுதாமனின் மாமனாரை ராக்கெட்டில் உபகிரகத் திற்கு அனுப்பினார்கள். அவர் தன்னோடு ஒரு பெட்டியை எடுத்துச் சென்றார்.

உபகிரகத்திற்குப் போய்ச் சேர்ந்ததும், அவர் ஒரு தாது வஸ்துவை சுதாமனுக்குக் காட்டினார்.

"இதென்னங்க?"

"லாரெண்ட் நட்சத்திரத்தில் நிலத்தைத் தோண் டிக் கொண்டிருந்தபோது இரண்டாயிரம் அடிகளுக்குக் கீழே இந்த தாது கிடைத்தது."

சுதாமா அதனை உற்றுப் பார்த்தான்.

ஒன்றரை அங்குலம் நீள அகலத்தில் ஆறங்குலம் பரப்பளவுடன் இருந்தது அது.

"இது என்ன தாது?"

"தெரியாது. நமக்குத் தெரிந்த தாது இதைப் போன்றது எதுவுமே கிடையாது. தாதுக்களை சூடாக் கினால் திரவ ரூபமடையும். மேலும் சூடாக்கினால் ஆவியாகி விடும். இதையோ குளிர்ச்சி செய்தால் தான் திரவமாகிறது. இன்னும் குளிர்வித்து அதாவது மைனஸ் ஐநூறு டிகிரிக்கு குளிர்வித்தால் ஆவியாகிறது. இதன் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், இது தன் சுய

உருவத்திலிருக்கும் பொழுது இதன் மேல் எவ்வளவு உஷ்ண சக்தியை அனுப்பினாலும் அதற்கு நூறு மடங்கு உஷ்ணசக்தி அதிகரித்து, அதனைப் பின்னோக்கிப் பரப்பி விடுகிறது."

சுதாமனுக்குச் சட்டென்று ஓர் உபாயம் தோன்றிற்று. இதனைப் பிற்பாடு மெதுவாய்ச் சோதித்துப் போம். அதுவரை இதனைக் குளிர்வித்து (மைனஸ் 274 டிகிரி சென்ட்டிகிரேடிற்கு) அந்த திரவத்தை உப கிரகத்திற்கு ஜீரோ புவியீர்ப்புச் சக்தியுடன் குளிர்ந்த நீராய்த் தெளித்தால் அதன் மேல் எந்த லேசர் கிரணம் பட்டாலும் அது பின்வாங்கி விடும் என்றுத் தீர்மானித்துக் கொண்டான்.

உடனே அதுபோலவே தெளிக்கச் செய்தான். எஞ்சியவைகளைக் கீழ் பூமிக்கு அனுப்பி, ராக்கெட்டுகளிலும் தெளித்து, ஸ்டீபனின் நாட்டைச் சுடச் சொன்னான். அவை ஸ்டீபனின் நாட்டு எல்லைக்குள் நுழைந்து மூன்று லேசர் கிரணங்களையும் தாண்டி நுழைந்து இறங்கத் தொடங்கின

அதிலிருந்து வரிசையாய் இரும்பு மனிதர்கள் இறங்கி, ஸ்டீபனின் நாட்டில் மின்சாரங்களை உற்பத்தி செய்யும் பிளாண்ட்டை நோக்கிச் சென்றனர்.

அவற்றை ஸ்டீபனின் டிரெக்டர் கருவி கண்டு விட்டு ஸ்டீபனுக்குச் செய்தியைத் தெரிவித்து விட்டன. ஸ்டீபன் அவைகளை லேசர் கிரணத்தால் அழித்து விட சொல்லி உத்தரவிட்டான்.

லேசர் கிரணங்கள் இரும்பு மனிதர்களின் மேல் பட்டு பின்னோக்கி பரப்பத் தொடங்கியதால், லேசர் கிரணத்தை அனுப்பிய ஸ்டீபனின் இயந்திரங்கள் அந்த உஷ்ணத்தால் எரிந்து சாம்பலாகி விட்டன.

ஸ்டீபனின் நாட்டில் மின்சாரத்தை சப்ளை பண்ணும் பிளாண்ட் எங்கே இருக்கிறதென்று சில இரும்பு மனிதர்கள் தேடத் தொடங்கினார்கள்.

இறுதியில் அந்த இடத்தைக் கண்டு பிடித்து விட்டார்கள். உடனே அச்செய்தியை உபகிரகத்திற்கு அனுப்பி விட்டார்கள்.

"சார்! மின்சாரத்தை பூமிக்கடியிலுள் கட்டிடத்தில் உற்பத்தி பண்றாங்க."

"எவ்வளவு ஆழத்தில் அந்த பிளாண்ட் இருக்கு?"

சில இரும்பு மனிதர்கள் கம்ப்யூட்டரின் உதவி யுடன் அவை இருக்குமிடத்தைக் கண்டு பிடித்தனர்.

"நாலு மைல் ஆழத்தில் இருக்கிறது. லட்சத்துக் கோடிக் கோடி மெகாவாட் மின் சக்திகளை அவை தயாரிக்கின்றன."

"அத்தனை மின்சக்தியைத் தயாரிக்கிறானா? வியப் படைந்தான் சுதாமச். "நீங்கள் ஒரு காரியம் பண்ணுங் கள். அந்த பிளாண்ட்டை நாசம் பண்ண வேண்டாம். அது நின்று போய்விடும் படி செய்து விடுங்கள்."

"சரி."

சில பிளாண்ட்டுகளை லேசர் கிரணங்களால் அணைக்க முடிந்தது. ஆனால் இங்கே ஏறக்குறைய

*பாதிக்கும் மேற்பட்ட மின்சாரம் நின்று விட்டாலும் சமுத்திரத்திற்கு நடுவிலிருந்த இன்னொரு பிளாண்ட் மின்சாரத்தை சப்ளை பண்ணிக் கொண்டேயிருந்தது.*

"*சுதாமா! ஸ்டீபனை இந்த மாதிரி வழிக்குக் கொண்டு வரமுடியாது அவன் நாட்டையே பொசுக்கித் தீர்த்துட வேண்டியதுதான்*" *என்றார்கள் விஞ்ஞானிகள்.*

"*வேண்டாம். இத்தனை பிரளயத்தையும் தோற்று வித்தவன் அந்த ஸ்டீபன் ஒருவன்தான்! எஞ்சிய மனி தர்கள் பாவம், என்ன பாவம் செய்தார்கள்?*"

"*ஆனால் ஸ்டீபன் இரண்டு நாட்டை அழித்து விட்டானே! அவனுக்கில்லாத கருணையை நாம் மட்டும் அவன் மேல் காட்டணுமா?*"

"*அதற்குக் காரணம் அவன்தானேயன்றி அந்த நாட்டு ஜனங்களில்லை.*"

"*அப்படியானால் அவனைப் தேடிப்பிடித்து இழுத்து வந்து சுட்டுத் தள்ளணும்*"

"*வேண்டாம். இந்த மாதிரி கொடூர புத்தி அவனுக்கு ஏன் தோன்றிற்று என்று பரிசோதிக்க வேண்டும். மேலும் ராக்கெட்டுகளை அந்த நாட்டிற் குள் இறக்குங்கள். அந்த நாட்டின் எல்லா பக்கங்களி லிருந்தும் அந்த ராக்கெட்டுகளை அனுப்பி, இடையில் அவன் எங்கே இருக்கிறான் என்று கண்டுபிடித்துச் சிறைப் பிடித்து இழுத்து வரவேண்டும்*"

*விஞ்ஞானிகள் பதில் பேசாமல் ஒப்புக் கொண் டார்கள்.*

விண்வெளியிலிருந்து மேலும் இரண்டாயிரம் ராக்கெட்டுகள் வந்து இறங்கின. அதில் ஒரு ராக்கெட் அன்ட்ரோமிடா கெலாக்சியிலிருந்து வந்தது. அதிலிருந்து கதாமாவின் தந்தை இறங்கினார். நேராய் உபகிரகத்திற்குச் சென்றார்.

"என்னப்பா சுதாமா இது?" கேட்டார் மகனை.

"தெரியாதுப்பா, பையனின் சாவைப் பற்றி நான் அவனிடம் கேட்கப் போய் அவனுக்கு இத்தனை கோபம் வந்து விட்டது. ஒருக்கால் கோபம் வந்தாலும் என் ஒருவன் மீதுதானே வரணும்? ஆனால் மரணாயுதங்களை மனிதர்களின் மீது ஏன் ஏவவேண்டும்?"

"நான் ஸ்டீபனுடன் பேசுகிறேன், தொடர்பு கொடு."

"பலனில்லை. அவன் நம் திரைக்கு வர மாட்டான்."

"முயற்சி செய்."

சுதாமா, ஸ்டீபனைத் திரையில் வரவழைக்கப் பாடு பட்டான். அவன் வரமறுத்தான். இறுதியில் சுதாமனின் தந்தை அரும்பாடு பட்டு அவனைத் திரைக்கு வரவழைத்தார்.

"ஸ்டீபன் உன்னோடு பேசணும்."

"நான் யாருடனும் பேசமாட்டேன்."

"சரி பேச வேண்டாம். இந்தக் கொல்லும் தொழிலையாவது உடனே நிறுத்திவிடு."

"சாரி சார்! இவ்வளவு தூரத்துக்கு வந்துவிட்ட பிறகு நிறுத்த முடியாது. இரண்டில் ஒன்று தெரிந்து விடனும்."

"அதுவரைக்கும் போனால் இந்த பூமியில் யாருமே மிஞ்சி இருக்க முடியாது. அப்பொழுது நீ மட்டும் இருக்கவா போகிறாய்? ப்ளிஸ் என் பேச்சைக் கேளு."

"முன்பே சொல்லிட்டேன், யாராயிருந்தாலும் கேட்க முடியாது."

"பிடிவாதம் பண்ணாதே, நான் அங்கே வரேன். நேராய்ப் பேசுகிறேன்."

"அது மட்டும் வேண்டாம். வந்தாலும், சாரி சார் நீங்களும் இறக்க நேரிடும்."

சுதாமாவின் தந்தை பெருமூச்செறிந்தார். எழுந் திருந்தார்.

"நான் போயிட்டு வரேன்."

"வேண்டாம்பா! அவன் ரொம்பக் கொடுரமாய் நடந்துக்கறான். ஒருக்கால் உங்களுக்கு ஏதாவது ஆகி விட்டால்? அதற்கப்புறம் இங்கிருப்போரை கட்டுப் படுத்த முடியாது."

"பயப்படாதே சுதாமா! அவன் அத்தனை கொடுமையாய் நடத்த மாட்டான்." என்று சுதாமாவின் மாமனாரையும் அழைத்துக் கொண்டு கிளம்பினார்.

"சரி வரட்டும், யாராயிருந்தாலும் சரி, சுட்டுப் பொசுக்கிடறேன். திரையில் இக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த ஸ்டீபன் கத்தினான்.

*13*

ராக்கெட் பத்தாம் தேசத்திற்குள் நுழைந்தது தான் தாமதம், அதிலிருந்து இறங்கிய சுதாமாவின் தந்தையையும் மாமனாரையும் கைதாக்கி அழைத்துச் சென்றார்கள் ஸ்டீபனின் ஆட்கள். இதையெல்லாம் திரையில் பார்த்துக் கொண்டிருந்தத சுதாமா ஸ்டிபனை எச்சரித்தான்.

"ஸ்டீபன்! தூதர்களைக் கைது பண்ணுவது அழகல்ல. விட்டு விடுங்கள். போகட்டும், உங்களுக்கு என்ன வேணுமோ சொல்லுங்கள். நிபந்தனையாய் ஒப்பிக்கிறேன்" என்றான் சுதாமா.

"உன் உயிர் வேணும்" என்றான் ஸ்டீபன்.

சுதாமா பதிலளிப்பதற்குள் எஞ்சிய விஞ்ஞானிகள் கோபமாய்க் கத்தினார்கள்.

"நாங்கள் உயிரோடிருக்கும் வரை அது நடக்காது."

"அப்படின்னால் அவங்களை விசாரித்து தண்டனை வழங்குகிறோம்" என்று சொல்லி விட்டுத் திரையிலிருந்து மாயமானான் ஸ்டீபன்.

ஸ்டீபன் அவர்களை இரண்டே இரண்டு கேள்விகள் மாத்திரமே கேட்டான்.

"இந்த பத்தாம் தேசத்தை சுதந்திர நாடாக பிரகடனப் படுத்தினோம். அனுமதியின்றி இங்கே யாரும் வரக் கூடாது என்று திரும்பத் திரும்ப எடுத்துச் சொன்னோம் நீங்கள் வந்ததற்குக் காரணம் என்ன? உங்களை ஏன் தண்டிக்கக் கூடாது?"

"பூமியில் யாருமே சுதந்திர நாட்டைப் பிரகடனப் படுத்தி விடமுடியாது. அந்த மாதிரி செய்தது உங்கள் பிழை" என்றார் சுதாமனின் தந்தை.

"எங்கள் ஸ்டீபனை எதிர்க்கும் உரிமை யாருக்கும் இல்லை. அதனால் உங்களுக்கு மரணதண்டனை" என்று கூறிவிட்டு, அவ்வறையை விட்டுப் போக முயன்றார்கள் அவர்கள்.

அவர்கள் போக முயன்றதும் அவ்வறை மின்சாரத்தால் நிரம்பி வழியத் தொடங்கிற்று. அடுத்த வினாடி சுதாமாவின் தந்தையும் மாமனாரும் அந்த மின்சக்திக்கு பலியாகிச் சாம்பலானார்கள்.

இவைகளையெல்லாம் திரையில் பார்த்துக் கொண்டிருந்த சுதாமனும் விஞ்ஞானிகளும் ஆத்திர மடைந்தார்கள். பூமி கர்ப்பத்திற்கடியில் தயாராகிக் கொண்டிருந்த ராக்கெட்டுகளைப் பத்தாம் தேசத்தின் மேல் ஏவும் படி கட்டளையிட்டார்கள். ஒரு நாட்டுத் தலைவன் கொடியவனாயிருந்தால் அவன் பேச்சைக்

கேட்கும் எல்லோருமே தண்டனையை அனுபவித்துத் தீர வேண்டியதுதான்!

ராக்கெட்டுகள் பத்தாம் நாட்டிற்குப் போகாமல் விண்வெளியை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன.

உபகிரகத்திலிருந்து சுதாமா அவற்றின் திசையைத் திருப்பி விடுவதற்குப் பெரும்பாடுபட்டான். ஆனால் சாத்தியப் படவில்லை. அவை அந்த மாதிரி நேராய்ப் போகத் தொடங்கினால் சூரியனைப் போய் அடையும் சூரியனுக்கு அண்மையில் சுற்றிக் கொண்டிருக்கும் உப கிரகம் அடுத்த சில நிமிஷத்தில் சூரியனுக்கு அந்தப் பக்கத்திலிருந்து முன்னால் வரும். அதை ராக்கெட்டுகள் முட்ட நேர்ந்தால் உபகிரகம் சுக்கலாகிவிடும். அதனால் உபகிரத்திற்கு இந்தப் பக்கமாய் இருக்கும் தேசங்களுக்கு மின்சார சப்ளை தொண்ணுறு சதவீதம் நாசமாகி விடும்.

சுதாமனுக்குக் குழப்பமாயிருந்தது. ராக்கெட்டுகள் திசை திரும்புவானேன்? ஒருக்கால் ஸ்டீபன் அந்த ராக்கெட்டிலிருந்த மோட்டார்களை வேலை பண்ண முடியாமல் வேறு சக்தியைப் பயன்படுத்தியிருப் பானோ?

சட்டென்று சுதாமனுக்கு ஒரு உபாயம் பிறந்தது.

உடனே சுக்கிரக் கிரகத்திலிருந்த விஞ்ஞானி களுடன் தொடர்பு கொண்டான்.

"நீங்கள் உடனே அந்த ராக்கெட்டுகளை அழித்து விடவேண்டும். இல்லாவிட்டால் சூரியனுக்கருகிலுள்ள உபகிரகம் நாசமாகிவிடும்."

"நாங்கள் அதை முயற்சிக்கிறோம். ஆனால் இன் னொரு பூமிக்கு நேரப்போகிறது

"அதென்னது?"

"சுதாமா! ஸ்டீபன் இதுவரையிலும் உபயோகித்த லேசர் கிரணங்களின் உஷ்ணநிலைமை எவ்வளவுக்கு எட்டியிருக்குத் தெரியுமா?"

சுதாமனுக்கு திக்கென்றது. ஆம். அந்த லேசர் கிரணங்கள் 3.5 டிகிரி உஷ்ணத்தை பூமியின் சூழ் நிலையில் அதிகரிக்கச் செய்து விட்டதென்றால், வட தென் துருவங்களுக்கருகிலுள்ள பத்துக்கோடி கன பரிமாண மைல்கள் நீளம் பனித்துளிகள் கருகிப்போய் பூமி முழுவதையும் இரண்டாயிரம் அடிகள் ஆழத்திற்கு மூழ்கடித்து நாசம் பண்ணிவிடும்.

உடனே துருவங்களுக்கருகிலிருந்த விஞ்ஞானிகளு டன் தொடர்பு கொண்டான்.

தன் மகன் என்னவானானோ? பிழைத்தானா? அல்ல இனி அதோகதி தானா?

சுதாமனின் பையனைப் பிழைப்பிப்பதற்குப் பத்துப் பேர் தலை சிறந்த ஸ்பெஷலிஸ்டுகள் அரும் பாடு பட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் தாம் இதுவரையிலும் பெற்றிருந்த விஞ்ஞான அறிவுகளை யெல்லாம் பயன்படுத்திக் கொண்டிருந்தனர். அவர் களின் காரியங்களையெல்லாம் கம்ப்யூட்டர்கள் குறித் துக் கொண்டேயிருந்தன. அத்துடன் மேலும் பத்து

விஞ்ஞானிகள் அவர்களுக்கு உணர்ச்சியலைகளின் மூலம் ஆலோசனைகளைக் கூறிக்கொண்டிருந்தார்கள்

சுதாமனின் மனைவி ஆர்த்தி ஆபரேஷன் தியேட் டரில் இருந்தாள். ஆனால் அவள் ஆபரேஷனில் ஈடு படவில்லை. சிறுவனின் உயிர் போய் வெகு நேரமாகி விட்டது. உயிர்ப்பிக்கப் பாடுபட்டுத் தோல்வியடைந் தனர். இதயம் மட்டும் திரும்பவும் துடிக்கும்படி செய்ய முடிந்தது.

சிறுவனின் மேனியில் சலனம் இருந்தது. ஆனால் விழிப்பு வரவில்லை. கோமாவிலேயே ஆழ்ந்து விட் டிருந்தான்.

உடனே இவ்வார்த்தை சுதாமனுக்குத் தெரிவிக்கப் பட்டது.

"பேச முடிகிறதா?" கேட்டான் சுதாமன்.

"இல்லை சுதாமா குரல் வளையிலுள்ள நரம்புகள் வேலை பண்ண மறுக்கிறது."

"அப்படியானால் மூளைக்கு மைல்ட் கரென்ட் ஷாக் அனுப்பிப் பாருங்கள்"

டாக்டர்கள் பையனின் தலைக்கு ஒயர்களை இணைத்து, இ. இ. ஜி. மிஷின்களைப் பொருத்தினார் கள்.

இ. இ. ஜி. மிஷின் மூளையிலிருந்து வந்து சேரும் மின் அலைகளைக் காகிதத்தில் குறித்துக் கொண் டிருந்தது. அந்தக் கோடுகளைக் கம்ப்யூட்டர்கள் வாங்கி ஒலியலைகளாய் மாற்றிக் கொண்டிருந்தன.

"ரகு" என்றாள் ஆர்த்தி.

"உம்" என்ற வார்த்தை மிஷினிலிருந்து கேட்டது.

"எங்கே இருக்கிறாய்?"

"இங்கேயே தான் இருக்கிறேன்" என்றது சிறுவனின் உயிர்.

"பின்னே ஏன் உடம்பிற்குள் நுழைய மாட்டேங் கிறாய்?"

"முடியலை."

"ஏன்?"

"ஏதோ சக்தி என்னைத் தடுக்கிறது."

"யாருடைய சக்தி அது?"

"தெரியாது?"

"சரி விடு. நேற்றிரவு உன்னை யார் கொன்னாங்கன்னு தெரியுமா?"

"தெரியும்"

"யார்?"

"0.55.6.." தொடர்ந்து நிசப்தம்!

"சொல்லுப்பா! 0.55.6.. அப்புறம் நம்பர்?"

சிறுவனின் மூளையிலிருந்து எந்தச் சலனமும் வெளி வரவில்லை.

"என்னப்பா?"

நிசப்தம்

ஆர்த்தி எஞ்சிய டாக்டர்களைப் பார்த்தாள். அவர்களுக்குப் புரியவில்லை.

"சிறுவனைக் கொன்ற சக்தி தடுக்கிறது" என்றார் ஒரு டாக்டர். டிடெக்டர்களும், கம்ப்யூட்டர்களும் கூடக் குறிப்பெடுக்க முடியவில்லை.

"டாக்டர் பையன் 0.55.6.. வரைக்கும் சொன் னான். பிறகு சொல்ல முடியவில்லை. நீங்கள் முயற்சி பண்ணிப் பாருங்கள். நான் ப்ரொஃபசருடன் தொடர்பு கொண்டு பார்க்கிறேன்" என்று அவள் திரைக்கு அருகில் போனாள்.

திரையில் சரித்திரப் ப்ரொஃபசர் தோன்றினார்.

"ப்ரொஃபசர் பையனுக்கு நினைவு வந்தது."

"அப்படியா? என்ன சொன்னான்?"

"0.55.6 வரையில் சொன்னான். மீதி அந்த நம்பரில் இன்னும் யார் யார் இருக்காங்கன்னு பாருங் கள்" என்றாள் ஆர்த்தி.

"0.55.6 என்றால் அந்த ஆள் ஆறாவது தேசத்தைச் சேர்ந்தவன்தான். பத்தாம் தேசத்தவனில்லை."

"ஆமாம். அந்த நம்பரில் இன்னும் யார் யார் வராங்க? கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்கள்."

"சரி."

சுமார் ஆயிரம் நம்பர்கள் வந்தன. தனித்தனியாய் பரிசோதித்தார்.

ப்ரொஃபசர் ஸ்டீபன் முதல் முதலில் ஆறாவது தேசத்தில்தான் இருந்து வந்திருக்கிறான். அவனை சுதாமாதான் பத்தாம் தேசத்துக்கு அனுப்பி விட்டிருக்

*கிறார். அதனால் ஸ்டீபன் கோபித்து சுதாமாவைப் பழிவாங்க ஏதாவது பண்ணியிருக்கலாமோ?"*

*"ஸ்டீபனுக்குக் கோபம் ஏன் வரணும்! ஒரு வேளை அப்படி வந்தாலும் நம் டிடெக்டர்கள் ரிகார்டு பண்ணியிருக்குமே!"*

*"ஒரு வேளை ரிகார்டு பண்ணியிருந்தால் கொஞ் சம் பார்த்துச் சொல்லுங்கள்."*

*"சரி."*

*ப்ரொஃபசர் ஸ்டீபனின் கார்டை எடுத்து அவனை இலாகா மாற்றிய அன்றைக்கு ஸ்டீபனின் மனநிலை இருந்த நிலைமையை கவனித்தார். எந்த மாறுபாடும் தென்படவில்லை.*

*"சரி, எங்கள் திருமணம் நடந்த அன்று ஸ்டீபனின் மனநிலை எப்படியிருந்தது? கொஞ்சம் பார்த்துச் சொல் லுங்கள்."*

*ப்ரொஃபசர் இன்னும் கொஞ்சம் பின்னோக்கிச் சென்று ஆராய்ந்து பார்த்தார்.*

*"உங்கள் கல்யாணத்தன்று தன் தேசத்திலேயே இல்லை. தென் துருவத்திற்கருகில் இருந்து கொண்டு பனித்துளிகளைப் பரிசோதித்துக் கொண்டிருந்தார்."*

*"ஏன்? எதற்கு?"*

*ப்ரொஃபசர் கம்ப்யூட்டரை செக் பண்ணினார். அது ஒன்றுமே குறிக்க மறுத்தது.*

*"தெரியலைம்மா."*

*ஆர்த்தி யோசிக்கத் தொடங்கினாள்.*

*பூமியின் பரப்பளவு சுமார் பத்தொன்பது கோடியே 69 லட்சத்து 37 ஆயிர்த்து 800 சதுர மைல்கள். இதில் சமுத்திரமானது 13 கோடியே 97 லட்சம் சதுர மைல்கள். வருடத்துக்கு 87 கன மைல்கள் தண்ணீர் ஆவியாகி பணித் துளிகளாய் பூமியின் மேல் விழுகின்றன. 5 கோடியே 72 லட்சத்து சதுரமைல் தரையின் மேல் பத்தில் ஒரு பாகம் பனியால் மூடப் பட்டு விடுகிறது. கோடி கன மைல்கள் பனியானது வட தென் துருவப் பிரதேசங்களான கிரீன்லாந்து, ஹிமா லயா, ஆல்ப் மலைகளின் மேல் விழுகின்றன. பத்து கோடி வருஷங்களுக்கு முன்னால் சமுத்திரத்தின் உஷ்ண நிலையானது 70 டிகிரி ஃபாரன்ஹீட். ஒன்பது கோடி வருஷங்களுக்கு முன்னால் அது 60 டிகிரி ஃபாரன்ஹீட். மறுபடி எட்டுக் கோடி வருடங்களுக்கு முன்னால் 70 டிகிரி ஃபாரன்ஹீட்டாய் உயர்ந்து, இருபதாம் நூற்றாண்டில் அது 35 டிகிரி ஃபாரன்ஹீட்டாய் மாறி விட்டது. சீதோஷ்ணத்திலிருந்த காரியமில வாயு 0.3 சதவீதத்திலிருந்து 0.6 சதவீதமாக அதிகரித்த பொழுது ஜலப்பிரளயம் ஏற்பட்டது. அதிலிருந்து சீதோஷ்ணத் தில் அக் கரியமில வாயு அதிகரிக்காமல் பார்த்துக் கொண்டார்கள்.*

*ஷ்டீபன் தென்துருவத்திற்ககருகில் போனான் என்றால், அங்கே பனித்துளிகளைத்தான் பரிசீலிக்கப் போயிருப்பானோ? ஏன்? பூமியின் உஷ்ணநிலையை அதிகரிக்கும் படி சூழ்ச்சி செய்து ஜலப்பிரளயத்தை*

*உண்டாக்குவதற்காகவா? பிரளயம் தோன்றி விட்டால் பிறகு ஒன்றும் நிலைக்காது.*

"*எங்கள் கல்யாணத்தன்று ஸ்டீபனின் மனநிலை எப்படியிருந்தது?*"

"*கொஞ்சம் டிஸ்டர்ப்டு ஆகத்தான் இருந்தது?*" *என்றார் ப்ரொஃபசர்.*

*அவள் பெருமூச்செறிந்தாள்.*

*ஆர்த்தி சுதாமாவைப் பார்த்து எல்லா விஷயங் களையும் சொல்லி விட்டாள்.*

*சுதாமனின் சந்தேகமே ஊர்ஜிதமாயிற்று.*

"*இப்பத்தான் எனக்கும் இதே செய்தி கிட்டிற்று. ஸ்டீபன் ஏவிய லேசர் கிரணங்களின் உஷ்ணத்துக்கு சமுத்திரத்தின் உஷ்ணநிலை அதிகரித்து விடும். இந்த பக்கமாய் இருக்கும் நாடுகள் யாவும் சமுத்திர மட்டத் துக்கு 5000 அடிக்கு மேலில்லை. ஸ்டீபனோ அந்தப் பக்கம் 15,000 அடி உயரத்தில் இருக்கிறான். அதனால் இந்தப் பக்கத்து நாட்டையும் ஜனங்களையும் ஒரேயடி யாய் அழித்துச் சாம்பலாக்கி விடனும் என்றுதான் அந்த லேசர் கிரணங்களை ஏவுகிறான். அப்படிப் பண்ணி விட்டு பூமி முழுவதையும் தான் கட்டி ஆள ஆசைப் படுகிறான்.*"

"*அப்ப என்ன பண்ணலாம்?*"

"*ஒரு வழி இருக்கு.*"

"*என்ன?*"

"அந்தப் பனி கருகி உருகி வழிந்தோடிக் கொண்டிருக்கும் பொழுதே, அந்தத் தண்ணீரின் மேல் அல்ட்ராவயலட் கிரணங்களை ஒரேயடியாய் அனுப் பினால், நீரானது ஆக்ஸிஜன், கார்பன்டை ஆக்சைடு என்ற இரு வேறு பிரிவுகளாய் பிரிந்து விடுகின்றன. அப்பொழுது அந்த கார்பன் டை ஆக்ஸைடால் ஆபத்து நேராமலிருக்க நூறு கோடி தாவரங்களை நாட்டச் சொல்லலாம்."

அதற்குள் சமுத்திரமானது கடல்மட்டத்திலிருந்து மேலே எழும்பத் தொடங்கி விட்டதென்றும் அடுத்த அரை மணிக்கெல்லாம் இன்னும் மேலே ஏறி வரும் என்றும் தெரிய வந்தது. அதனால் சுதாமா கரை யோரத்திலிருந்தவர்களை சமுத்திரக் கட்டிடத்திற்குள் சேர்த்து விடும் படி உத்தரவிட்டான்.

சமுத்திர நீர் மேலும் தொண்ணூறடிக்கு ஏறத் தொடங்கிற்று. விஞ்ஞானிகள் என்ன முயன்றும் அடக்க முடியவில்லை.

## *14*

சரியாய் அதே சமயத்தில் ஆயிரம் ராக்கெட்டு களும் உபகிரகத்துக்கு மூன்று கோடி மைல்கள் தூரத்தில் வந்து விட்டன. விண்வெளியிலிருந்து வந்து கொண்டிருந்த ராக்கெட்டுக்களிலிருந்த மனிதர்கள்

அந்த ஆயிரம் ராக்கெட்டுகளையும் பார்த்தார்கள். சுதாமனுடன் தொடர்பு கொண்டார்கள்.

"நீங்கள் சூரியனுக்கு எவ்வளவு தொலைவில் இருக்கீங்க?"

"புத கிரகத்துக்குக் கோடி மைல் தூரத்தில்."

"அப்படீன்னால் ஒரு காரியம் பண்ணுங்கள். நீங்கள் வந்த ராக்கெட்டுகளில் ஒரு ராக்கெட்டை காலி பண்ணுங்கள். எப்படியும் உங்களாலும் ஆயிரம் ராக் கெட்டுகளையும் அழிக்க முடியாது. காலி ராக்கெட் டின் வேகத்தை அதிகரித்து அந்த ராக்கெட்டுகளின் மேல் குறுக்காய் பாயச் செய்யுங்கள். சூரியனுக் கருகிலுள்ள உபகிரகம் அழிய நேரிட்டால் அதற்குப் பிறகு பூமிக்கு மின் சக்தி சப்ளை கிடைக்காது. இங்கே சமுத்திரம் பொங்கத் தொடங்கி விடும். அதனால் அந்த ராக்கெட்டுகளை அழியுங்கள்."

"சரி சுதாமா."

ஒரு ராக்கெட்டை இன்னொரு ராக்கெட்டுடன் சேர்த்துக் கொண்டு வந்தார்கள். அதிலிருந்து மனிதர்கள் இரண்டாவது ராக்கெட்டிற்கு வந்தார்கள். காலி ராக் கெட்டை அந்த ஆயிரம் ராக்கெட்டுகளை நோக்கிப் பாயச் செய்தனர்.

சூரியனின் உபகிரகம் சூரிய வட்டத்திற்கு நெருங்கிக் கொண்டிருந்தது.

சுதாமா உபகிரகத்திலிருந்த விஞ்ஞானிகளுடன் தொடர்பு கொண்டான்.

"சூரிய உபகிரகத்தின் மின்சாரங்கள் அனைத்தை யும் ஒரு வினாடி அந்த ஆயிரம் ராக்கெட்டுகளை நோக்கி செலுத்துங்கள்."

"சரி சுதாமா."

அவர்கள் அவ்வாறே செய்தார்கள்.

அதன் வேகமெல்லாம் ராக்கெட்டுகளின் மேல் வந்து விழுந்ததும், அருகிலிருந்து மிக வேகமாய் வந்து கொண்டிருந்த காலி ராக்கெட் அவைகளை மோதிய தும் வினாடி நேரத்தில் நிகழ்ந்து முடிந்து விட்டது.

அந்த ஆயிரம் ராக்கெட்டுகளும் ஒரேயடியாய் அந்த உஷ்ணத்துக்கும், ராக்கெட்டின் தாக்குதலுக்கும் தூள்தூளாயின. ஆனால் அந்த ஒரு வினாடி சூரிய உபகிரகத்திலிருந்து மின்சாரம் பூமிக்கு வராததால் சமுத்திரத்தின் ஆழத்திலிருந்த கட்டிடத்தின் ஒரு பக்கத்து பாகம் உடைந்து விட்டது. அதனால் அங் கிருந்த இயந்திரங்கள் வேலை பண்ணாமல் ஸ்தம்பித்து நின்று விட்டன. பிறகு இரு மடங்கு வேகத்துடன் பூமியை நோக்கிப் படர்ந்தது.

விண்வெளியில் திரிந்து கொண்டிருந்த ராக்கெட் டிலிருந்த விஞ்ஞானிகள் சுதாமனைத் தொடர்பு கொண்டு, சுதாமா! ஸ்டீபன் பூமியில் அத்தனை உபத்திரவங்கள் பண்ணும் போது இன்னும் ஏன் அவனை நீங்கள் மன்னித்துப் பேசாமலிருக்கணும்? ஸ்டீபனின் நாட்டின் மேல் ஆன்ட்டி மேட்டரை ஏவுகி றோம்."

"ப்ளீஸ் அதைப் பண்ணிடாதீங்க இப்பொழுதே பூமியின் உஷ்ணம் அதிகரித்து விட்டது. இன்னும் ஒரு பாயிண்ட் அதிகமானாலும் சரி பிரளயம் ஏற்பட்டு விடும்."

"பின்னே என்னதான் செய்யப்போறீங்க?"

"அவன் மூளை அலையின் நீளத்தைத் தெரிந்து கொண்டு அவனைக் கட்டுப்படுத்தப் போகிறேன்! அவன் மூளை அலையின் நீளம் தெரியவில்லை. அது தெரிந்து விட்டால் அவன் நம் கையில் சிக்கினாற் போலத்தான். நாம் சொன்னதைக் கேட்பான். ஆறாவது தேசத்துக்கு வா என்று நாம் அழைத்தால் நம்மிடம் வந்து விடுவான். அப்பொழுது அவனை நன்றாய்க் கண்டித்து அனுப்பிவிடலாம்.

"சரி, அப்படியே பண்ணுங்க."

ஆனால் சுதாமா என்ன முயன்றாலும் ஸ்டீபனின் மூளை அலையின் நீளத்தைக் கண்டு பிடிக்கவே முடிய வில்லை.

ஆர்த்தி மறுபடியும் மகனிடம் வந்தாள்.

"இன்னொரு முறை சிறுவனின் மூளையைப் சோதித்துப் பாருங்கள் டாக்டர்."

பையனின் தலைக்கு ஒயர்கள் இணைக்கப் பட்டன.

"ஆறுக்கப்புறம் என்ன நம்பர் அப்பா?" கேட்டாள் ஆர்த்தி.

*ஒரு வினாடி நிசப்தம், ஆர்த்தி திரும்பவும் கேட்டாள்.*

"*333*" *என்றாள் பையன் மெதுவாய்.*

*ஆர்த்தி ப்ரொஃபசரை திரைக்கு அழைத்தாள்.*

"*333 நம்பர் யாருடையதுன்னு தெரியுமா ப்ரொஃபசர்?*"

*ப்ரொஃபசர் கம்ப்யூட்டரில் விசாரித்தார்.*

"*அவன் இறந்துவிட்டான்மா.*"

"*ஆங்?*"

*ப்ரொஃபசர் அவன் சரிதத்தை செக் பண்ணினார்.*

*தன் மகனைக் கொன்றது 333 நம்பர் மனிதன் என்றறிந்த ஆர்த்தி நம்பமாட்டாதவளானாள். காரண மில்லாமல் அவன் ஏனிந்தக் கொடுமையைப் பண்ணி னான்? அவனும் சுதாமனும் உயிர்த்தோழர்கள். அவன் மனைவி காஞ்சனா தன் தோழி!*

*அவள் உடனே காஞ்சனாவைத் தொடர்பு கொண் டாள். காஞ்சனா திரையில் வந்தாள்.*

"*உன் கணவர் எங்கப்பாவோடு சேர்ந்து ஸ்டீபன் நாட்டுக்குப்போய் அங்கே இறந்துட்டார்னு தெரிஞ்சுது. ரொம்ப வருத்தப்படறேன்*" *என்றாள் ஆர்த்தி.*

*ஆர்த்தி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.*

"*உங்க பையனை யாரோ கொலை பண்ணிட் டதாய் கேட்டேன். கொலையாளி யார்னு தெரிஞ் சுதா?*" *கேட்டாள் காஞ்சனா.*

"தெரியலை காஞ்சனா! எல்லாம் குழப்பமா யிருக்கு, கம்ப்யூட்டர் செக் பண்ணின போது உன் கணவன் ரவியின் நம்பர் வந்தது.

"ரவியா?" ஆச்சரியமடைந்தாள் காஞ்சனா.

"கம்ப்யூட்டர் அப்படிதான் சொல்லித்து."

"அதெப்படி சாத்தியம் ஆர்த்தி? இரவெல்லாம் அவர் இங்கேதான் இருந்தார். காலையில் உங்கப்பாவிட மிருந்து வந்தவுடன்தான் கிளம்பிப் போனார்."

"நிஜந்தான் காஞ்சனா! ஒருக்கால் கம்ப்யூடர்தான் தவறாய் சொல்லிடுத்தோ என்னவோ?"

"எந்த நம்பரைக் காட்டிற்று கம்ப்யூட்டர்?"

"0.55.6.333"

"அந்த நம்பர் ரவியின் நம்பரில்லையே!"

"பின்னே?"

"அவரது 0.55.6.108" என்றாள் காஞ்சனா.

"என்ன 108 ஆ?"

"ஆமாம்."

"உன் நம்பர் என்ன?" கேட்டாள் ஆர்த்தி,

"140.39.8.30"

"சரி, அப்படின்னால் செக் பண்ணிப் பார்க்கி றேன்."

திரையின் மீதிருந்து காஞ்சனா மறைத்தாள்.

ஆர்த்தி உடனே சரித்திரப் ப்ரொஃபசரை திரைக்கு வரவழைத்தாள். ஆனால் அவரோ சுதாமா இட்ட

*கட்டளையை நிறைவேற்றிக் கொண்டிருந்ததால், "ஒரு நிமிஷம் இரு வரேன்" என்றார்.*

*ஆனால் ஒரு நிமிஷம் என்பது எவ்வளவோ பெரிய சாதனைகளைப் படைக்கக்கூடிய காலம்! ஆர்த்திக்கு ஒரு நிமிஷம் கூட காத்திருக்கமுடியாததால் தானே பூமிக்கடியிலிருந்த கட்டிடத்திற்குச் சென்றாள்.*

*கம்ப்யூட்டரை அணுகிக் காஞ்சனாவின் நம்பர் **140.39.8.30** ஐ அழுத்தினாள். அந்த கார்டு வெளியே வந்தது. காஞ்சனாவின் கணவரின் நம்பர் **0.55.8.108** சரி தானா என்று பார்த்தாள். சரிதான் என்றது மிஷின். அப்படியானால் காஞ்சனா பொய் சொல்லவில்லை.*

*பின்னே ரவியின் நம்பர் **108** ஆக இருக்கும்போது **333** என்று ஏன் காட்டிற்று? ஆர்த்திக்கு சந்தேகம் ஏற்பட்டது.*

*கம்ப்யூட்டரில் **333** நம்பரை அழுத்தினாள். அது யார் நம்பர்? அந்த நம்பருடைய ஆள் வராததால் அந்த நம்பரின் ஜோடி யார் என்று தெரிந்து கொண்டால் அந்த நம்பருடைய மனிதனின் மனைவி லைனுக்கு வரலாம். அவளைக் கேட்டால் இந்த **333** நம்பர் யாருடையது என்று சொல்லலாம்.*

*ஆர்த்தி **333** நம்பரின் ஜோடி யார் என்று கம்ப்யூட்டரிடம் கேட்க, அதில் எந்தப் பதிலும் வரவேயில்லை.*

***333** நம்பரின் கேஸ் ஷீட்டை எடுத்துப் பார்த்தாள். அவனுக்கு இன்னும் கல்யாணமாகவில்லை.*

யாரந்த 333? ஆளை எடுத்துக் காட்ட வேண்டி மற்றொரு கம்ப்யூட்டரின் பட்டனை அழுத்தினாள். திரையில் ஒட்டகைச் சிவிங்கி ப்ரொஃபசர் வந்தார்.

ஆர்த்தி அதிர்ந்தாள் 333 நம்பர் ப்ரொஃபசருடையதா?

"என்னம்மா?" என்று கேட்டார் ப்ரொஃபசர்

அவளுக்கு என்ன கேட்பதென்று தெரியவில்லை. கேட்டால் அவர் என்ன நினைப்பாரோ?

உடனே நிஜமா பொய்யா என்பதை எடுத்துக் காட்டும் டிடெக்டரைக் கம்ப்யூட்டருடன் இணைத் தாள்.

"ப்ரொஃபசர் உங்க நம்பர் என்ன" கேட்டாள் ஆர்த்தி.

"ஏம்மா? எதுக்கு?"

"உங்க ஜோடி நம்பரைப் பார்க்கணும்"

"எனக்கு ஜோடி நம்பரே இல்லை.. எனக்குக் கல்யாணம் ஆகலை."

"உங்க நம்பர் என்ன?"

"0.55.6.333" என்றார் ப்ரொஃபசர்.

ஆர்த்தி டிடெக்டரைப் பார்த்தாள். அவர் நிஜந் தான் சொல்லுகிறார் என்று எடுத்துக் காட்டிற்று அந்த மிஷின்.

"ப்ரொஃபசர் ஒன்று கேட்கணும் உங்களை! ஒன்றும் தப்பாய் எடுத்துக்காதீங்க. கொஞ்சம் நேரத்திற்கு முன்னால் 333 நம்பரைப் பற்றிக் கேட்ட

பொழுது, அந்த ஆள் சுதாமனின் தந்தையோடு சேர்ந்து ஸ்டீபனின் நாட்டிற்குப் போய் அங்கே இறந்துவிட்டார் என்று சொன்னீங்க."

"ஆமாம்"

"பின்னே அந்த நம்பர் உங்களுடையதும் எப்படி ஆகும்?"

"எப்படிம்மா ஒரே நம்பர் இருக்கும்? இரண்டு பேருக்கும் ஒரே நம்பர் இருக்காதே!"

"பின்னே என் மகனைக் கொன்றது 333 நம்பர். ஆள் என்றீங்க. ஆனால் அந்த நம்பர் உங்களுடைய தானால் நீங்க தான் அவனைக் கொன்றீங்களா?"

ப்ரொஃபசர் சிரித்தார்.

"'நானா? அந்த மாதிரிக் கொலையாளியா என்ன நான்?"

ஆர்த்தி டிடெக்டரைப் பார்த்தாள். அவர் சொன்னது நிஜந்தான் என்றது அது.

அவளுக்குக் குழப்பத்தால் தலை சுற்றிற்று.

"கம்ப்யூட்டர் துல்லியமாய் சொல்லிற்று" என்று பதில் வந்தது.

பின்னே யார்தான் சிறுவனைக் கொன்றிருப் பார்கள்?

ஆர்த்தி உடனே சுதாமனுடன் தொடர்பு கொண் டாள்.

"பையனின் கொலை ஒரே குழப்பமாயிருக்கு" என்றாள். அவனுக்கு விவரத்தை எடுத்துச் சொல்லி

விட்டு. எல்லாவற்றையும் கேட்ட சுதாமா பெருமூச் செறிந்தான்.

"நம் நாட்டிலுள்ள எந்திரங்களையெல்லாம் ஏதோ சக்தி தடை பண்ணிக் குழப்பத்தை உண்டு பண்ணு கின்றது." என்றான்.

"அதென்ன சக்தி? ஸ்டீபன் ஏதாவது புது சக்தியை உண்டாக்கியிருக்கிறானா?"

"அதையெல்லாம் கூட துப்புத் துலக்கிட்டோம். அந்த மாதிரி எந்த சக்தியும் ஸ்டீபனிடம் இல்லை."

"பின்னே என்ன சக்தி அது?"

"விண்வெளியிலுள்ள சக்தியெல்லாம் ஒரே கோட் டில் இயங்கி வருகின்றன. ஒருக்கால் நமக்குத் தெரியாத புது சக்தியாய் இருக்கலாம்."

"அதை நம்மால் கண்டு பிடிக்க முடியாதா?"

"முயற்சிக்கிறோம்."

சுதாமாவிடம் ஒரு விஞ்ஞானி வந்தார்.

"சுதாமா! வட தென் துருவங்களுக்கருகே பனிக் கட்டி உருகி வினாடிக்கு இரண்டு மைல் வேகத்தில் வந்து கொண்டிருக்கிறது. அந்த வேகத்தில் சமுத்திரம் உருகி வந்தால் பூமத்திய ரேகையை அப்பிரவாகம் நெருங்குவதற்கு ஐம்பது நிமிஷங்கள்தான் ஆகும்." என்றார்.

அந்தப் பிரவாகம் சமுத்திரத்திற்கடியிலிருந்து வந்து கொண்டிருந்தது. மேலிருந்து வரவில்லை. அந்த

விபரீதமான வேகத்துடன் சமுத்திரம் உருகி வந்தால், சமுத்திரத்திற்குள் கட்டிய கட்டிடங்களெல்லாம் சர்வ நாசமாகி விடும். துருவங்களுக்கருகில் மிகக் குளிர் இருக்கும். அக்குளிருக்கு சமுத்திரத் தண்ணீர் குளிர்ந்து பனிக் கட்டியாகி விடும். குளிர்ந்த தண்ணீர் வென் னீரைவிடக் கனம் அதிகம். அதனால் குளிர்ந்த நீர் சமுத்திரத்திற்குக் கீழே இறங்கிப் போய்விடும். அந்தக் குளிர்ந்த நீர் கீழிருந்து பெருக்கெடுத்த வண்ணம் மெதுவாய்ப் பூமத்ய ரேகையை நோக்கி வரும். பூமத்திய ரேகைக்கருகில் சூரியனின் உஷ்ணத்துக்கு சமுத்திர நீர் உஷ்ணமடைந்து மேலே தெளிந்து வரும். அந்த வென்னீர் மெதுவாய் சமுத்திரத்தின் மேல் பாகத்திலிருந்து பிரவகித்து துருவங்களை அடையும். அடையும். துருவங்களில் அந்நீர் மறுபடியும் குளிர்ந்து சமுத்திரத்திற்கடியில் போய்விடும். மறுபடி சமுத்திரம் கீழிருந்து பிரவகித்து பூமத்தியரேகைக்கருகில் வரும். திரும்பவும் பூமத்யரேகைக்கருகில் சூடாகி மேலே எழும்பி துவங்களை நோக்கி ஓடும். இவ்விதமாய் கோடி வருடங்களாய் நடந்துவருகிறது. ஆனால் அது மிக மெதுவாய் நடக்கும்.

ஆயின் இப்பொழுதோ,பிரவாகத்தின் வேகம் வினாடிக்கு இரண்டு மைல் வீதம் உருகி ஓடி வந்தால் பூமி என்னவாகும்?"

"அந் நீரை மேலும் குளிரச் செய்தால் பனிக் கட்டியாகி விடும். பனிக்கட்டி லேசானதாதலால்

*தண்ணீரில் மிதந்து வரும். அந்தப் பிரவாகம் அங்கேயே நின்று, திரும்பவும் பனிமலையாய் துருவங்களை நோக்கிப் போகும்."*

*"ஆனால் அவ்வளவு நீரையும் குளிர்விப்பது எவ்வாறு?"*

*"ஒரு வேலை பண்ணுங்க சுதாமா. ஹீலியம் கியாஸை சாதாரண உஷ்ணத்துக்கும் கீழே குளிர்வியுங் கள். அப்பொழுது ஹீலியம் கியாஸ் திரவமாகிவிடும். அந்த திரவத்தை சமுத்திரத்தின் கீழேயிருந்து துருவங் களை நோக்கி ராக்கெட்டுகளில் அனுப்பி வையுங்கள். சமுத்திரத்தின் உஷ்ணநிலை குளிர்ந்து பிரளயத்தைக் கொஞ்சமாவது கட்டுப்படுத்தும்" என்றார் விஞ்ஞானி.*

*சுதாமா யோசித்தான். இது நடக்கிற காரியமா?*

*"அப்படி ஹீலியம் கியாஸை அனுப்புவதை விட அல்ட்ரா வயலட் கிரணங்களை அனுப்புங்கள். அவை நீரை ஆக்ஸிஜன், கார்பன் டையாக்சைடு என்று பிரித்து விடும். ஆக்ஸிஜன் மேலே போய்விடும். கார்பன்டை யாக்ஸைடு பூமியிலேயே இருக்கும்."*

*"சரி சுதாமா."*

*"நில்லுங்கள்" கத்திக் கொண்டே இரண்டு இரும்பு மனிதர்கள் அங்கே வந்தார்கள்*

*சுதாமா அவைகளைப் பார்த்தான்.*

*"யார் நீங்கள்?"*

*"உங்கள் மறு உருவம்" என்றான் இரும்பு மனிதன்.*

*"மறு உருவமா?" சுதாமா அவைகளை வியப்புடன்*

நோக்கினான்.

"ஆம் சுதாமா. எங்களை சிங்காரம் தயாரித்தான்."

"சுதாமா அவைகளைப் பார்த்த படியே பட்டனை அழுத்தினான். திசையில் சிங்காரம் வந்தான்.

"என்ன பண்ணிண்டிருக்கிறாய் சிங்காரம்?"

"கீழே உங்க தாத்தாவிடம் இருக்கிறேன்"

"தாத்தா என்ன பன்றார்?"

"தூங்குகிறார்"

"ராத்திரியெல்லாம் தூங்கிண்டுதான் இருந்தாரா?"

"ஆம்"

"இன்னும் எழுந்திருக்கலையா?

"இல்லை"

"ஆமாம் நீ என்னைப் போலவே மறு உருவத் தைப் பண்ணி என்னிடமே ஏன் அனுப்பினாய்?"

"உங்களுக்கு உதவியாய் இருக்குமேன்னுதான்."

"இரண்டு பேரையும் அசல் என்னைப் போலவே படைத்திருக்காயே!"

"ஆம் உங்க நம்பர், மூளை அலை எல்லாம் அதேதான்."

"ஏன் அவ்வாறு படைத்தாய்?"

"நீங்க ஊகித்துப் போடும் கணக்குத் தவறாகி விடுகிறது. அதை சரியாக்குவதற்குதான் தயாரித்தோம்."

"என் கணக்கு தவறாகிவிடுகிறதா?" சுதாமா வியப்படைந்தாள்.

"ஆமாம் சுதாமா. உங்களுக்கு இந்த மாதிரி ஒரு நிலைமை இதற்கு முன்னால் தோன்றியதேயில்லை. அதனால் தான் உங்களுக்குக் குழப்பமாயிருக்கிறது. உங்களிடம் தோன்றும் அந்தக் குழப்பத்தை சரியாக்குவதற்காகத் தான் இந்த இரும்பு மனிதர்களைத் தயாரித்து அனுப்பினேன்."

"நான் குழப்பமடைந்தேனா? எதற்கு?"

"ஆம் சுதாமா ஹீலியம் கியாஸை திரவமாக்கி சமுத்திரத்திற்குள் அனுப்பினால் பிரளயம் நின்று விடுமா? அதோடின்றி தண்ணீரை அல்ட்ரா வயலட் கிரணத்தால் ஆக்சிஜன், கார்பன்டையாக்சைடு என்று பிரிக்கனும் என்கிறீர்கள். அது எவ்வளவு ஆபத்துத் தெரியுமா? அது சமுத்திரத்துத் தண்ணீரை மாத்திரமே பிரிக்காது. பிராணிகளையெல்லாம் கூட கொன்று குவித்து விடும்."

சுதாமாவுக்கு பகீரென்றது.

"எனக்கு அது தோணவேயில்லை சிங்காரம்"

"அதனால் தான் குழம்பிப் போயிருக்கிறீங்கன்னு உங்களை மாதிரி இரும்பு மனிதர்களைப் படைத்து அனுப்பினேன்."

சுதாமா ஒரு நிமிஷம் யோசித்தான்.

"சிங்காரம், ஒரு நிமிஷம் நீ இங்கே வரமுடியுமா?"

"சரி வரேன்"

சிங்காரம் வந்து சேர்ந்தான்.

"சிங்காரம் ஒன்று பண்ணுவோம்! என் நம்பர் 203.. ஸ்டீபனின் நம்பர் 202. அதானது என்னை விட ஒரு நம்பர் குறைவு. எல்லா விஷயத்திலும் கொஞ்சமோ நஞ்சமோ ஸ்டீபனுக்கு என் சக்தியைக் காட்டிலும் குறைந்த சக்திதான் இருக்கிறது.. இந்த இரண்டு ரோபோட்ஸ்களையும் 203 ஆகத் தானே தயாரித்தாய்?" என்று கேட்டான் சுதாமா.

"ஆமாம்" என்றான் சிங்காரம்.

"அப்படியில்லாமல் இந்த இரண்டில் ஒன்றை ஸ்டீபனின் சக்திக்கு அதாவது 202-க்குக் குறைத்து விடுங்கள்"

"ஏன்?"

"அப்படிச் செய்தால் இந்த இரண்டு ரோபோட்ஸ் களில் ஒன்று என் பிரதிரூபமாய் 203. மற்றொன்று ஸ்டீபனின் பிரதிரூபமாய் 202 ஆகிவிடும். இங்கிருந்து நாம் எவ்வளவு பிரயாசைப்பட்டாலும் ஸ்டீனின் மூளை யலைகளைப் பற்றிச் சரியாய் கண்டு பிடிக்கவே முடியவில்லை. இவ்விரண்டு இரும்பு மனிதர்களையும் 208, 202 நம்பர்களில் படைத்து ஸ்டீபனின் நாட்டுக்கு அனுப்பி வைப்போம். அந்த நாட்டிற்குள் நுழைந் ததுமே 202 நம்பர் மனிதனுக்கு ஸ்டீபனின் மூளை அலையைப் பற்றித் தெரிந்துவிடும். அதனை இரண்டா வது மனிதன் கிரகித்துக் கொள்வான். அப்பொழுது ஸ்டீபனின் மூளை அலையின் மேல் ஸ்டீபன் ஒருத்தன் மட்டுமே இல்லை, இந்த ரோபோட்ஸாம் வேலை

பண்ணும். இவைகளுடன் நானும் ஸ்டீபனின் நாட்டுக்குப் போகப் பௌகிறேன்."

"வேண்டாம். நீங்கள் போகவேண்டாம்." விஞ்ஞானிகளுடன் சேர்ந்து சிங்காரமும் அவநம்பிக்கையைத் தெரிவித்தான்.

"பரவாயில்லை. ஸ்டீபனின் மறு உருவத்திலிருக்கும் ரோபோட்ஸ் ஸ்டீபனின் மனநிலையை கிரகித்துச் சொல்லும். நான் ஸ்டீபன் மூளையைக் கட்டுப்படுத்தி பத்தாம் தேசத்தை ஆக்ரமித்துக் கொள்வேன். அங்கு நடப்பவைகளை என் மறு உருவமான ரோபோட்ஸ் உங்களுக்கு இங்கே பிரசாரம் பண்ணும். நீங்கள் என்ன பண்ணனும்னு கூட எடுத்துச் சொல்லும்."

வேறு வழியின்றி அவர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

ராக்கெட்டில் இரு ரோபோட்ஸ்களுடன் சுதாமனும் கிளம்பினான்.

ராக்கெட் ஸ்டீபனின் நாட்டிற்குள் புகுந்து முதல் லேசர் கிரண கட்டத்தை தாண்டிற்று.

"லட்சம் டிகிரி உஷ்ணம்" ரோபோட்ஸ் இன்டகேடரைப் பார்த்துச் சொல்லிற்று.

ராக்கெட் இரண்டாவது லேசர் கிரண கட்டத்தை அடைந்தது.

"இருபத்தைந்து லட்சம் டிகிரி" ரோபாட்ஸ் சொன்னது.

*ராக்கெட்டிற்குள் உஷ்ணம் அதிகரித்தது. ஆயினும் அது வெகு வேகமாய் வந்து கொண்டிருந்ததால் மூன்றாவது லேசர் கிரணக் கட்டத்திற்குள் நுழைந்தது.*

*ஸ்டீபனின் நாட்டிற்குள் இறங்கியாகி விட்டது.*

*சுதாமா இரண்டாவது ரோபோட்ஸைப் பார்த்துக் கேட்டான். "ஸடீபனின் மூளை அலை எவ்வளவு நீளம் வாய்ந்தது?"*

*"ஸ்டீபனுக்கு இரண்டு அலைகள் உள்ளன சுதாமா."*

*"இரண்டா? அதெப்படி?"*

*"அதென்னவோ? இரண்டைக் கொண்டும் பிரசாரம் பண்ணுகிறான். ஒன்று ஸ்டீபன் இருந்த பத்தாம் தேசத்திலிருந்தும், இன்னொன்று ஆறாவது தேசத்திலிருந்தும்."*

*ஆறாவது தேசம் என்றால் தன் தேசந்தான்! தன் தேசத்திலிருந்து வருவதாவது! கொஞ்சம் முன்னால் ஒட்டகச் சிவிங்கி ப்ரொஃபசர் கூட அதையேதான் சொன்னார். அப்படியானால் ஸ்டீபன் தன் மறு உருவம் ஒன்றைத் தயாரித்து ஆறாவது தேசத்தில் வைத்திருப்பானா?*

*சுதாமா லேசர் கிரண இயந்திரத்தைக் கையிலெடுத்துக் கொண்டு ராக்கெட்டிலிருந்து இறங்கினான்.*

*அவனைத் தொடர்ந்து அவ்விரு ரோபோட்சும் இறங்கின.*

"சுதாமா நம் நாட்டில் இறங்கியிருக்கிறான்" என்றான் ஸ்டீபன் விஞ்ஞானியிடம்.

ஸ்டீபன் சொன்ன இவ்வார்த்தையை ஸ்டீபனின் மறு உருவத்திலிருந்த ரோபோட்ஸ் சுதாமனுக்குச் சொல் லிற்று.

"ஸ்டீபன்! நாங்கள் உன் நாட்டில் இறங்கினது மட்டுமில்லை. உன்னையும் அழைத்துக் கொண்டு போகப் போகிறோம்" என்றான் சுதாமா.

ஸ்டீபன் திடுக்கிட்டான். தன் மூளை அலையைப் பற்றி சுதாமனுக்குத் தெரிந்து விட்டிருக்கிறது. இத்தனை ரகசியமாய் வைத்திருந்த அது சுதாமனுக்கு எப்படித் தெரிந்திருக்கும்?

ஸ்டீபன் இவ்வாறு நினைத்ததை ரோபோட்ஸ் சுதாமனுக்கு எடுத்துச் சொல்லிற்று.

சுதாமா சிரித்துக் கொண்டான்.

"தெரிந்துக்கறது கஷ்டமில்லை ஸ்டீபன்! இந்த சமயத்தில் இங்கே பட்டனை அழுத்தினால் உங்கள் தலை சிதறி விழும். ஆனால் நான் உங்களைக் கொல்லக் கூடிய நீசன் இல்லை. இதுவரையிலும் நீங்கள் செய்த தவற்றையெல்லாம் மன்னித்துடறேன். முதலில் அந்த ஜலப் பிரளயத்தை நிறுத்தி விடுங்கள்."

ஸ்டீபன் கடகடவென்று சிரித்தான்.

"நீங்கள் என்னை மன்னிப்பதா? உங்களுக்கு என்ன உரிமை இருக்கு என்ன மன்னிக்கவோ அல்லது தண்டிக்கவோ?" என்று கத்தினான்.

சுதாமாவிடமிருந்த டிடெக்டர் ஏதோ பதிலளித் ததைப் போல கிறீச்சிட்டது.

"என்ன?"

"ஸ்டீபனின் ஆட்கள் ஜியோகார்டில் நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள்." இரண்டாவது ரோபோட்ஸ் சொன்னது.

சுதாமா ஸ்டீபனின் மறுஉருவமாய் மாறிய ரோபோட்சைப் பார்த்தான்.

"ஸ்டீபனின் ஆட்கள் நம்மை நோக்கி வருகிறார் களாம் ஸ்டீபன் சொல்லுவது போல அவங்களுக்கு உததரவு தா"

"சரி சுதாமா" என்ற ரோபோட்ஸ் அவ்வாறு வந்து கொண்டிருந்த மனிதர்களின் மூளை அலைகளில் போய்த் தங்கி, "பின்னுக்குப் போயிடுங்கள். திரும்பிப் போயிடுங்கள்" என்றுக் கத்திற்று.

ஸ்டீபனின் ஆட்கள் நின்றுவிட்டார்கள்.

"நிற்காதீங்க! சுதாமாவை பார்த்துச் சுடுங்கள்" ஸ்டீபன் தன்னிடத்திலிருந்து கத்தினான்.

அவர்கள் உடனே சுட்டார்கள்.

ஆனால் சுதாமனும், ரோபோட்களும் குகைக்குள் இருந்ததால், அந்த லேசர் கிரணம் மலையில் போய் விழுந்தது.

## *15*

*அந்தத் தாக்குதலால் பாறைகள் கருகிப் போய் மலை சரியத் தொடங்கிற்று. கற்கள் உடைந்து உருண் டோடின.*

*சுதாமா ஸ்டீபனின் மறு உருவத்திலிருந்த ரோபோட்சைப் பார்த்தான்.*

*"பலனில்லை. உடனே ஸ்டீபனின் மூளை அலை யைக் கட்டுப்படுத்து"*

*ஸ்டீபன் உருவத்திலிருந்த ரோபோட்ஸ் ஸ்டீ பனின் மூளை இயங்காமல் வயர்லெஸ் பண்ணி விட்டது.*

*பூமிக்கடியிலிருந்த ஸ்டீபனின் மாளிகையில் ஸ்டீபன் தான் உட்கார்ந்திருந்த நாற்காலியில் சமாதி யாய் அமர்ந்து விட்டான். ஸ்டீபனிடமிருந்து உத்தரவு வராததால் எஞ்சியவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஸ்டீபனுக்கு என்னவாயிற்றென்றும் புரியவில்லை. சுதாமா மற்றொரு ரோபோட்சைப் பார்த்து நீ நேராய் ஸ்டீபன் இருக்குமிடத்திற்குப் போ, அங்கு நடப்பவை களை எனக்குப் பிரசாரம் பண்ணு. என் மூளை அலையும் உன் மூளை அலையும் ஒன்றாதலால் நான் பிரசாரம் செய்பவை உனக்கு மட்டுமே தெரியும் எஞ்சியவர்கள் கண்டு பிடிக்க முடியாமல் நான் உன்னைக் கட்டுப்படுத்தி வரேன் போ" என்றான்.*

*சுதாமாவின் மறு உருவத்திலிருந்த ரோபாட்ஸ் கிளம்பிற்று.*

*சமுத்திரக் கட்டிடத்திலிருந்து சிங்காரம் வார்த்தை அனுப்பினான்.*

"*சுதாமா! சமுத்திர நீர் நம் சமுத்திர கட்டிடத்தை நெருங்குகிறது.. இன்னும் இரண்டே நிமிஷங்களில் நெருங்கி விடும்.*"

"*சரி, ஒரு நிமிஷம்*" *ஸ்டீபன் உருவத்திலிருந்த ரோபோட்சை திரையில் அழைத்தான் சுதாமா.*

"*ஸ்டீபன்! ஜலப்ரளயத்தை எப்படித் தடுத்து நிறுத்துவது?*"

"*நான் சொல்ல முடியாது*"

*ஸ்டீபனின் பிளட்பிரஷர் அதிகரித்தது. மார்பு 200க்குத் துடித்தது. நடுங்கினான். மூளை அவன் சுவாதீனத்திலில்லை.*

"*ஜலப் பிரளயத்தை எப்படித் தடுப்பது ஸ்டீபன்?*"

"*சொல்ல முடியாது*"

"*அனாவசியமாய் அழிவாய், பிறகு எதுவுமே நிலைக்காது.*"

"*பரவாயில்லை.. உங்களையெல்லாம் நிர்மூலம் பண்ணிடப் போகிறேன்..*"

"*உன்னால் ஒன்றும் பண்ண முடியாது ஸ்டீபன். அங்கிருப்பவர்கள் எல்லோரும் சுக்கிர கிரகத்திற்குப் போய் விடுவார்கள்.*"

கதாமா லேசர் கிரணத்தை ஸ்டீபனின் உருவிலி ருந்த ரோபோட்சின் கண்களை நோக்கிக் குறி வைத் தான்.

அங்கே ஸ்டீபனின் வேதனை தாங்க முடியாம லிருந்தது.

"சுதாமா, ப்ளீஸ் கிரணத்தை நிறுத்து"

"அப்படியானால் முதலில் சொல்லு, ஜலப்பிரளயத்தை எப்படித் தடுப்பது?"

"தென்துருவத்திற்கருகில் சமுத்திரத்தில் ஒன்றும் வட துருவத்திற்கருகில் ப்பெஞ்சு ஜோசப் லேண்ட் என்ற இடத்தில் ஒன்றும் வைத்திருக்கிறேன்."

"அவைகளை எப்படிக் கட்டுப்படுத்துவது?"

"உப கிரகத்திலிருந்து மேட்டர் லேசர் கிரணத்தை ஒரு வினாடி நேரம் அனுப்புங்கள்"

சுதாமா உடனே இச்செய்தியை உப கிரகத் திலிருந்த விஞ்ஞானிகளுக்குத் தெரிவித்தான்.

அவர்கள் கம்ப்யூட்டர், ரேடார். சோனார் உதவி களுடன் அவ்விடத்திற்கு வந்து லேசர் கிரணத்தை ஒரு வினாடி நேரம் வடதென் துருவங்களுக்கு அனுப்பினார் கள். பெருத்த ஓசையுடன் இரண்டு இயந்திரங்களும் உடைந்தன.

அங்கிருந்து சமுத்திரம் பொங்குவதும் நின்று விட்டது. ஆனால் முன்னோக்கி வந்து கொண்டிருந்த அலைகள் மட்டும் ஓயாமல் வீசிக்கொண்டிருந்தன.

"ஸ்டீபன், அந்த அலைகளை எப்படி நிறுத்து வது?" சுதாமா கேட்டான்.

"ஹீலியம் கியாசை அப்சல்யூட் உஷ்ணத்துக்கு மாற்றி அனுப்பு."

சுதாமா அவர்களுக்கு இதைத் தெரிவிக்க, அவர்கள் அவ்வாறே செய்து அலைகளை ஓயச் செய்தார்கள். தண்ணீர் குளிரத் தொடங்கிற்று.

ஆனால் பூமத்ய ரேகைக்கருகிலிருந்து வந்த வென்னீருக்குப் பணிக்கட்டிகள் உருகி துருவங்களை நோக்கிப் போகத் தொடங்கின.

கீழேயிருந்து பெருக்கெடுத்த சமுத்திரப் பிரவாகம், சமுத்திரக் கட்டிடத்தின் மேல் வந்து தாக்கிற்று. சமுத்திரக் கட்டிடத்தின் தென் பாகம் இடிந்து விழத் தொடங்கிற்று.

சமுத்திரக் கட்டிடத்திலிருந்தவர்கள் சுக்கிரனை நோக்கி ராக்கெட்டில் ஏறிப் போய்விட்டார்கள்.

அங்கே ஸ்டீபன் இருந்த பூமிக்கடியிலிருந்த கட்டிடத்துக்கு வந்து சேர்ந்தது சுதாமா உருவிலிருந்த ரோபாட்ஸ்.

சுதாமா ஸ்டீபனை விசாரித்தான்.

"ஸ்டீபன் என் மகனைக் கொன்றது யார்?"

"சொன்னால் நம்புவாயா சுதாமா?"

"சொல்லு."

"கொன்றது உன் மனைவி.. ஆர்த்தி."

"என்ன..? என் மனைவி ஆர்த்தியா?" சுதாமா ஆச்சரியமடைந்தான்.

"ஆம்"

சுதாமா பொய்யை எடுத்துக் காட்டும் டிடெக் டரைப் பார்த்தான்.

அவன் சொன்னது உண்மைதான் என்றது அது.

இதற்கிடையில் ஸ்டீபனின் நண்பர்களாயிருந்த சில விஞ்ஞானிகள் ஸ்டீபனின் மூளை கட்டுப்படுத்தப் பட்டிருந்ததையும், அதை ரோபட்ஸ் ஒன்று கிரகித்துக் கொண்டிருந்ததையும் தெரிந்து கொண்டார்கள். உடனே ஸ்டீபனின் உருவிலிருந்த ரோபோட்சின் மூளையைக் கட்டுப்படுத்தி விட்டார்கள். சுதாமா ரோபோட்சு இதை உணர்ந்து விட்டது. உடனே இதை சுதாமனுக்குச் சொல்லி விட்டது.

சுதாமனின் மகனுக்கு இன்னும் நினைவு வர வில்லை. டாக்டர்கள் என்ன முயன்றும் பிரயோஜன மில்லை.

ஆர்த்தி மகனின் பிணத்திற்கருகில் உட்கார்ந்திருந் தாள்.

பையன் சொன்ன 333 நம்பர் தவறா? ப்ரொஃபசர் கம்ப்யூட்டரைச் சரியாய் பார்க்காதது தப்பா? இயந் திரங்கள் காட்டியதுதான் தவறா?

மனிதனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டால் அவன் பேசும் பேச்சில் ஒன்றிற்கொன்று சம்பந்தமிராது. கண் முன் காணும் எந்தக் காட்சியையும் மூளைக்கு

சரியாய் எட்டச் செய்ய மாட்டாது மூளை நரம்புகள். காதால் கேட்கும் சப்தங்களைக் கூட சரியாய் கேட்க முடியாது. சருமம், வாய், மூக்குக் கூட சரியாய் வேலை பண்ணாது. அதே மாதிரிதான் கம்ப்யூட்டரில் கூட சிறு தவறு ஏற்பட்டு விட்டால், அது காட்டுபவையெல்லாம் தப்பாகவேதான் இருக்கும்.

ஆனால் கம்ப்யூட்டரில் எந்தத் தவறுமில்லை என்று டிடெக்டர் சொல்லி விட்டதே! அவளுக்கு திடீரென்று ஏதோ நினைவுக்கு வந்தது. தன் மூளையையே பரிசோதித்துக் கொண்டால் என்ன?

டாக்டரை அழைத்துத் தன் மூளையைப் பரிசோதிக்கச் சொன்னாள்.

"உன் மூளை அலை தொந்தரவுக்குள்ளாகிற தும்மா."

"ஏன்?"

"இன்னொரு மூளை அலை உன் மூளையைத் தொந்தரவு படுத்துகிறது"

"அது எங்கிருந்து வருகிறது?"

"ஆறாவது தேசத்திலிருந்து"

"அந்த இடத்தைக் குறிப்பிட்டுக் காட்டுங்கள்"

அவ்விடத்தை கண்டு பிடிக்க இயந்திரம் இயங்க மறுத்தது. எவ்வளவு முயன்றும் அவ்விடத்தை கண்டு பிடிக்கவே முடியவில்லை.

"நம் நாட்டிலேயே நமக்குத் தெரியாமல் நம்மைக் கட்டுப்படுத்தும் இயந்திரத்தை மறைத்து வைத்திருக் கிறார்களா என்ன?" ஆர்த்தி வியந்தாள்.

"அப்படித்தாம்மா தோணுகிறது."

"டாக்டர் எனக்கு ஒரு சின்னச் சந்தேகம்! ராத்திரி பையன் கொலை நிகழ்ந்த போது அந்த அறையில் என்னையும் பையனையும் தவிர வேறு யாருமே இல்லை. கொலை எவ்வாறு நிகழ்ந்ததுன்னு எந்த டிடெக்டராலும் கண்டு பிடிக்கவே முடியவில்லை. ஆனால் நினைவில்லாத மூளையைக் கட்டுப்படுத்திக் கேட்டால் ராத்திரி நிகழ்ந்தது என்னென்னு சொல்லுமோ என்னவோ?" என்றாள் ஆர்த்தி.

இந்த மாதிரி ரிகார்டுகள் அவர்களிடம் நிறைய இருந்தன. மனிதன் விழித்துக் கொண்டிருந்தாலும், உறங்கிக் கொண்டிருந்தாலும் அம் மனிதனின் சுற்றுப் புறத்திலோ அல்லது வேறு எங்கேயோ நிகழ்ந்த நிகழ்ச்சிகளையெல்லாம் மூளையிலுள்ள நினைவு கேந்திரங்கள் குறிப்பெடுத்துக் கொண்டேயிருக்கும். அவற்றிற்கு எலெக்ட்ரோடுடன் மெதுவாய் ஷாக் கொடுத்தால் அந் நிகழ்ச்சி உடனே மூளையிலிருந்து வெளியே வரும்.

"டாக்டர் என் மூளைக்கு எலெக்ட்ரோட் தாருங் கள்"

டாக்டர் அவ்வாறே செய்தார்,

ஆர்த்தி எங்கோ பார்த்த படி நேற்றிரவு நிகழ்ந்தவைகளைச் சொல்லத் தொடங்கினாள்:

"சிறுவன் எனக்கருகில் படுத்திருக்கிறான். எனக்கு நல்ல உறக்கம் வந்து விட்டது. கொஞ்ச நேரத்தில் ஏதோ சப்தம் கேட்டது. கோபம், வெறுப்பு, பகை, எல்லாம் தோன்றின என்னுள். மெதுவாய் எழுந்தேன். கண்ணைத் திறந்தேன். பையன் தூங்கிக் கொண் டிருந்தான். அவனைக் கோபமாய் பார்த்தேன். கோபம் அதிகரித்தது. என் கையால் அவன் கழுத்தைத் திருகினேன். அவன் திணறினான். "அம்மா அம்மா" என்று பரிதாபமாய்க் கத்தினான். என்னை பயந்தவாறு பார்த்தான். கண்களை மலங்க மலங்க விழித்தான். என் கையில் திணறித் தவித்தான். அவ்வளவு தான்! நான் உயிரற்ற பையனைப் பார்த்தேன். அழுகை வரவில்லை. அருவருப்பு, வெறுப்பு, கோபம் இன்னும் தணிய வில்லை. ஆனால் பயம் ஏற்பட்டது. இவ்விஷயம் யாருக்காவது தெரிந்து விட்டால்? தெரியக்கூடாது. ஆனால் இங்கே சுவர்கள் கூடக் காட்சிகளை கிரகித்து விடுமே சுற்று முற்றும் பார்த்தேன். சுவரில் இக் கொலைக் காட்சி விழாமல் கட்டுப்படுத்தி விட்டேன். ஆனால் யாருக்காவது தெரிந்து விட்டால்? முக்கியமாய் ஒட்டகைச் சிவிங்கிப் ப்ரொஃபசருக்குத் தெரிந்து விட்டால் மேலும் ஆபத்து. அந்த ப்ரொஃபசரே பையனைக் கொன்றது போன்று பண்ணி விட்டால்? அவர் நம்பர் என்ன? 0556108 தானே? இல்லை. 05596..

ஆம்! அதற்கடுத்த நம்பர் என்ன? ஆம்.. 333 என்னவோ சரியாய் தெரியவில்லை. யாரோ ஒருத்தர் மேல் போய் விழுந்தால் போதும். நான் கொலை செய்தது போல மட்டும் தெரிந்து விடக்கூடாது.." ஆர்த்தி அதற்குப் பிறகு எதுவுமே பேசவில்லை.

ஆர்த்தியின் வார்த்தைகளைக் கேட்ட டாக்டர் களும் விஞ்ஞானிகளும் ஆச்சரியமடைந்தார்கள். அவள் தலையிலிருந்த எலக்ட்ரோடுகளை எடுத்து விட்டார்கள்

"நீங்களா பையனைக் கொன்றீர்கள்?" டாக்டர்கள் ஆச்சரியமடைந்தவர்களாய்க் கேட்டார்கள்.

ஆர்த்தி ஒன்றும் புரியாதவளாய் அவர்களைப் பார்த்து விழித்தாள்.

"நான்.. நான் என் மகனைக் கொன்றேனா?"

"அப்படித்தானேம்மா சொன்னீங்க? இதப்பாருங்க ரிகார்டு பண்ணியிருக்கோம், கேளுங்க." என்று டாக்டர்கள் போட்டுக் காட்டினார்கள்.

"நான்.. நானா என் குழந்தையைக் கொன்றேன்? இல்லை.. இல்லை, ஏதோ நடந்து விட்டிருக்கிறது. எனக்குத் தெரியாமல் எதோ நடந்து விட்டிருக்கு" ஆர்த்தி முகத்தைக் கைளால் பொத்திக்கொண்டு அழத் தொடங்கினாள்.

"மனந்தளராதீங்கம்மா. கம்ப்யூட்டரில் கேட்டுத் தீர்மானிக்கலாம்." என்ற டாக்டர்கள் டேப்பிலிருந்ததை கம்ப்யூட்டரில் போட்டுக் கேட்டனர்.

"அவள் கொல்லவில்லை?" என்ற பதில் வந்தது.

"பின்னே யார் கொன்றாங்க?"

"வேறொருத்தரின் உணர்ச்சி அலைகள் அவளைத் தூண்டிவிட்டன."

"அது யாருடைய உணர்ச்சி அலைகள்?"

"25..25..25 மைக்ரோ வேவ்."

"25 மைக்ரோவேவ் யாருடையதென்று தெரிந்து கொள்வதற்காக கேஸ் சரிதங்களைப் புரட்டினார்கள்.

அந் நம்பர் யாருடையதும் இல்லை.

"டாக்டர் அவள் சொன்ன வார்த்தைகளை அலசிப் பார்த்தால்.. அந்த வெறுப்பு, கோபம் அரு வருப்பு, பகைமை என்பதெல்லாம் ஆர்த்தியிடம் இல்லாத உணர்ச்சிகள். அந்த மூளை அலை யாருடை யதோ அவங்களுடையதாய்த் தான் இருக்கும்! அந்த மூளைக்குக் கொலை என்றால் என்னவென்று தெரிந் திருக்கும். நமக்கோ கொலை என்றாலே என்னவென்று தெரியாது. அத்துடன் தன்னைப் பற்றியே தெரிந்து விடாமலிருக்க எல்லா இயந்திரங்களையும் கண்ட் ரோல் பண்ணிட்டாங்க. அந்தக் கொலைக் குற்றத்தை வேறொருத்தரின் மேல் தள்ளிவிடணும்னு வாய்க்கு வந்த நம்பரைச் சொல்லிட்டாங்க. முதலில் 0-55-6-108 நம்பரைச் சொல்லிவிட்டு, பிறகு அதில்லை என்று 0-55-6-3.. என்று 3 வரையிலும் சொல்லிட்டு நிறுத் திட்டாங்க. பையனின் உயிர் கூட அந்த மூன்று நம்பரை மட்டும் சொல்லிவிட்டு நிறுத்தி விட்டது. அந்த நம்பரை சுதாமாவுக்கு 333 என்று சொன்னது

அந்த உயிர் சக்திதான்" என்றார் மற்றொரு டாக்டர். சுதாமாவை உடனே தொடர்பு கொண்டாள் ஆர்த்தி.

சுதாமா திரையில் வந்தான்.

அவன் ஸ்டீபனின் நாட்டில் மலைக் குகையிலிருந்து குதித்துக் கொண்டிருந்தான். ஸ்டீபன் தரப்பு விஞ்ஞானிகள் சிலர் சுதாமாவை நோக்கி ராக்கெட்டுகளை அனுப்பிக் கொல்ல முயன்று கொண்டிருந்தார்கள். அதிலிருந்து தப்பிக்கத் தான் அவ்வாறு மலையிலிருந்து குதித்துக் கொண்டிருந்தான்.

ஆர்த்தி இக்காட்சியைக் கண்டு அதிர்ந்து விட்டாள்.

"சுதாமா" என்று கத்தினாள்.

சுதாமா பார்த்தான்.

"அத்தனை ஆபத்தில் சிக்கிண்டிருக்கீங்களே ரோபோட்ஸ் என்னவாச்சு?"

சுதாமா ரோபோட்சைப் பற்றிச் சொல்லவில்லை.

"ஆர்த்தி, இப்பதான் ஸ்டிபன் ஒன்று சொன்னான். பையனை நீதான் கொன்றாயாம்."

"ஆமாம். எனக்கும் இப்பத்தான் சூப்பர் ப்ரெயின் டிராயிங்கில் தெரிந்தது. அதைச் சொல்லத்தான் உங்களைக் கூப்பிட்டேன். இது எப்படி நடந்திருக்கும்?" ஆர்த்தி நாத் தழுதழுக்கக் கேட்டாள்.

"தெரியலை ஆர்த்தி, நம்ப ஆறாவது தேசத்தில் தான் ஏதோ இருக்கு. அதைக் கண்டுபிடிக்க முயற்சி

பண்ணு. அதைத் தெரிந்து கொண்டு விட்டால் ஸ்டீபனைக் கூட அடக்கி விடலாம்."

"சுதாமா.." பூமிக்கடியிலிருந்த கட்டிடத்திலிருந்து சுதாமா ரோபோட்ஸ் குரல் கொடுத்தது.

"என்ன?"

"ஸ்டீபன் லேசர் கிரணங்களை எங்கே உற்பத்தி செய்கிறான்னு தெரிந்துடுத்து. அந்த பிளாண்டை நாசம் பண்ணிடட்டுமா?"

"பண்ணிவிடு." என்றவன், ஆர்த்தியைப் பார்த்து நீ நம் ஆறாம் தேசத்தில் அந்த மூளை அலை எங்கிருந்து வருகிறதுன்னு கண்டு பிடித்து வை ஆர்த்தி" என்றான்.

"சரி"

தன் நாட்டில் பூமிக்கடியிலிருந்து மாக்னாவை எடுத்து விட்டு, அதில் லேசர் கிரணம் இயந்திரத்தை வைத்து இயக்கிக் கொண்டிருந்தான் ஸ்டீபன். அந்த இயந்திரத்திற்கருகில் சுமார் 1000 பேர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஸ்டீபனின் நாட்டைச் சுற்றி லேசர் கிரணங்கள் புகை மண்டல உருவில் மேலே எழும்பி எப்படி விண்வெளிக்குப் போய்க் கொண்டிருந்தனவென்பது திரையின்மேல் நன்றாய்த் தெரிந்தது.

வெளியிலிருந்து எந்த ராக்கெட் வந்தாலும் கண்ணுக்குத் தெரிந்தது. அவற்றைக் குறிபார்த்து லேசர் கிரணங்களால் பொசுக்கித் தள்ளிக் கொண்டிருந்தார்கள்.

சுதாமன் உருவிலிருந்த ரோபாட்ஸ் அந்த இயந் திரத்தைப் பார்த்தது. லேசர் குரணங்களை எந்த இடத்தில் குறி பார்த்துத் தாக்கினால் மொத்தமும் நாச மடையும் என்பதை ஆராய்ந்து கொண்டிருந்தன டிடெக்டர்கள். மெயின் பட்டனைத் தாக்கும் படி எடுத்துக் காட்டிற்று டிடெக்டர்.

லேசர் கிரணம் ஒரு சென்ட்டிமீட்டர் அகலத் திற்கு மெயின் பட்டனின் மேல் வந்து சேர்ந்து கொண்டிருந்தது.

அதைச் சுட்டுப் பொசுக்க வேண்டுமானால் சுமார் பத்து வினாடிகளாவது தேவை.

அதற்குள் அந்த ஆயிரம் பேரில் யாராவது ஒரு வராவது திரும்பப் பார்த்தாலும் போதும், ரோபோ ட்சை சுட்டுப் பொசுக்கி விடுவார்கள்.

சுதாமா ரோபோட்ஸ் லேசர் கிரண பிளாண்ட்டை நோக்கிக் குறி வைத்தது.

லேசர் கிரணம் நீல நிறத்தில் ஸ்விட்சின் மீது வந்து விழுந்து கொண்டிருந்தது. அவர்கள் பின்னால் திரும்பிப் பார்க்காத பொழுதே பிளாண்டின் பக்கத் திலிருந்து மற்றொரு லேசர் கிரணம் வத்து சுதாமா ரோபோட்சின் மேல் விழுந்தது. ரோபோட்ஸ் மெழுகு பொம்மையாய் கருகி போய்விட்டது. அதே சமயம் பிளாண்ட்டும் ரோபோட்ஸ் எய்த லேசர் கிரணத்தால் பெருத்த ஓசையுடன் உடைந்தது.

*அத்துடன் ஸ்டீபன் நாட்டைச் சுற்றியிருந்த மூன்றடுக்கு லேசர் கிரணங்கள் அணைந்து விட்டன.*

*சுதாமனுக்கு ஸ்டீபனின் பூமிக்கடியிலிருந்த கட்டிடத்திலிருந்து செய்தியை அனுப்பிக் கொண்டிருந்த ட்ரான்ஸ் மிட்டரும் போய்விட்டது.*

*சுதாமா உடனே தன் ஆறாம் தேசத்துக்குச் செய்தி அனுப்பினான்.*

"*சிங்காரம்! லேசர் கிரணம் அணைந்துடுத்து. நீ உடனே பத்து ராக்கெட்டுகளையும், மனிதர்களையும், ரோபோட்சுகளையும் அனுப்பிவை.*"

"*சரி*"

## *16*

*சுதாமா மலையடிவாரத்துக்கு வந்தான்.*

*கீழே ஜியோ கார்களில் ஸ்டீபனின் ஆட்கள் அவனைத் தேடிக் கொண்டிருந்தார்கள். சுதாமா ரோபாட்ஸைப் பார்த்தான்.*

"*நீ அவர்களை கவனித்துண்டிரு நான் அந்தப் பக்கமாய் போறேன்.*"

"*சரி சுதாமா*"

*சுதாமா மலையடிவாரத்தை நோக்கி நடந்தான். அவன் எந்தப் பக்கமாய் நடந்தாலும் அந்தப் பக்கமாய் லேசர் கிரனத்தை எய்து கொண்டிருந்தார்கள் ஜியோ கார்களில் வந்து கொண்டிருந்த ஆட்கள்.*

சுதாமா அங்கிருந்த ஒரு கட்டிடத்திற்குள் நுழைந்தான். அவனிடமிருந்த டிடெக்டர் கிறீச்சென்று ஒசை எழுப்பிற்று.

சுதாமா அதனைப் பார்த்தான்.

பூமிக்கடியிலிருந்த கட்டிடம் கீழேயேயிருந்தது. டிடெக்டரைப் பார்த்த படியே கட்டிடத்தின் ஹாலுக் குள் நுழைந்தான்.

ஹாலுக்குள் நூற்றுக்கும் மேற்பட்ட டி.வி. திரைகள் இருந்தன. எல்லாவற்றிற்கும் முன்னால் பலர் உட்கார்ந்திருந்தார்கள்.

திரையில் தன் நாட்டிலிருந்த எல்லாப் பாகங்களும் தென்பட்டன. ஒரு திரையில் தானே தென் பட்டான்.

திடுக்கிட்டு ஒதுங்கி நிற்கலானான்.

அவ்வறையிலிருந்த யாருமே அசையாமல் உட் கார்ந்திருந்தார்கள். அவன் மெதுவாய் வெளியே வந்தான். அவர்களின் மூளையிலிருந்து எந்த உணர்ச் சியும் வெளிப் படவில்லை. அவர்களனைவரும் இறந்து விட்டார்களா? லேசர் பிளாண்ட் பிளந்து விட்டதும் இவர்களின் உயிரும் போய் விட்டிருக்கும்!

இங்குமங்கும் நோட்டமிட்டபடியே ஒரு டி.வி. திரைக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டான். பூமிக் கடியிலிருந்த கட்டிடத்திலிருந்து ஸ்டீபன் தென்பட் டான்.

ஸ்டீபன் விண்வெளியில் ராக்கெட்டுகளில் திரிந்து கொண்டிருந்தவர்களுடன் பேசிக் கொண்டிருந்தான்.

"பரவாயில்லை, சுதாமாவின் நாட்டின் மேல் ஆன்ட்டி மேட்டரை உபயோகியுங்கள். சீக்கிரம்."

சுதாமாவுக்கு பகீரென்றது.

"கொஞ்சம் பொறு ஸ்டீபன்! அவங்க நமக்கு அடங்கா விட்டால் அப்போ உபயோகிக்கலாம்" என்கிறார்கள் ராக்கெட்டிலிருந்தவர்கள்.

"இல்லை, உடனே உபயோகியிங்கள், ஆர்டர்" என்று கத்தினான் ஸ்டீபன்.

சுதாமா இச்செய்தியைத் தன் நாட்டிற்கு அனுப்பி வைத்தான்.

"சிங்காரம் நம் நாட்டின் மேல் ஆன்ட்டி மேட்டரை உபயோகிக்கிறாங்க! அது எந்தப் பக்கத்திலிருந்து எவ்வளவு வரதுன்னு கணக்கிட்டு, அதற்கருகிலுள்ள நம் ஜனங்களுக்குச் செய்தியை அனுப்பு. அந்த ஆன்ட்டி மேட்டர் அல்ஃபா நட்சத்திரத்திற்ககுகில் வந்ததுமே சிதைத்து அனுப்பி விடச் சொல்லு."

"சரி சுதாமா, நீங்க இப்போ எங்கேயிருக்கீங்க?"

சுதாமா சொன்னான்.

"ராக்கெட்டை நேராய் உங்களிடம் அனுப்பி வைக்கிறேன்."

"சரி.. ஸ்டீபனின் புதிய அலை நம் நாட்டில் தான் இருக்கு. அது தெரிந்ததா?

"இல்லை சுதாமா, முயற்சி பண்றோம்."

சுதாமா எழுந்து அடுத்த அறைக்குப் போனான். அதில் சூப்பர் ப்ரெயினின் வரைபடம் இருந்தது. அங்கே பத்துப் உட்கார்ந்திருந்தார்கள், ப்ரெயின் வரை படத்தில் விளக்குகள் எரிந்து அணைந்து கொண் டிருந்தன.

ஒருக்கால் ஸ்டீபனின் இரண்டாவது மூளை அலையைக் கட்டுப்படுத்துபவர்கள் அவர்களாய்த் தான் இருக்க வேண்டும்.

அவர்களுக்குப் பின்னால் போய் நின்று லேசர் பீம் துப்பாக்கியை எடுத்து அவர்களை நோக்கிக் குறி வைத்தான்.

"யாரும் அசையக்கூடாது. எல்லோரும் ஒரு பக்கமாய் வந்து நில்லுங்கள்" என்று கத்தினான் சுதர்மா. எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். அதற்குமேல் பேசமுடியாதவர்களானார்கள்.

"இனிமேல் யார் அசைந்தாலும் சரி, சுட்டுத் தள்ளிடுவேன்" என்று, வரைபடத்திற்கருகில் வந்தான் சுதாமா.

"யாருடையது இந்த மூளை?"

ஒருத்தருமே பேசவில்லை.

"சொல்லா விட்டால் ஒருத்தரையும் விட மாட் டேன்"

அவர்கள் பேசவில்லை. அவர்களை மேலும் பலவந்தப் படுத்தி விசாரிக்க சுதாமனுக்கு நேரமில்லை.

*இது வரையிலும் தான் யாரையுமே கொன்றதில்லை. இப்பொழுது இவர்களைச் சுட்டுப் பொசுக்க மனம் ஒப்பவில்லை.*

"*பாருங்கள்! இத்தனை தூரம் பிரளயத்தை ஏன் உண்டாக்கறீங்க? எத்தனை முன்னேற்றமடைந்திருக் கிறோம்! எல்லாம் சாம்பலாகி விடணுமா? ப்ளீஸ் என்று சுதாமா இவர்களுக்கு உபதேசிக்கலானான்.*

*அவர்களின் மூளை சாந்தமடைந்தது. சொல்லி விட வேண்டும் என்று தோன்றிற்று. அவ்வளவுதான்! எல்லோரும் ஒரேடியடியாய் மின்சாரத்தால் தாக்குண் டவர்களைப் போல் அலறிக் கொண்டே சாய்ந்து விட்டார்கள்.*

*ஸ்டீபன் அவர்களுடைய மூளை அலைகளுக்கு ஷாக் கொடுத்துத் தன் மனிதர்களையே கொன்று விட்டான் போலும்!*

*மூளை வரை படங்களும் பல்புகளும் அணைந்து விட்டன.*

*சுதாமா சட்டென்று அறையிலிருந்து ஓட்ட மெடுத்தான்.*

*சரியாய் அதே சமயம் அவன் நாட்டிலிருந்து ராக்கெட்டுகளில் வந்த ஆயிரம் பேர்களும் சுதாமாவை எதிர் கொண்டார்கள்.*

"*என்னோடு வாங்க*"

*மறுபடியும் எல்லோரும் அவ்வறைக்கு வந்தார்கள்.*

சுதாமா எல்லா ஸ்விட்சுகளையும் அனைத்து விட்டான்.

இங்கிருந்து செய்திகள் அனுப்பும் ட்ரான்ஸ் மிட்டர் எது என்றுத் தேடிப் பார்த்து அதை அனைத்து விட்டு சூப்பர் ப்ரெயின் ஸ்விட்ச்சைப் போட்டான்.

ஒரு ரோபோட்டை ரிவால்விங் சேரில் உட்கார வைத்தான். அதன் தலைக்கு ஒயர்களைப் பிணைத்து சூப்பர் ப்ரெயினுடன் இணைத்து ஸ்விட்ச்சைப் போட் டான்.

ஸ்டீபனின் மூளை வரைந்திருந்த அந்த வரை படத்தில் விளக்குகள் எரியத் தொடங்கின.

"பேசாமலிருங்கள். எப்பொழுதாவது ஸ்டீபன் இந்த ப்ரெயினில் வராமலிருக்க மாட்டான். அப் பொழுது அவனுடைய புதிய அலை தெரிந்து விடும். குறித்துக் கொள்ளுங்கள்" என்றான் சுதாமா.

"சுதாமா! நம் நாட்டில் உள்ள ஸ்டீபனின் மூளை அலை கிடைக்கவில்லை." செய்தியனுப்பினான் சிங் காரம்,

சுதாமா ரிவால்விங் சேரில் அமர்ந்திருந்த ரோபோட்டைக் கேட்டான். "ஏதாவது அதிர்வு, ஓசை வரதா?"

"இல்லை சுதாமா"

ஆறாவது தேசத்தில் ஸ்டீபனின் சார்பில் வேலை பண்ணும் அந்த கண்ணுக்குப் புலப்படாத ஆணின்

மூளை அலையைத் தெரிந்து கொள்ள விரும்பி ஏதோ ஒரு பட்டனை அழுத்தினான்.

சூப்பர் ப்ரெயினுக்குக் கோடியில் ஒரு பல்பு எரிந்தது.

"அது என்ன?" சுதாமா ரோபோட்டைக் கேட்டான்.

"ஸ்டீபன் சிரிக்கிறான் சுதாமா"

சுதாமா வேறு பட்டனை அழுத்தினான்.

இப்பொழுது ஸ்டீபன் சிரிக்கவில்லை.

அப்படியானால் அந்த பட்டனை அழுத்தினால் ஸ்டீபனின் மூளையில் சந்தோஷ அலைகள் தூண்டப் படுகின்றன போலும்!

சுதாமா ரோபோட்டிடம் சொன்னான்.

"அதே பட்டனை அழுத்திண்டிரு. ஸ்டீபன் சிரித்துண்டேயிருப்பான். அவன் எஞ்சியவர்களுக்கு உத்தரவு தருவதை மறந்து போய் சிரித்துண்டிருப்பான், நான் கீழே போகிறேன்" என்று சுதாமா எஞ்சியவர்களை அழைத்துக் கொண்டு கீழே போனான்.

ஸ்டீபன் இருந்த பூமிக்கடியிலிருந்த கட்டிடத்திற்கு லிஃப்டில் இறங்கினான்.

ஒரு பெரிய அறையில் ஸ்டீபன் திரைக்கு முன் அமர்ந்திருந்தான். சுற்றிலும் பலவித இயந்திரங்கள். பல விஞ்ஞானிகளும் ரோபோட்சுகளும் ஸ்டீபனைச் சுற்றி நின்று கொண்டு கடகடவென்று சிரித்துக் கொண்டும், கொஞ்சம் நின்று சந்தோஷமாய் சிரித்துக்

கொண்டிருந்த ஸ்டீபனை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டும் நின்றிருந்தார்கள்.

"சுதாமா! நீங்கள் இந்தப் பக்கமாய் இருங்கள். நாங்கள் போய் அவங்களுடன் கலந்துக்கறோம்" என்றன ரோபாட்சுகள்.

நேராய் ரோபோட்சுகள் அங்கே போய்ச் சேர்ந்ததும் ஸ்டீபன் சிரிப்பது நின்று விட்டது. திரையை உற்று கவனித்துக் கொண்டிருந்தான்.

திரையில் சுதாமனின் நாடு தென்பட்டது. அடுத்த சில வினாடிகளில் ஆறாவது தேசம் நிர்மூலமாகி விடப் போகிறது. அக்காட்சியைப் பார்க்க விரும்பி ஸ்டீபனின் ஆட்கள் திரையைச் சுற்றிக் குழுமியிருந்தார்கள். இன்னொரு திரையில் ஆன்ட்டி மேட்டர் ராக்கெட்டை இயக்கிக் கொண்டிருந்த ஸ்டீபனின் ஆட்கள் தென்பட்டார்கள்.

இனி தாமதிக்கக் கூடாது என்றெண்ணினான் சுதாமா. லேசர் கிரணத்தால் அத்திரையைச் சுட்டுவிட எண்ணினான்.

அங்கே ஆறாவது தேசத்தில் சமுத்திரக் கட்டிடத்திலிருந்து விண்வெளியை பரிசீலித்துக் கொண்டிருந்த சிங்காரம் ஸ்டீபனின் ஆட்கள் ஏவிக்கொண்டிருந்த ராக்கெட்டுகள் எந்த பக்கத்திலிருந்து வருகின்றன என்பதைக் கணக்கிட்டுத் தெரிந்து கொண்ட பின்னர், அல்ஃபா சென்ட்டர் நட்சத்திரத்திற்கு அருகிலிருந்த

விஞ்ஞானிகளுக்கு செய்தியை அனுப்பிக் கொண் டிருந்தான்.

"அவர்கள் ஆன்ட்டி மேட்டர் ராக்கெட்டுகளை ஏவியிருக்கிறார்கள். நீங்கள் உடனே அந்த ராக்கெட் டுகளை நாசம் பண்ணுங்கள்" என்று உத்தரவு அனுப்பினான் சிங்காரம்.

அல்ஃபா நட்சத்திரத்திலிருந்து சுதாமனின் ஆட் கள் ஏவிய ராக்கெட்டுகளை ஸ்டீபன் திரையில் பார்த் தான். அவைகளை இங்கேயிருந்த படியே சுட்டுப் பொசுக்க எண்ணி ஸ்டீபன் ஸ்விட்ச்சை அழுத்தப் போன பொழுது, சுதாமா டி.வி. திரைகளை லேசர் கிரணத்தால் சுட்டுப் பொசுக்கி விட்டான்.

ஸ்டீபன் திரும்பிப் பார்ப்பதற்குள் ரோபோட்சுகள் ஓடிப் போய் அவனைக் கட்டிப் போட்டு விட்டன. ஸ்டீபனின் ஆட்களை சுதாமாவுடன் வந்தவர்கள் கட்டிப் போட்டார்கள்.

சுதாமா ஸ்டீபனின் அறைக்கு வந்தான். அவனை நாற்காலியிலிருந்து எழுப்பி, மேல் கட்டிடத்திலிருந்த சூப்பர் ப்ரெயின் வரைபடம் இருந்த இடத்திற்குத் தள்ளிக் கொண்டே போனான்.

அங்கே ரோபோட் உட்கார்ந்திருந்தது.

"ரோபோட்! இதப்பார் ஸ்டீபனை! இவன் தலைக்கு ஒயர்களை பிணைத்து.. நம் நாட்டிலுள்ள இவ னுடைய மூளை அலையைக் கண்டு பிடி"

ரோபோட் அவனை நாற்காலியில் உட்கார வைத்துத் தலைக்கு ஒயர்களைப் பிணைத்து ஸ்விட்ச்சை போட்டது.

வரை படத்தின் மீதிருந்த கண்ணாடியில் பல்புகள் எரிந்தன.

டி.வி. ஸ்க்ரீனில் யாருடைய படமோ தெரிந்தது.

சுதாமா சட்டென்று சமுத்திரக் கட்டிடத்திலிருந்த சிங்காரத்துடன் தொடர்பு கொண்டான். உடனே ஆறாவது தேசத்திலிருந்த தாத்தாவை அரெஸ்ட் பண்ணும் படி உத்தரவு அனுப்பினான்.

அதற்குள் அவ்வறைக்குள் ஸ்டீபனின் ஆட்கள் வந்து சூழ்ந்து கொண்டார்கள்.

சுதாமாவின் மேல் லேசர் கிரணங்களை ஏவினார் கள்.

சரியாய் அதே சமயத்தில் ரோபாட் அவர்களைப் பார்த்து விட்டு லேசர் கிரணங்களை அவர்கள் மேல் உபயோகித்தது.

அக்கிரணம் இமைக்கும் தேரத்தில் அவர்களனை வரையும் சுட்டுப் பொசுக்கி விட்டது.

ஆனால் அவர்கள் சுதாமாவின் மேல் எய்த லேசர் கிரணம் அவனைத் தாண்டிச் சென்று குப்பர் ப்ரெயின் வரைபடத்தினைத் தாக்கிப் பொசுக்கி விட்டது.

அது பொசுங்கத் தொடங்கவே ஸ்டீபன் சாய்ந்து விட்டான்.

சுதாமா சட்டென்று அவனிடம் ஓடினான்.

அவன் இறக்கவில்லை. நாடியைப் பார்த்தான். நினைவு தப்பி விட்டிருந்தது.

அவனுக்கு விழிப்பு உண்டாக்க விரும்பி அவனை எழுப்பி நிறுத்தினான் சுதாமா.

ஒரு வினாடிக்குப் பிறகு அவனுக்கு நினைவு வந்தது.

சுற்றிலும் பார்வையைச் செலுத்தினான். எதிரே சுதாமா தென்பட்டான்.

"நீங்களா?" ஆச்சரியமடைந்தான் ஸ்டீபன்.

"ஏன் அத்தனை வியப்பு உனக்கு?"

"நீங்க இங்கே எப்போ வந்தீங்க சுதாமா?"

"இத்தனை நேரமாய் இங்கே நடந்த அல்லோல கல்லோலம் எதுவுமே உனக்குத் தெரியாதா?"

ஆச்சரியமடைந்தவனாய் ஸ்டீபன் சுதாமாவை ஏறிட்டு நோக்கினான்.

"அப்படி ஏதுமறியாத அப்பாவியைப் போல பார்க்காதே, உன்னை அரெஸ்ட் பண்ணுகிறோம். நட" என்றான் சுதாமா.

"என்னை.. அரெஸ்ட்டா?"

ஸ்டீபன் யோசிக்கத் தொடங்கினான். ஒவ்வொன் றாய் அவனுக்கு நினைவுக்கு வரத் தொடங்கிற்று.

"நடக்காது. உங்களுக்கென்ன உரிமை இருக்கு என்னை அரெஸ்ட் பண்ன?" வெறிபிடித்தவனைப் போல் கத்தியவாறு ஏதோ பட்டனை அழுத்தினான் ஸ்டீபன்.

அறை முழுவதும் மேகத்திரையால் நிரம்பத் தொடங்கியது.

ஸ்டீபன் மட்டும் தப்பித்துக் கொண்டு போய் விட்டான். சுதாமனின் கவனமெல்லாம் தப்பித்து ஓடிப் போய்க் கொண்டிருந்த ஸ்டீபனின் மேல் இல்லை. தன் மகனைக் கொன்றது தாத்தா என்றால் அவனால் நம்பத்தான் முடியவில்லை. எப்படிக் கொன்றார்? இத்தனை கொடிய யோசனை அவருக்கேன்? எப்படி உதித்தது? இதே யோசனையில் மூழ்கியவாறு இருந்த சுதாமனுக்கு மூளை செயல்பட மறுத்தது.

சுதாமாவின் மனைவி ஆர்த்தி ஆறாம் தேசத்துக் குக் கிளம்பும் முன்னால் நினைவற்றுக் கிடந்த மகனுக்கருகில் வந்தாள். சிறுவனின் மூளையிலிருந்து எந்த விதமான செய்தி வந்தாலும் அதை கம்ப்யூட்டர் குறித்துக்கொண்டது. ஆனால் அதைப் புரிந்து கொள்ள ஒருவராலும் முடியவில்லை.

ஆர்த்தி இரண்டு கார்டுகளை கம்ப்யூட்டரிலிருந்து எடுத்துப் பார்த்தாள்.

"டாக்டர் பையனின் மூளையை ஆறாவது தேசத்தி லிருந்து பிரசாரமாகும் ஏதோ உணர்ச்சி அலை கட்டுப் படுத்துகிறது. அந்த உணர்ச்சி அலை சரியாய் தாத்தா இருக்கும் கட்டிடத்திலிருந்து தான் பிரசாரமாகிறதுன்னு தோணுகிறது."

"அந்தக் கட்டிடத்தில் யார் இருக்காங்கம்மா?"

"தாத்தா இருக்கார்'

"அப்படீன்னால்.. அவருடைய உணர்ச்சி அலைகள் அத்தனை சக்தியை உண்டாக்குகிறதா என்ன?"

"இருக்கலாம்"

"ஆனால், அவர் ஏன் இத்தனை கொடூரமாய் நடந்துக்கணும்?"

"அதுதான் தெரியலை"

"அங்கே அவர் என்ன பண்றார்?"

ஆர்த்தி தாத்தாவின் கட்டிடத்துடன் தொடர்பு கொண்டாள்.

ஆனால் அங்கிருந்து எந்த வார்த்தையும் வரவில்லை.

அவள் ஆச்சரியமடைந்தாள். அவருடைய உணர்ச்சி அலையானது நம் இயந்திரங்களையெல்லாம் வேலை பண்ண முடியாமல் அடக்கி விடுகிறதா என்ன? அதற்கு அத்தனை சக்தியா?

சிங்காரத்துடன் தொடர்பு கொண்டாள். திரையில் வந்தான் அவன்.

"சிங்காரம், கொஞ்ச நேரத்துக்கு முன்னால் நீங்க தாத்தாவின் அறையிலிருந்து தானே வந்தீங்க?"

"ஆமாம்மா"

"அவர் என்ன பண்றார்?

"தூங்கறாரும்மா"

"நீங்க எழுப்பலையா?"

"அவர் எழுப்ப வேண்டாம்னார்."

"சரி, நான் அங்கே போறேன்"

அவள் ஸ்விட்ச்சை அணைத்து விட்டு டாக்டரைப் பார்த்தாள்.

"டாக்டர்! நான் தாத்தா இருக்கும் ஆறாவது தேசத்துக் கட்டிடத்துக்குப் போகிறேன். என் மூளையிலிருந்து அங்கே என்னென்ன பிரசாரம் ஆகிறதோ, அவைகளைக் குறித்துக் கொள்ளுங்கள். எதாவது ஆபத்தான செய்தி பிரசாரமானால் எனக்குத் தெரிவியுங்கள். நானே ஒருக்கால் தாத்தாவின் உணர்ச்சியலைகளுக்கு வசப்பட்டு விட்டால் நீங்கள் உடனே எச்சரிக்கை தாருங்கள்" என்று சொல்வி விட்டு, ஆர்த்தி ஆறாம் தேசத்தை நோக்கிப் புறப்பட்டாள்.

## 17

ஆறாவது தேசத்தில் கோதண்டபாணி உறங்கிக் கொண்டிருந்த கட்டிடத்தை நெருங்க நெருங்க அவளுக்கு ஏதோ ஒரு விதமான சங்கட உணர்ச்சி ஏற்பட்டது. அவள் மனம் முழுவதும் ஏதோ போலாகி விட்டது. தேககத்தின் எந்த பாகமும் தன் வசத்திலில்லாமல் போய் விட்டது.

அவள் என்றுமே அத்தகைய உணர்ச்சிகளுக்கு அடிமையானதில்லை. எதிரில் எது வந்தாலும் அடித்துப் போட்டு விட வேண்டும் போலிருந்தது.

அவள் டாக்டர்களுடன் தொடர்பு கொண்டாள்.

"டாக்டர் என்னுள் ஏதோ.. குழப்பம் உண்டா கிறது. என்னவென்று புரியலை"

டாக்டர்கள் கம்ப்யூட்டர்களைப் பார்த்தார்கள்.

"ஆமாம்மா. உங்களிடம் பொறாமை ஏற்பட்டிருக் கிறது.

"பொறாமை என்றால் இப்படியா இருக்கும்?"

"ஆமாம்மா! அது தோன்றி விட்டால் உங்க மூளையின் அறிவும் கெட்டிக்காரத்தனமும் கூடப் போயிடும்.

"கோபம் என்பது கூட இதானா?"

"ஆமாம்மா! பொறாமையிலிருந்துதான் கோபமும் பிறக்கிறது. எதிரே யார் தென்பட்டாலும் கொன்று போட்டுடணும்னு இருக்கு இல்லே உங்களுக்கு?"

"ஆமாம்."

"அதை உங்களால் அடக்கிக்க முடியாது. கொஞ்சம் உங்க மனதை நிதானப்படுத்துகிறோம்.. இருங்க."

"வேண்டாம் டாக்டர், இந்த கோபம் என்பது இன்னும் என்ன பண்ணும்னு அனுபவ ரீதியாய் பரிசீலித்துக்க விடுங்கள். நான் மேலும் கொடூரமாய் நடந்துக்க முயன்றால் அப்பொழுது எனக்கு நினைவு தப்பி விடும்படி பண்ணிடுங்க."

"சரிதாம்மா! ஆனால் ஜாக்கிரதை நீங்க தாத்தா விடம் போகமுடியுமான்னு.."

"முயற்சி பண்றேன்."

*ஆர்த்தி மெதுவாய் கோதண்டபாணி உறங்கிக் கொண்டிருந்த கட்டிடத்தை நோக்கிச் சென்றாள்.*

*"டாக்டர்! அந்தக் கட்டிடத்தை நோக்கிப் போகப் போக என் கன்ட்ரோல் சக்தி போய்க் கொண்டே இருக்கு.. உடல் நடுங்குகிறது. நிதானமாய் படபடக் கிறது.. டாக்டர்! கொலை பண்ணிடனும்.. கொல்லணும்... கொல்லனும்.." ஆர்த்தி கத்தினாள்.*

*"யாரையம்மா கொல்லப் போகிறாய்"*

*"தெரியவில்லை. ஆனால் கொன்றுடணும்.. கொன்றுடுவேன்.. கொன்றுடு.."*

*அவள் வெறிபிடித்தாற் போல் கத்தியவாறு கட்டிடத்தை நோக்கி ஓடினாள்.*

*கம்ப்யூட்டர்கள் அவளுடைய ஒவ்வொரு அசைவையும் குறித்துக் கொண்டிருந்தன. பிளட் பிரஷர் அதிகரித்துக் கொண்டிருந்தது. மூளையில் அல்ஃபா அலைகள் மேலும் கீழும் தாறுமாறாய் ஏறியிறங்கிக் கொண்டிருந்தன. யோசிக்கும் சக்தி மழுங்கிக் கொண் டிருந்தது. துடிப்பு 200 வரை கூடிற்று. கண் பார்வை மங்கிற்று..*

*மேலும்.. மேலும்..*

*அவள் மூளையில் எழும்பிக் கொண்டிருந்த மாறுதல்களையும் மேனியில் ஏற்பட்ட வக்கிரங் களையும் டாக்டர்கள் இயந்திரங்களின் மூலம் பார்த்து வியந்து கொண்டிருந்தார்கள்.*

"டாக்டர், அவள் பைத்தியம் போல் ஓடுகிறாளே, ஏதாவது ஆபத்து ஏற்பட்டு விடுமோ?" கேட்டார் ஒரு விஞ்ஞானி.

"பரவாயில்லை.. பார்ப்போம்."

"அவளுக்கு ஷாக் தந்து நினைவு தப்பிவிடுமாறு செய்வோமா?" மற்றொரு டாக்டர் கேட்டார்.

"கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போம்."

"அதற்குள் அவளுக்கு ஏதாவது ஆயிட்டால்?"

"ஒன்றுமாகாது. அவள் கட்டிடத்தின் கதவைத் திறக்கும் வரையிலும் ஒன்றும் பண்ணவேண்டாம்."

ஆர்த்தி ஓடிக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் காலடி தரையில் சரியாய் பதியவில்லை. குடிகாரன் தள்ளாடுவதைப் போலத் தாறுமாறாய் ஓடிக் கொண் டிருந்தாள்.

அவள் கட்டிடத்தை நெருங்க நெருங்க அவள் உடல் தன்வசம் இழக்கத் தொடங்கிற்று. மூளை அனுப்பிய கட்டளைகளை அவள் சரீரத்திலுள்ள அவயங்கள் செய்ய மறுத்தன. சரீரம் அனுப்பிய செய்திகளை மூளை சரியாய் வாங்கிக் கொள்ள வில்லை.

டாக்டர்கள் கலவரமடைந்தார்கள். அவள் மூளை அலைகளை இயந்திரங்கள் கணக்கிட முடியவில்லை.

டாக்டர் அவளுக்கு ஷாக் தந்து நினைவு தப்பி விடும்படி செய்வதற்காக பட்டனை அழுத்தப்

போனார். ஆனால் பட்டனை அழுத்த முடியாதவ ரானார்.

ரிகார்டு பண்ணிக் கொண்டிருந்த எல்லா இயந்திரங்களும் ஒரேயடியாய் நின்று விட்டன.

டாக்டர் திரும்பவும் பட்டனை அழுத்தப் போனார்.

சரியாய் அதே சமயத்தில், ஆர்த்தி, கோதண் டபாணி உறங்கிக் கொண்டிருந்த கட்டிடத்தின் கதவு மேல் சரிந்து விட்டாள்.

டாக்டர் ஷாக் தராமலேயே அவளுக்கு நினைவு தப்பிவிட்டது.

ஆனால் வேடிக்கை.. அவளுக்கு நினைவு தப்பிய துமே இயந்திரங்கள் எல்லாம் வேலை பண்ணத் தொடங்கின.

டாக்டர் டிடெக்டர்களையும் கம்ப்யூட்டர் களையும் நோக்கினார்.

"டாக்டர்! அவளுக்கு நினைவு தப்பிடுத்து. ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது போல அவளுடைய மூளை அலையானது சரளமான கோடாய்ப் பரவி வருகிறது. அதென்ன?"

"அவள் மூளையைத் தாத்தாவின் உணர்ச் சியலைகள் முற்றிலும் அடக்கி விட்டன."

"இப்போ என்ன செய்யலாம் டாக்டர்?"

"தாத்தா தூக்கத்தில் என்ன யோசிக்கிறார்னு அவள் மூளை மூலமாய் நமக்குத் தெரியும்."

"அவனைக் கொன்றுவிடு.. அவனைக் கொன் னுடு.. அவனைக் கொன்னுடு.."

ஆர்த்தியின் மூளையில் பிரசாரமாகிக் கொண் டிருந்த உணர்ச்சியலைகளைக் கம்ப்யூட்டர் கிரகித்து எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தது.

கம்ப்யூட்டர் ட்ரான்ஸ்மிட்டரின் மூலமாய் அவளுக்குத் தம் செய்திகளைப் பிரசாரம் பண்ணினார் டாக்டர்.

"யாரைக் கொல்றது?"

"அவனை."

"அதான் யாரை?"

"பையனை."

"எந்தப் பையனை?"

"சுதாமனின் பிள்ளையை."

பூமிக்கடியிலிருந்த கட்டிடத்திலிருந்து ஸ்டீபன் ஓடிப் போனதும் சுதாமா சிங்காரத்தை அழைத்தான்.

"சிங்காரம்! ஸ்டீபன் எங்கே ஓடினான்?"

"சூரியனுக்கு எதிர்த் திசையில் ஓடினான்" ப்ளூட்டோ கிரகத்தைத் தாண்டி நம் இரண்டாவது சூரியனை நோக்கிப் போகிறான்!"

"அவனைத் தொடர்பு கொண்டு திரும்பி வந்துடச் சொல்லு."

"எதுக்கு அவனை இங்கே வரவழைப்பது? ராக் கெட்டை அனுப்பி அவனை நிர்மூலமாக்கிடலாம்.'

"வேண்டாம்"

"இதென்ன சுதாமா? அவன் எவ்வளவு பிரளயங் களை ஏற்படுத்தினான்? அப்படிப்பட்டவனைத் திரும்பவும் வரவழைத்தால் பூமியையே இரண்டாக்கி விடுவான். உத்தாவு தாருங்கள் சுதாமா."

"என் பேச்சைக் கேள்! ஸ்டீபனை உயிரோடு பிடித்துக்கணும். அது அவன் வேலையில்லை. நம் ஆறாம் தேசத்திலிருந்து கோதண்டபாணி தாத்தா தன் னையே அறியாமல் பிரசாரம் பண்ணிக் கொண் டிருக்கும் உணர்ச்சியலைகளுக்குக் கட்டுப் பட்டு இவ்வளவு பிரளயங்களையும் அவன் ஏற்படுத்தியிருக் கிறான்."

"அதனால்தான் அப்படிப்பட்டவங்க இருக்கக் கூடாது சுதாமா"

"என் பேச்சைக் கேளு சிங்காரம்! தாத்தாவின் உணர்ச்சியலைக்கு நாம் யாருமே கட்டுப்படலை. நம் மீது அவை இயங்கவில்லை. ஸ்டீபன் மட்டும் ஏன் கட்டுப் பட்டான்?"

"அவனை உயிரோடு பிடித்துப் பரிசோதனை பண்ணனும். அவன் மூளையில் எந்தப் பாகம் ஏன் ரியாக்ட் ஆனதுன்னு கண்டுபிடிக்கனும்."

அதற்குமேல் சிங்காரம் எதுவும் பேசவில்லை.

ராக்கெட்டில் போய்க் கொண்டிருந்த ஸ்டீ பனைத் தொடர்பு கொண்டு ஸ்டீபன், திரும்பி வந்து

டுங்க, நாங்கள் உன்னைத் தண்டிக்க மாட்டோம். ப்ளீஸ், ராக்கெட்டைத் திருப்புங்கள்."

"மாட்டேன், மாட்டேன், மாட்டேன்" ஸ்டீபன் கத்தினான்.

"உங்களை உயிரோடு பிடித்து வரும்படி எங்களுக்கு உத்தரவு."

ஸ்டீபன் கடகடவென்று சிரித்தான்.

"என்னை உயிரோடு பிடிக்கறதா? அது உங்களால் முடியற காரியமா?"

"அதெல்லாம் அனாவசியம்! நீ திரும்பி வரா விட்டல், நீ எந்த இடத்திற்குப் போனாலும் உன்னால் தப்பித்துக்க முடியாது. ப்ளீஸ், திரும்பி வந்துடு."

சுதாமா இடைப்புகுந்து சொன்னான்.

"சிங்காரம் ஸ்டிபனைப் பிடிக்கும் முயற்சியை விட்டுடு. நம் ஆறாம் தேசத்தில் தூங்கிண்டிருக்கும் தாத்தாவை எழுப்ப முயற்சி பண்ணுங்க. அவர் எழுந்திருந்தால் ஸ்டீபனின் மூளையின் மேல் தாத்தாவின் உணர்ச்சிகள் வேலை பண்ணலாம். அதனால் ஸ்டீபன் நம் பேச்சைக் கேட்டுத் திரும்பி வந்துடலாம்."

சிங்காரம் இச்செய்தி ஆறாம் தேசத்திலிருந்த ரோபோட்டுக்குத் தெரிவித்தான்

ரோபாட் தாத்தாவின் கட்டிடத்தை நெருங்கினான். கதவிற்கருகில் சுதாமாவின் மனைவி ஆர்த்தி நினைவு தப்பி விழுந்து கிடந்ததைக் கண்டான். ரோபோட் அவளை நெருங்கி அவள் மூளையிலிருந்து

பிரசாரமாகிக் கொண்டிருந்த அலைகளை அப்படியே சிங்காரத்திற்கு செய்தி அனுப்பிற்று.

கம்ப்யூட்டர் ஆர்த்தியின் மொழியலைகளை வாங்கி எடுத்துச் சொல்லிற்று.

"போயிடு! போயிடு! போயிடு! திரும்பி வராதே!"

விஞ்ஞானிகளுக்கு ஆர்த்தி பிரசாரம் பண்ணிய வார்த்தைகளுக்கு அர்த்தம் புரிந்தது. தாத்தா உணர்ச்சி அலைகளின் மூலம் ஸ்டிபனைக் கண்ட்ரோல் பண்ணிக் கொண்டிருந்தார் போலும்!

அப்படியானால் ஸ்டீபன்! "போ போ" என்ற தாத்தாவின் உத்தரவைத் தவிர வேறெதையும் கேட்க மாட்டான் போலும். சுதாமனுக்கு இவ்விஷயத்தைத் தெரிவித்துச் செய்தி அனுப்பினான் சிங்காரம்.

சுதாமா ஒரு வினாடி யோசித்தான்.

"வேண்டாம்" என்றான்.

"தாத்தா எழுந்துவிட்டால் அவருடைய உணர்ச் சியலைகள் ஸ்டீபனுக்குப் போய்ச் சேராது. தாத்தா தூங்கும் போது அவருடைய சுயநினைவில்லாத மூளை மிக சக்தியோடு இயங்குகிறது. தாத்தா இருபதாம் நூற்றாண்டிலிருந்து வந்தவர். அந்தக் காலத்தில் அவங்க எத்தனை கொடுமையாய் யோசிப்பாங்கன்னு தாத்தாவின் உணர்ச்சியலைகளைக் கொண்டு இன்னும் ரிகார்டு பண்ணிப்போம். அவைகள் நமக்கு உப யோகப்படும்."

"அப்படீன்னால் இப்போ என்ன பண்ணுவது?"

"தாத்தா உறங்கும் கட்டிடத்திற்கருகில் ஆர்த்தி இருக்கிறாள் இல்லையா? அவள் மூலமாய்த் தாத்தாவின் உணர்ச்சிகளைக் கண்டுபிடியுங்கள்."

"சரி சுதாமா.. ஸ்டீபனின் ஆட்கள் எல்லோரும் அடங்கிப் போயிட்டாங்களா?"

"ஆம்"

"இப்போ நாம் அவர்களை நம் பக்கமாக்கிக் கொண்டு ஸ்டீபனின் நாட்டை வசப்படுத்திக் கொள் வோமா?"

"அவசியமில்லை. இவங்க எல்லோருடைய மூளை அலையும் என் உள்ளங்கையில் இருக்கிறது. நான் சொன்ன படி கேட்பாங்க. சரி, நான் அங்கே வரேன்."

"சரி சுதாமா" என்ற சிங்காரம். நினைவு தப்பி விட்டிருந்த ஆர்த்தியுடன் தொடர்பு கொண்டான்.

"பாரும்மா ஆர்த்தி தாத்தாவின் மூளை அலையில் இந்த வார்த்தையைப் பிரசாரம் பண்ணும்மா."

ஆர்த்தி நினைவில்லாமலிருந்தாலும் ரியாக்ட் ஆனாள்.

"சொல்லு சிங்காரம்"

"ஸ்டீபன்! ராக்கெட்டைத் திருப்பு, திருப்பு, திருப்பு. பூமிக்கு வந்து சேர்" இந்த வார்த்தையைப் பிரசாரம் பண்ணும்மா. நினைவு தப்பிக் கிடந்த ஆர்த்தி இவ் வார்த்தையை தாத்தாவுக்குப் பிரச்சாரம் பண்ணி னாள்.

"தாத்தா! ஸ்டீபனைத் திரும்பி வந்துடச் சொல்லு! திரும்பி பூமிக்கு வந்துடச் சொல்லு! ஸ்டீபன் ராக்கெட்டைத் திரும்பி பூமிக்கு வந்துச் சேரச் சொல்லு" கோதண்டபாணி அவன் பிரசாரத்தினைப் பொருட் படுத்தவில்லை. அவர் ஸ்டீபனுக்குத் தன் வார்த்தை களை அனுப்பிக் கொண்டிருந்தார்.

"ஸ்டீபன்! ராக்கெட்டைத் திருப்பாதே! போயிடு, போயிடு, போயிடு! யார் பேச்சையும் கேட்காதே!"

சிங்காரம் ஆர்த்திக்கு வார்த்தைகளைப் பிரசாரம் பண்ணினான்.

"ஆர்த்தி இன்னும் ஒருமித்த மனதுடன் சொல் லும்மா உன் மனதையெல்லாம் ஒருங்கே கூட்டிண்டு தாத்தாவுக்குச் சொல்லு! ஸ்டீபனின் ராக்கெட்டைத் திருப்புன்னு சொல்லு."

ஆர்த்தி தன் சக்தியையெல்லாம் கூட்டிக்கொண்டு தாத்தாவுக்குப் பிரசாரம் செய்தாள்.

"தாத்தா ஸ்டீபனைத் திரும்பி வரச்சொல்லு, சொல்லு தாத்தா"

கோதண்டபாணியின் மூளை ஆர்த்தியின் வார்த் தைகளை கிரகித்தது. ஆனால் ஸ்டீபனுக்குப் பிரசாரம் பண்ணவில்லை.

"ஸ்டீபன்! போயிடு! போயிடு! போயிடு."

சுதாமா சமுத்திரக் கட்டிடத்திற்கு வந்தான்.

"தாத்தாவின் மூளை ஆர்த்தியின் வார்த்தைகளைப் பிரசாரம் பண்ணுவதற்கு மறுக்கிறது சுதாமா."

*சதாமா தன் மனதை ஒருங்கு கூட்டிக் கொண்டு ஆர்த்திக்குச் செய்தியைப் பிரசாரம் பண்ணினான்.*

"*ஆர்த்தி பிள்ளை பிழைக்கணும்னால் தாத்தா எழுந்திருக்கணும். ஆனால் அவர் எழுந்திருந்தால் ஸ்டீபன் நம் பேச்சைக் கேளாமல் போகலாம். அவன் திரும்பி வர மாட்டான். ப்ளிஸ், இன்னும் பெரிதாய் மனதை ஒருமைப் படுத்திண்டு சொல்லு! ஸ்டீபனின் ராக்கெட்டைத் திருப்பச் சொல்லிச் சொல்லு.*"

"*வேண்டாம், முதலில் குழந்தை பிழைக்கட்டும். தாத்தாவை எழுப்பிடறேன் சுதாமா.*" *என்கிறாள் ஆர்த்தி.*

"*வேண்டாம் ஆர்த்தி வேண்டாம். தாத்தா எழுந்து விட்டால் அவர் உணர்ச்சி அலையானது ஸ்டீபனை இயக்காது. அவர் உறங்கிக் கொண்டேதான் ஸ்டீபனுக்குச் செய்தி அனுப்பனும். ஸ்டீபனைத் திரும்பி வரச்சொல்லு. அவன் திரும்பி வந்த பிறகு தாத்தாவை எழுப்பிக்கலாம்.*"

*ஆர்த்தி ஒரு வினாடி பேசவில்லை.*

"*ஆர்த்தி! ப்ளீஸ்! இது மனித குலம் எல்லோருக்கும் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்னை. நீ பையன் ஒருத்தனை மட்டுமே நினைவில் வைத்துண்டு தாத்தாவை எழுப்பி விட்டால் ஸ்டீபன் நமக்குக் கிட்ட மாட்டான்..*"

"*எனக்கு என் பிள்ளைதான் வேண்டும்*" *ஆர்த்தி கச்சிதமாய்ச் சொல்லிவிட்டாள்.*

"எனக்கு மனிதக்குலம் நசிந்துப் போகாமல் பார்த்துக்கும் பொறுப்பு இருக்கிறது. தாத்தாவுக்குச் செய்தி அனுப்பப் போகிறாயா? மாட்டாயா?" என்றான் சுதாமா.

ஒரு வினாடி மௌனமாயிருந்தாள் ஆர்த்தி.

"சரி சுதாமா" என்று மறுபடியும் கோதண்டபாணிக்குச் செய்தியைத் தெரிவித்தாள்.

கோதண்டபாணி அவள் வார்த்தைக்கு மசியவில்லை. ஸ்டீபனைப் போகச் சொல்லி பிரசாரம் பண்ணிக் கொண்டேயிருந்தார்.

ஆர்த்தி எத்தனை தடவை பிரசாரம் பண்ணியும் அவர் கேட்டுக் கொள்ளவேயில்லை.

ஆத்தியின் மனத்தில் தன் மகன் பிழைக்க வேண்டும் என்ற தவிப்பு இருந்ததால், மனம் முழுவதையும் ஒருங்கிணைத்துக் கொண்டு பிரசாரம் செய்ய முடியாததால்தான், இவ்வாது நிகழ்கிறதோ என்று சந்தேகப் பட்டான் சுதாமா.

"சிங்காரம் இனிப் பிரயோஜனமில்லை. நானே தாத்தாவின் கட்டிடத்திற்குப் போய் இதைப் பிரசாரம் பண்றேன்" என்றான்.

"வேண்டாம் சுதாமா! நீங்களும் ஆர்த்தியைப் போல நினைவு தப்பிவிட்டால் பலன் எதுவுமில்லாமல் போயிடும்."

"நினைவு தப்பிவிட்டால் நீங்க என் மூளையைக் கன்ட்ரோல் செய்யுங்கள்."

"*உங்க மூளையைக் கன்ட்ரோல் பண்றோம். ஆனால் உங்க வார்த்தையைத் தாத்தா கிரகித்துக் கணுமே?*"

*சுதாமா ஒரு வினாடி யோசித்தான்.*

"*அப்படீன்னால் ஒன்று பண்ணுவோம்*"

"*என்ன?*"

"*நம் முன்னோர் விஞ்ஞானிகள் சிலரின் மூளை களை எடுத்து ஜாக்கிரதையாய் வைத்திருக்கிறோம் இல்லையா? அவை எல்லாவற்றையும் ஒரேயடியாய்த் தாத்தாவின் மூளையைக் கண்ட்ரோல் பண்ணச் சொல்லிச் சொல்லச் செய்வோம், எல்லா மூளை அலை களும் ஒரேயடியாய் பிரசாரம் செய்தால் அவைகளின் மொத்த சக்திக்கும் தாத்தாவின் மூளை கட்டுப்படும்.*"

## *18*

"*ரொம்ப நன்றாயிருக்கு. ஆனால் அந்த ப்ரெயின் பவரையும் தாத்தாவின் மேல் உபயோகித்தால்.. அதை கண்ட்ரோல் பண்ணும் சிங்காரமும், ரோபோட்சுகளும், என்னவாகும்? யோசித்துப் பார்த்தாயா?*"

"*ஒரே ஒரு வினாடி அதன் சக்தியை உபயோ கித்துப் பார்ப்போம்*"

"*அந்த வினாடி போதுமே. விண்வெளியில் திரிந்து கொண்டிருக்கும் மனிதர்களும் பூமியிலுள்ள சிங்காரங் களும் நிர்மூலமாகிவிடுவதற்கு! யோசித்துப் பார்.*"

"பரவாயில்லை, முதலில் அவங்களுக்குச் செய்தியை அனுப்பி விட்டுப் பிறகு ப்ரெயின் சக்தியை ஒரேயடியாய் உபயோகிப்போம், வா" என்று, சுதாமா அவனை மூளைகள் இருந்த கட்டிடத்திற்கு அழைத்துச் சென்றான்.

பெரிய ஹாலில், சில லட்சக்கணக்கான மூளைகள் தனித்தனியாய் உலோகப் பெட்டிகளில் பத்திரப் படுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவை பாழாகாமல் இருப்பதற்கு சில ரசாயனத் திரவங்களில் அவற்றை முக்கி வைத்திருந்தனர்.

சுதாமா எல்லாப் பெட்டிக்ளையும் பார்த்தான். மனிதன் உயிரோடிருக்கும்பொழுது அம் மூளைகள் அம் மனிதனின் அங்கங்களுக்கு எந்தவிதமான உத்தரவுகளை அனுப்புமோ தெரியாது. மனிதன் தன் மூளை சொல்லும் வார்த்தைகளைத் தான் கேட்டு நடப்பான். ஆனால் மனித உடல் இறந்து விட்ட பிறகு அம் மூளையின் கட்டளைகளை அடிபணியும் கைகால்களும் வாய் மூக்கு கண் முதலிய அவயங்களும் இராது. ஆனால் மூளை உயிரோடிருப்பதால் உத்தரவுகளைக் கேட்டுக் கீழ்ப்படியும் ரோபோட்சுகள் இருக்கும்.

சுதாமா மூளைகளைக் கன்ட்ரோல் பண்ணும் கம்ப்யூட்டரிடம் போனான். மாஸ்டர் ஸ்விட்சை அழுத்தப் போன பொழுது சிங்காரம் வந்தான்.

"சுதாமா, நீங்களும் ஆலோசிக்கிற சக்தியை இழந்துண்டிருக்கீங்க" என்றான் சிங்காரம்.

சுதாமா சிங்காரத்தைப் பார்த்தான்.

"எப்படிச் சொல்கிறாய்?"

"நீங்கள் யோசிக்கும் ஆலோசனைகள் சீராயில்லை. ஒரு முறை தாத்தாவை எழுப்பச் சொன்னீங்க, அடுத்த முறை வேண்டாம் ஸ்டீபனை வரவழைக்க தாத்தாவின் உணர்ச்சி அலைகளையே உபயோகிக்கறேன்னீங்க."

சுதாமா தலையைப் பிடித்துக்கொண்டான்,

"இப்ப என்ன பண்ணைச் சொல்கிறாய் சிங்கரம்?"

“தாத்தாவை எழுப்புவது ஒன்றும் கஷ்டமில்லை"

"எப்படி?"

"தாத்தா தூங்குகிறார்.. அவ்வளவுதான். பெரிய சப்தம் போட்டால் எழுத்துடுவார்."

சுதாமா ஆச்சரியத்தால் வாயைப் பிளந்தான்.

"நிஜமாகவா?"

"ஆமாம் சுதாமா! நீ இத்தனை லட்சம் ஆண்டு களாய் சாதித்துள்ள விஞ்ஞானத்தினையே மனக் கண்ணில் வைத்துக் கொண்டு, அந்த விஞ்ஞானத்தின் மூலமாகவே அந்த இருபதாம் நூற்றாண்டு தாத்தாவை எழுப்ப நினைக்கிறீங்க. சிம்பிள் காமன்சென்ஸ் இது. சப்தம் போடுங்க.. அவர் எழுந்துடுவார்."

"சப்தம் எப்படிப் போடுவது?"

"இந்தச் சின்ன விஷயத்தை மறந்துட்டீங்களா? உங்க உணர்ச்சி அலைகளின் தத்துவமும் வேண்டாம், மின் அலைகளின் தத்துவமும் வேண்டாம். தாத்தா தூங்கிக் கொண்டிருக்கும் அறைக்கு முன்னால் சின்ன

பட்டாசு ஒன்றைக் கொளுத்துங்க. அந்த சப்தத்துக்கு எழுந்துடுவார்."

"பட்டாசா?"

"ஆம்" சிங்காரம் சிரித்தான்.

"இத்தனை விதவிதமான இயந்திரங்களையும் வித விதமான லேசர் கிரணங்களையும் கண்டு பிடித்தீங்க. வினாடி நேரத்தில் ராக்கெட்டுகளைப் படைத்து விடுறீங்க. சின்ன பட்டாசைப் பற்றி மறந்துட்டீங்க."

"மறக்கலை. ஞாபகத்துக்கு வரலை, அவ்வளவு தான். சிங்காரம், தாத்தா எழுந்துட்டால் ஸ்டீபன் திரும்பி வர மாட்டானே?"

"வருவான். இது ஸ்டீபனுக்கு உதித்த புத்தி இல்லை. தாத்தாவின் உணர்ச்சியலைக்குக் கட்டுப்பட்டு விட்டிருக்கிறான். தாத்தா எழுந்து விட்டால் ஸ்டீபனை நாம் வரவழைத்துடலாம்"

சுதாமா எழுந்திருந்தான்.

தாத்தா இருந்த கட்டிடத்தை நோக்கி நடந்தான்.

கிட்டே நெருங்க நெருங்க அவனுக்குக் குழப்பம் ஏற்பட்டது.

"கட்டிடத்துக்கிட்டே போகாதீங்க சுதாமா. இங்கேயிருந்தே கொளுத்துங்க"

"அது தாத்தாவின் மேல் பட்டால் ஆபத்து இல் லையா?"

"என்ன ஆபத்து?"

"அவர் இறந்துவிட்டால்.. அவர் வம்சத்தில் வந்த இரண்டாயிரத்துத் தலைமுறையாய் நான் எப்படி இங்கே இருக்க முடியும்? அவருக்கு மறுபடியும் இன்னொரு பிறக்கணும். அப்படிப் பிறக்கப் போகும் மகனின் வம்சத்தினைச் சேர்ந்தவன்தான் நான்?"

"நீங்க இப்போ இங்கே இருக்கீங்களா இல்லையா?"

"இருக்கேன்."

"அப்படீன்னால் அவர் இறந்துட்டார்னுதானே அர்த்தம்?"

"ஆமாம்."

"அதனால் நீங்க இப்போது உண்டாக்கும் சப்தம் அவரை ஒன்றும் செய்யாதுன்னு அர்த்தம். அவர் பிழைத்திருந்தால்தானே அவருக்கு இன்னொரு மகன் பிறப்பான் அந்த மகன் பிறந்தால் அவன் வம்சத் திலிருந்து நீங்க வந்தாற்போலத் தானே? அதனால் தாத்தாவுக்கு எந்த ஆபத்தும் நேராது. சப்தம் போடுங்க."

சுதாமா இரண்டடிகள் முன்னோக்கி வைத்தான் கையிலிருந்த கிரெனேட் போன்ற அதைத் தாத்தாவின் கட்டிடத்தை நோக்கி வீசினான். அது கட்டிடத்தின் வாசலுக்குப் போய் உடைந்தது. அது உடைந்ததுதான் தாமதம் கோதண்டபாணி திடுக்கிட்டு விழித்துக் கொண்டார்.

கோதண்டபாணி திடுக்கிட்டு விழித்த அதே நேரத்தில் இரண்டாம் சூரியனைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்த ஸ்டீபனும் ராக்கெட்டில் திடுக் கிட்டான். தான் எங்கு போய்க் கொண்டிருக்கிறோம் என்பது புரியவில்லை. ராக்கெட்டிலிருந்து பார்த்தான். எங்கு பார்த்தாலும் ஒரே நட்சத்திர மயம்!

தான் எங்கிருக்கிறான்? தன் பத்தாம் தேசம் எங்கே?

"ஸ்டீபன்!"

ஸ்டீபன் திடுக்கிட்டான்.

"யார்?"

"நான்தான் சுதாமா"

"நீங்க.., நீங்க எங்கேயிருந்து பேசறீங்க?"

"பூமியிலிருந்து"

"நான் எங்கேயிருக்கேன்?"

"பூமியை விட்டுப் போயிண்டிருக்காய்."

"ஏன்?"

"உனக்கே தெரியலை"

"எனக்கு ஒன்றுமே நினைவுக்கு வரமாட்டேங் குதே."

"ராக்கெட்டைப் பின்னோக்கித் திருப்பிப் பூமிக்கு வா, சொல்றேன்"

ஸ்டீபன் ராக்கெட்டிலிருந்த கம்ப்யூட்டரைப் பரி சோதித்தான். சில கோடிக்கணக்கான மைல்களுக்கப் பால் இருந்தான் அவன்.

இத்தனை தூரம் எதற்காக வந்தோம் என்று புரிய வில்லை அவனுக்கு. ராக்கெட்டைப் பின்னோக்கிப் பூமிக்குத் திருப்பினான்.

கோதண்டபாணி கொட்டாவி விட்டுக்கொண்டு எழுத்திருந்ததுமே, கட்டிடத்தின் வாசலில் விழுந்து கிடந்த ஆர்த்தியும் எழுந்து விட்டாள்.

கலவரத்துடன் சுற்றிலும் நோட்டமிட்டாள்.

"குழந்தை.. குழந்தைக்கு எப்படியிருக்கு?"

"பரவாயில்லை ஆர்த்தி. பிழைத்துட்டான்" என் றான் சுதாமா.

"பிழைத்துட்டானா?'' ஆர்த்தி சட்டென்று பின் னோக்கி ஓடத் தொடங்கினாள்.

சுதாமா அவளைத் தடுத்து நிறுத்தினான். "கொஞ் சம் இரு தாத்தாவுடன் பேசிட்டுப் போகலாம்."

கோதண்டபாணி கொட்டாவி விட்டுக்கொண்டே சுதாமாவையும், ஆர்த்தியையும், ஒட்டகைச்சிவிங்கி ப்ரொஃபசரையும், விஞ்ஞானிகளையும் பார்த்துவிட்டு ஆச்சரியமடைந்தார்.

"ஏன் எல்லோரும் இங்கேயே நின்னுட்டீங்க?"

ஒருவருமே பேசவில்லை.

"என்னடா, என்னை ஏதோ வேடிக்கையான ஜந் துவைப் போல் பார்க்கிறீங்க. நான்தான் தாத்தாடா?"

"ஆமாம், நீதான், இப்படி வா தாத்தா" சுதாமா கூப்பிட்டான்,

கோதண்டபாணி அவனிடம் வந்தார்.

"என்ன?"

"நன்றாய்த் தூக்கம் வந்துதா தாத்தா?"

"ரொம்ப நன்றாய்.. என் வாழ்நாளிலேயே இத்தனை சுகமான தூக்கம் என்றுமே வந்ததில்லை."

சுதாமா ஒரு மாதிரிச் சிரித்தான்.

"ஆமாம் தாத்தா. நீ உன் வாழ்நாளிலேயே இத்தனை. சுகமாய் தன்னை மறந்து என்றுமே தூங்கினதில்லை. ஆனால், அந்தத் தூக்கத்தில் நீ எத்தனை பிரளயங்களைத் தோற்றுவித்து விட்டாய் தெரியமா?"

"பிரளயத்தைத் தோற்றுவித்தேனா?"

"நீ இல்லை. உன் உணர்ச்சிகள் தோற்றுவித்தன?"

"உணர்ச்சி தோற்றுவித்ததா? என்ன சொல்றேடா? சரியாய்ச் சொல்லு."

"வெளியே வா, சொல்றேன்."

சுதாமா சொன்னதைக் கேட்டு திக்பிரமை அடைந்து விட்டார் கோதண்டபாணி, அதிகமாய்ப் போனால் அவர் ஓர் எட்டு மணி நேரந்தான் தூங்கியிருப்பார். அதற்குள் இவ்வளவு பிரளயமா? இந்த உலகப் பிரளயத்துக்கே தான்தான் காரணம் என்கிறானே இவன்! இதை எப்படி நம்புவது?

"நான் நம்பமாட்டேன்" கத்தினார் அவர்.

"நீ நம்பினாலும் நம்பாவிட்டாலும் உன்னால்தான் இத்தனை ஆபத்தும் நேர்ந்தது தாத்தா"

"எப்படி? எப்படிடா நடந்தது? நானோ நல்ல தூக்கத்தில் இருந்திருக்கேன். நான் சுயமாய் வந்து உன் மகனைக் கொல்லச் சொன்னேனா என்ன?"

"நீ சுயமாய் வரலை தாத்தா. வரத் தேவையில்லை. உன் உணர்ச்சி அலைகள் பூதமாய் எழும்பி வந்திருக் கிறது. நீ தூக்கத்தில் என்னென்ன நினைத்துக் கொண் டாயோ அதெல்லாம் இங்கே நிகழ்ந்துவிட்டது."

"அதான் எப்படிங்கறேன். நீங்கள் விஞ்ஞானத்தில் இவ்வளவு புகழ் சாதித்திருக்கீங்க. அந்த உணர்ச்சி யலைகள் இத்தனை கொடூரமாய்ப் பிரசாரமாகிக் கொண்டிருந்தால் உங்கள் விஞ்ஞானத்தால் அதைத் தடுக்க முடியவில்லையா?"

"அதான் தாத்தா வேடிக்கை மனிதன் இத்தனை கொடூரமாய் ஆலோசனை பண்ணுவான்னு எங்களுக் குத் தெரியாது. கோபம் என்றால் என்னவென்றும் தெரியாது" அது தெரிந்திருந்தால் அவைகளை எப்படிக் கட்டுப்படுத்தணும்னு தெரிந்து வைத்திருப்போம்.. அவ்வளவு ஏன் ஒரு வார்த்தை கேட்கிறேன். நிஜத்தைச் சொல்லு."

"என்ன?"

"இப்போ இந்த இரண்டு லட்சத்து வருஷத்தில் நாங்க சாதித்த வெற்றிகளைப் பார்த்தாய். இதைப்பற்றி உன் அபிப்பிராயம் என்ன?"

"சிக்கலான கேள்விதான்! உண்மையில் இந்த வெற்றியைப் பற்றியோ, அல்லது விஞ்ஞானத்தைப்

*பற்றியோ ஒன்றுமே தெரியாது எனக்கு. என் மனுஷங் களானாலும், என்னவோ ரொம்ப சாதித்துட் டாங்களேன்னு உண்மையில் எனக்குக் கொஞ்சம் பொறாமையாய்க்கூட இருந்தது."*

*சுதாமா புன்முறுவல் பூத்தான்.*

*"ஏன் சிரிக்கிறாய்?"*

*"போதும் தாத்தா! எங்கள் மேல் உனக்குப் பொறாமை ஏற்பட்டதுன்னுதானே நினைத்துப் பார்க் கிறாய்?"*

*அடப்பாவி! மறந்துட்டேனே! நான் மனதில் எதை நினைத்துட்டாலும் இவங்க தெரிஞ்சுக்குவாங் கன்னு மறந்துட்டேனே!*

*"டேய் சுதாமா, என் மனதில் எதை நினைத்தாலும் தெரிந்துக்கிறீங்க. அப்படின்னால் எனக்குப் பொறாமை ஏன் ஏற்பட்டதுன்னும் சொல்லேன் பார்ப்போம்!"*

*"பொறாமை ஏற்பட்டது தெரிந்தால்தானே.. அது ஏன் ஏற்பட்டதுன்னும் தெரியும்? சொல்லு தாத்தா, உனக்கு ஏன் இந்த மாதிரி பொறாமை ஏற்பட்டது?"*

*"எனக்கு மட்டும் என்ன தெரியும்? பொறாமை ஏற்பட்டது. அவ்வளவுதான் தெரியும்."*

*"கேவலம் நாங்க சாதித்தது புகழ் ஒன்றுதான். அதை உன்னால் சாதிக்க முடியலையேன்னு ஏற்பட்ட சகிக்க முடியாத தன்மைதானே?"*

*"இருக்கலாம்"*

"ஆனால் நான் உன் சொந்தப் பேரன் தாத்தா? சொந்தப் பேரன் இத்தனை சாதித்திருப்பதைக் கண்டு நீ பெருமைப்படனும்."

"சொந்தப் பேரன் என்கிறாய் நீ. ஆனால் எனக்கு நீ யாருன்னு தெரியாதே."

"நான் சொன்னதில் நம்பிக்கை இல்லையா?"

"எப்படி நம்புவது? நான் அதிகமாய்ப் போனால் என் மகன், அவன் வயிற்றுப் பேரன் இவங்களை மட்டுந்தானே பார்க்க முடியும்? ஆனால் நீயோ ஒரேயடியாய் இரண்டாயிரம் வம்சம் தாண்டிய சந்ததி என்கிறாய்.. அப்படியானால் எனக்கு உன்மேல் பேரன் என்ற உணர்ச்சியோ அன்போ பாசமோ எப்படி ஏற்படும்?"

"அதாவது.. நீ சொந்தக்காரங்களைத் தவிர எஞ்சியவர்களிடம் அன்பு செலுத்த மாட்டாயா?"

"நடக்காத காரியம்"

"ஏன்?"

"அது மனித சுபாவம்"

"நாங்களும் மனிதங்கதான். ஆனால் எங்களுக்கு அந்த மாதிரி எதுவும் இல்லையே?"

"அதை நீங்கதான் சொல்லனும்"

"சரி தாத்தா, இன்னொரு விஷயம்"

"என்ன?"

"உனக்கு ஆர்த்தியின் மேல் எந்தவிதமான அபிப்பிராயம் இருக்கு!"

"ஒன்றுமே இல்லை."

"அப்படீன்னால்?"

"ஒன்றுமில்லை. அவ்வளவுதான்."

"காரணம்னு ஒன்று இருக்க வேண்டுமே?"

கோதண்டபாணி தலையைப் பிய்த்துக் கொண் டார். ஆர்த்தியின் மேல் அவருக்கு எந்தவிதமான உணர்ச்சியும் இல்லை. அவள் அசிங்கமாய்த் தென் படவில்லை. ஆனால் குலம் என்னவோ மதம் என்னவோ..?

"குலம் மதம் என்பதெல்லாம் அப்போதிருந்த மனுஷங்க ஏற்படுத்திண்டது" என்றான் சுதாமா.

"ஆமாம், அது ஏன்னால், மனிதன், ஜாதிகெட்டுப் போகாமலிருப்பதற்காகத்தான்! நியமங்களைக் கொண் டும், கட்டுப்பாடுகளைக் கொண்டும் மனிதன் மனிதனாய் பிழைக்கணும்னுதான்."

"ஆமாம் தாத்தா. ஆனால் நாங்களுந்தானே மனிதர்களாய் வாழ்ந்துண்டிருக்கிறோம்! எங்களுக்குந் தானே சில நியமங்களும் கட்டுப்பாடுகளும் இருக் கின்றன. பின்னே எங்களுக்கில்லாத இந்தப் பொறா மையும் வெறுப்பும் இதெல்லாம் உங்களுக்கு மட்டும் எதற்கு"

என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை அவருக்கு.

"உனக்குப் புரியாது தாத்தா நீங்களே ஏற்படுத்திக் கொண்ட நியமங்களுக்குக் கொடுமையான சில

தத்துவங்களை எடுத்துச் சொல்லிண்டு, உங்களுக்குள் நீங்களே இதை வளர்த்துக் கொண்டு விட்டீங்க. அது எவ்வளவு தீமைகளை உண்டாக்கியிருக்குன்னு நீங்கள் அப்போ புரிந்துக்கலை, ஆனால் இப்போ விஞ்ஞானம் முன்னேறிடுத்து. அந்த உங்கள் பொறாமை இந்த விஞ்ஞானத்தின் மூலம் வெளி பட்டால் எத்தகைய பிரளயத்தைத் தோற்றுவிக்கிறது பார்! அப்பொழுது உங்கள் புராணங்களும் கிரந்தங்களும் மதங்களுமே எடுத்துச் சொல்லிற்று.. உன்னை நீ ஜெயித்துக் கொள் என்று! அதை ஜெயிக்க முடியாத ராவணன், துரியோதனன், ஹிரண்யகசிபு போன்றவர்கள் என்ன வானாங்களென்று உங்கள் புராணமே சொல்லுகிறது. அவைகளை நீங்கள் படித்தும் கூட, இந்தக் கோபதாபங்களை ஜெயிக்க முடியாவிட்டால்.. நீங்கள் மனிதர்களாய் வாழ்வதற்கே தகுதியில்லாதவர்கள்."

"அப்படியானால். என்னைக் கொல்லப் போகி றாயா?"

"அந்த மாதிரி எதுவும் எங்களுக்குத் தெரியாது. இனி நீ இருபதாம் நூற்றாண்டிற்கே போய்விடு."

"என்னடா இது நீ எனக்கு வால்மீகியையும் வியாசரையும் புத்தரையும் காட்டேறேன்னாயே?"

"வேண்டாம், உங்களுக்கு அருகதையில்லை!"

"அப்படின்னால் எனக்கு அந்த மகாத்மாக்களைக் காட்டமாட்டாய்னு சொல்லு"

"காட்டமாட்டேன். போயிடு தாத்தா."

கோதண்டபாணி ஒரு வினாடி ஆலோசித்தார்

"டேய் நான் உன் அதிதிடா, போக முடியாதுன் னால் என்ன பண்ணிடுவாய்?"

"நாங்கள் காலத்தையும் இடத்தையும் ஜெயித் தவங்க உன்னைக் காலத்தில் முன்னோக்கி எப்படி அழைத்து வந்தோமோ அதேபோல, அதே காலத்திற்கு பின்னோக்கி அனுப்பி வைத்து விடவும் வல்லவர்கள்!"

"எங்கே.. அனுப்பு பார்க்கலாம்" என்று சட்டென்று அவனுடைய கையைப் பிடித்துக் கொண் டார். அங்கே நான் போனால் தன்னோடு அவனும் வந்து விடுவான் என்ற எண்னத்தில்

"என் கையைப் பிடித்துப் பலனில்லை தாத்தா. உன்னை ஒரு அங்குலத்தில் லட்சத்தில் ஒரு பாகம் இப்படித் தள்ளி விட்டால் போதும், அங்கே உன் இருபதாம் நூற்றாண்டு இருக்கும். உனக்கு அந்த விஞ்ஞானம் புரியாது. பேச.."

அவன் ஏதோ ஸ்விட்ச்சை அழுத்தினாற் போலிருந் தது. காலம் பின்னோக்கித் திரும்பிற்று.

திரும்பிக் கொண்டேயிருந்தது.

திரும்பிக் கொண்டே..யிருந்தது.

எங்கோ போய்க்கொண்டிருந்தார் அவர்!

எங்கேயோ விழுந்து கொண்டிருந்தார்! நட்சத் திரங்களும், கிரகங்களும். சூரிய சந்திரர்களும், என் னென்னவோ சுற்றுச் சுற்றி வந்து கொண்டிருந்தன.

ஒரு அங்குலத்தில் லட்சத்தில் ஒரு பாகம் இப்படித் தள்ளி விட்டால் இருபதாம் நூற்றாண்டு என்கிறானே!

இரண்டு லட்சம் ஆண்டுகளைப் பினனோக்கிப் போக வேண்டுமானால்..

எங்கே போய் விழுவார்?

கற்காலத்திலா?

தெரியாது.. விழுந்து கொண்டேயிருந்தார்.. விழுந்து.. கொண்டே.. யிருந்தார் கோதண்டபாணி!

முற்றும்


எண்டமூரி வீரேந்திரநாத்
இரும்பு மனிதன்
தமிழில்: சுசீலா கனகதுர்கா